# நாட்டில் 5 ,43 டெங்கு நோயாளர்கள்

(கே. சுபானி)

நாட்டில் இவ்வாண்டில் இதுவரையான காலப்பகுதியில் 63 ஆயிரத்து 549 டெங்கு நோயாளர்கள் அடையாளங் காணப்பட்டுள்ளனர்.

இதேவேளை ஒக்டோபர் 31ஆம் திகதி முதல் நவம்பர் 06ஆம் திகதி வரையான ஒருவார காலப்பகுதிக்குள் மாத்திரம்...

02 ஆம் பக்கம்

Follow us:

வாரவெளியீடு

# தமிழன்

THAMILAN தமிலன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 02, இதழ் : 125 சுபகிருது வருடம், ஐப்பசி மாதம் 27ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை (13.11.2022) ஹிஜ்ரி-1444, ரபிஉல் ஆகிர் - 18, 0115886187 - பக்கங்கள் 18+8+8+8

விலை ரூ.130

## நக்கல் நமசிவாயம்




# ராஜீவ் கொலை வழக்கில் தண்டனை பெற்றோர் விடுதலை

இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் 30 வருடங்களுக்கு மேலாக சிறைத்தண்டனை பெற்றுவந்த நளினி, முருகன், சாந்தன் மற்றும் ரவிச்சந்திரன் உட்பட அறுவரையும் விடுதலை செய்து அந்நாட்டு உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் சிறைத் தண்டனைப் பெற்றுவந்த எழுவருள் ஒருவரான பேரறிவாளனை கடந்த மே மாதம் 18ஆம் திகதி உச்ச நீதிமன்றம் தமது சிறப்பு அதிகாரத்தைப் பயன்படுத்தி விடுதலை செய்தது. அதே சிறப்பு அதிகாரத்தை பயன்படுத்தி நளினி, சாந்தன், முருகன் உட்பட அறுவரையும் விடுதலை செய்து வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தீர்ப்பை நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை உச்ச நீதிமன்றம் வழங்கியுள்ளது.

இதன்படி ராஜீவ் காந்தி கொலை வழக்கில் 30 வருடங்களுக்கும் மேலாக சிறையிலடைக்கப்பட்டு, தண்டனை அனுபவித்த எழுவரும் விடுதலை செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

உச்சநீதிமன்றத்தின் இந்த அதிரடி தீர்ப்பை பா.ம.க நிறுவுனர் ராமதாஸ், நாம் தமிழர் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் சீமான் உட்பட பல அரசியல் தலைவர்கள் வரவேற்றுள்ளனர்.


சென்னை அருகே ஸ்ரீபெரும்புதூரில் கடந்த 1991ஆம் ஆண்டு மே 21ஆம் திகதி நடைபெற்ற தேர்தல் பிரசார கூட்டத்தில் இடம்பெற்ற வெடிகுண்டு தாக்குதலில், பிரசாரத்தில் ஈடுபட்டிருந்த இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொல்லப்பட்டார். அப்போது ராஜீவ் காந்தியுடனிருந்த பொலிஸ் அதிகாரிகள் உட்பட 21 பேர் உயிரிழந்தனர்.

இப்படுகொலை சம்பவத்தில் பேரறிவாளன், நளினி, முருகன், சாந்தன், ரவிச்சந்திரன், ரொபர்ட் பயஸ் மற்றும் ஜெயக்குமார் ஆகிய 7 பேர் கைதுசெய்யப்பட்டு சிறையிலடைக்கப்பட்டனர். அத்தோடு அப்போது விடுதலைப் புலிகள் அமைப்பினர் என சந்தேகிக்கப்பட்ட பலர் கைதுசெய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

02 ஆம் பக்கம்




## 'வெடி'மணியம்



கனடா கனவோடு கப்பலேறிய சுமார் 300 பேர் வியட்நாமில் கைதுசெய்யப்பட்டுள்ளார்கள்.

அவர்களின் "பரிதாப நிலையை" பாக்குறபோது ஒருபக்கம் கவலையாகவும் மறுபக்கம் கோபமாகவும் வருகிறது.

கடந்த ஆறுமாதகாலமாக அவுஸ்திரேலியாவுக்கு படகில் சென்ற 9000 பேர் உடனடியாக திருப்பி அனுப்பப்பட்டார்கள்.

அவுஸ்திரேலிய கடற்படை இவர்களை நேரடியாக கொழும்பில் கொண்டு வந்து இறக்கின செய்திகள் வெளியாகின.

இந்த 9000 ஆக்களும் ஆட்கடத்தல் காரர்களுக்கு செலுத்திய பணத்தின் மொத்தப்பெறுமதி பல மில்லியன் ரூபாக்கள் ஆகும்.

ஆட்கடத்தல்காரர்களில் பலர் மிகப் பெரிய பணக்காரர்களாக ஊரில் சொகுசாக வாழ்கிறார்கள்.

பிரதான ஆட்கடத்தல்காரர்கள் சிலர் வெளிநாடுகளில் வாழ்கிறார்கள்.

இன்று வியட்நாமில் சிக்கியிருக்கும் 300 பேரும் கிட்டத்தட்ட 50 கோடி இலங்கை ரூபாக்களை முற்பணமாக ஆட்கடத்தல்காரர்களுக்கு செலுத்தியிருக்கலாம் என்று சொல்லப்படுகிறது.

அதைவிட மலேசியாவுக்கு விமானம் மூலம் சென்ற இவர்கள் அங்கிருந்து இடம் சொல்லமுடியாத ஒரு நாட்டுக்கு போயிருக்கிறார்கள்.

"கனடாவுக்கு கப்பல் போகுதாம்" எண்ட கதை பல மாதங்களுக்கு முன்னமே ஊரில் கதைக்கத்தொடங்கிவிட்டார்கள்.

அவுஸ்திரேலியாவுக்கு போகும் பாதை மூடப்பட்டதால் ஆட்கடத்தல்காரர்களுக்கு வேறு வழியில் ஏமாற்றவேண்டிய தேவை ஏற்பட்டது.

09 ஆம் பக்கம்

# பதவிக்கால நீடிப்புக்கு ரணில் வியூகம்!

## நாடாளுமன்ற அனுமதியுடன் சர்வசன வாக்கெடுப்புக்கு செல்லவும் ஆராய்வு

(நமது அரசியல் செய்தியாளர்)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, தனது பதவிக்காலத்தை மேலும் சில வருடங்களுக்கு நீடிக்கும் வகையிலான முயற்சிகளை மேற்கொள்வதற்குரிய சட்ட ஏற்பாடுகளை ஆராய்ந்து வருவதாக உயர்மட்ட அரசியல் வட்டாரங்களில் அறியமுடிகின்றது.

இதற்காக அரசியலமைப்பில் சில திருத்தங்களை மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் நாடாளுமன்றில் நிறைவேற்றி , உயர்நீதிமன்றத்தின் அங்கீகாரத்துடன் சர்வசன வாக்கெடுப்புக்கு செல்லவும் ரணில் ஆலோசிப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

நாட்டைக் கட்டியெழுப்பும் ...

02 ஆம் பக்கம்

## கோட்டாவிடம் வாக்குமூலம் பெற நீதிமன்றம் பொலிஸுக்கு உத்தரவு

(நா. தினுஷா)

நாட்டில் இடம்பெற்ற மக்கள் ஆர்ப்பாட்டங்களின்போது, ஜனாதிபதி செயலகத்திலிருந்து மீட்கப்பட்ட ஒரு கோடியே 78 இலட்சம் ரூபா பணம் தொடர்பில், முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளுக்கமைய முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷவிடம் வாக்குமூலம் பெற்றுக்கொள்ளுமாறு நீதிமன்றம்...

02 ஆம் பக்கம்

## புளி வாழைப்பழங்கள் டுபாய்க்கு ஏற்றுமதி

(ம.சுசிகலா)

உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் வாழைப் பழங்களின் முதலாவது தொகுதியை இம்மாத இறுதியில் சர்வதேச சந்தைக்கு ஏற்றுமதிசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

புளி வாழைப்பழங்களின் முதல் தொகுதியை எதிர்வரும் 26ஆம் திகதி டுபாய் சந்தைக்கு ஏற்றுமதிசெய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

02 ஆம் பக்கம்

## மலையக இந்திய வம்சாவளி எமது இனத்தின் அடையாளம்

### விட்டுக்கொடுக்க முடியாதென்கிறார் இராதா எம்.பி.

(நுவரெலியா செய்தியாளர்)

இன்று பலரும் பல கருத்துகளை மலையக மக்கள் தொடர்பாக தெரிவித்து வருகின்றார்கள். நாங்கள் எல்லோரும் இலங்கையர்கள் என்ற கருத்தை முன்வைக்கின்றார்கள். அதனை நானும் ஏற்றுக்கொள்கின்றேன். ஆனால், மலையக இந்திய வம்சாவளி தமிழர்கள் என்ற அடையாளத்தை என்றும் விட்டுக் கொடுக்க முடியாது என மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான...

02 ஆம் பக்கம்

## கிலனுஜி தொழிலாளர்களின் தொடர் போராட்டத்துக்கு தீர்வு

### 14 அம்சக் கோரிக்கைக்கு நிர்வாகம் இணக்கம்

(நோட்டன் பிரிட்ஜ் எம்.கிருஸ்ணா)

மஸ்கெலியா கிலனுஜி (டீசைட்) தொழிலாளர்களின் 14 அம்ச கோரிக்கைகளை தோட்ட நிர்வாகம் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை ஏற்றுக்கொண்டுள்ளது. மஸ்கெலியா பெருந்தோட்ட கம்பனிக்கு எதிராக கடந்த 21 நாட்களாக போராட்டத்தில் ஈடுபட்டு வந்த கிலனுஜி தோட்டத் தொழிலாளர்களுக்கு...

02 ஆம் பக்கம்

## இலங்கை வர்த்தகருக்கு அமெரிக்காவில் தடை

அல்-கொய்தா அமைப்புக்கு நிதிச் சேகரிப்பில் ஈடுபட்டதாகக் குற்றஞ்சுமத்தி இலங்கையை சேர்ந்த வர்த்தகர் ஒருவருக்கு எதிராக பொருளாதாரத் தடைகளை விதிக்க அமெரிக்கா நடவடிக்கை எடுத்துள்ளது.

மொஹமட் இர்ஷாத் மொஹமட் ஹரீஸ் நிசார் என்ற வர்த்தகர் மீதே தடை விதிக்கப்பட்டுள்ளது.

02 ஆம் பக்கம்








இந்தியாவில் காந்திகிராம பல்கலைக்கழகம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நடத்திய பட்டமளிப்பு விழாவில், இசைஞானி இளையராஜாவுக்கு பிரதமர் நரேந்திர மோடி கௌரவ டாக்டர் பட்டம் வழங்கி கௌரவித்தார்.

## பதவிக்கால...

நடவடிக்கைளை மேற்கொள்ளும் தனது செயற்பாடுகளுக்கு இப்போதைய ஜனாதிபதி பதவிக்காலம் தனக்குப் போதாதென்று கருதும் ரணில், அதனை மேலும் சில வருடங்களை நீடிக்க விரும்புவதாக தெரியவருகிறது.

அதற்காக ஜனாதிபதி தேர்தலொன்றை அறிவிக்க வேண்டுமானால் 2023 நவம்பர் வரை அவர் காத்திருக்க வேண்டும். 2023 நவம்பருக்கு மேல் ஜனாதிபதி தேர்தலொன்றை எந்த நேரத்திலும் அறிவிக்கும் சட்ட அதிகாரம் அவருக்கு வரும்.2024 நவம்பர் அளவில் புதிய ஜனாதிபதி தெரிவு செய்யப்படவேண்டும். ஆனால், அதுவரை காத்திராமல் நாடாளுமன்ற பெரும்பான்மையுடன் அரசியலமைப்பினை திருத்தி, சர்வசன வாக்கெடுப்பொன்றுடன் ஜனாதிபதி பதவிக்காலத்தை நீடிப்பது தொடர்பில் ஜனாதிபதி ஆராய்ந்து வருகிறார். இது தொடர்பில் தற்போது சட்ட ஆலோசனைகள் இப்போது பெறப்பட்டு வருகின்றன.

1977 ஆம் ஆண்டில் 5/6 பெரும்பான்மையைத் தான் பெற்றிருந்த நாடாளுமன்றத்தின் ஆயுட்காலத்தை அப்போதைய ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தன நீடிக்க விரும்பினார். அரசியலமைப்புக்கு 4ஆம் திருத்தத்தை முன்வைப்பதனூடாக அவர் இதனைச் செய்ய விழைந்தார். அதற்கு உயர்நீதிமன்றமும் 4 இல் 3 என்ற பெரும்பான்மையில் பச்சை சமிக்ஞையை வழங்கியிருந்த நிலையில், குறித்த அரசியலமைப்பு திருத்தம் நாடாளுமன்றத்தில் விவாதத்துக்கும் வாக்கெடுப்புக்கும் சமர்ப்பிக்கப்பட்டது.

ஜனாதிபதி பதவிக்காலத்தை நீடிக்க சர்வசன வாக்கெடுப்பொன்றை நடத்தி பின்னடைவைச் சந்தித்தாலும் அதனால் தனக்கு பாதிப்பில்லை என்பதால் அந்த முயற்சியில் ரணில் அதிக ஈடுபாடு காட்டுவதாக மேலும் சொல்லப்படுகிறது.

## கோட்டாவிடம்...

பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளது.

கோட்டை நீதவான் நீதிமன்ற நீதவான் திலினி கமகேவினால், கோட்டை பொலிஸாருக்கு இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி நித்திரைகொள்ளும் அறையிலிருந்து கண்டுபிடிக்கப்பட்ட இந்தப் பணம், இலஞ்சமாக அல்லது வேறு ஏதாவது காரணத்துக்காக கிடைக்கப்பெற்றதா என்பது தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்குமாறு ஜனாதிபதி சட்டத்தரணி ரியென்சி அர்சகுலரத்னவினால் முன்வைக்கப்பட்ட கோரிக்கையை கவனத்தில் கொண்டு நீதவான் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

இதன்போது முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மிரிஹானையிலுள்ள வீட்டில் இல்லை என்று பொலிஸாரினால் முன்வைக்கப்பட்ட கருத்தை கருத்தில் கொண்ட நீதவான், அவர் இருக்கும் வீட்டுக்குச் சென்று வாக்குமூலம் பெற்றுக்கொள்ளுமாறும் பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

## இலங்கை வர்த்தகருக்கு...

அமெரிக்க திறைசேரித் திணைக்களம் ஒரு செய்திக்குறிப்பில், அவர் அல்-கொய்தாவின் நிதியாளர் மற்றும் வெளிப்புற செயல்பாட்டுத் திட்டமிடுபவரின் வணிக தொடர்பாளராக அடையாளம் காணப்பட்டதையடுத்து பொருளாதாரத் தடைகள் விதிக்கப்பட்டதாகக் கூறியது.

அவரைத் தவிர, இதே குற்றச்சாட்டின் அடிப்படையில் துருக்கி குடிமகன் முசாப் துர்க்மேன் மீதும் பொருளாதாரத் தடைகளை விதிக்க அந்நாட்டு அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

அல்-கொய்தா நிதியாளர் அஹ்மத் லுக்மான் தாலிபுக்கு ஆதரவாக முசாப் துர்க்மானுடன் வியாபாரம் செய்ததாக முகமது நிசார் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

அமெரிக்க திறைசேரியின் வெளிநாட்டு சொத்துக் கட்டுப்பாட்டு அலுவலகம் முன்னர் அல்-கொய்தாவின் நோக்கங்களை நிறைவேற்ற தனிநபர்கள் மற்றும் பெரிய அளவிலான பணத்தை சர்வதேச பரிமாற்றத்திற்கு வசதி செய்ததாக தாலிப்பை பெயரிட்டது.

நிசார் என்ற மொஹமட் இர்ஷாத் மொஹமட் ஹரிஸ் நிசார் இலங்கையை தளமாகக் கொண்ட தாலிப்பின் வர்த்தகப் பங்காளி என அமெரிக்க திறைசேரி திணைக்களம் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

2018 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில், தாலிப் மற்றும் நிசார் இருவரும் ஒரே வணிகத்தில் கூட்டு முகவர்களாக இருந்தனர். மேலும், நிசார் 2018 இன் பிற்பகுதியிலிருந்து இலங்கையில் தாலிபின் வணிகப் பங்காளியாக இருந்து வருகிறார்.

இலங்கையில் அவர்களது வியாபாரக் கொடுக்கல் வாங்கல்கள் வருடத்திற்கு கிட்டத்தட்ட 200,000 டொலர்கள் இலாபத்தை ஈட்டியதாக திறைசேரி கருவூலத் திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது.

தாலிபின் வருமானத்தின் பெரும்பகுதி அந்த பரிவர்த்தனைகளில் மூன்றில் ஒரு பங்கிலிருந்து வந்தது என்றும் அவர்கள் சுட்டிக்காட்டினர்.

நிசார் தாலிபின் உறவினர் என்றும் அமெரிக்க திறைசேரித் திணைக்களம் கூறியுள்ளது.

நிசார் தாலிபிற்கு பொருள் அல்லது தொழில்நுட்ப ஆதரவு அல்லது பொருட்கள் அல்லது சேவைகளை வழங்கியதாக அவர்கள் தங்கள் அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளனர்.

இதன் விளைவாக, பயங்கரவாத குழுக்களையும் அவர்களின் ஆதரவாளர்களையும் குறிவைக்கும் திருத்தப்பட்ட நிர்வாக ஆணையின் கீழ் (E.O.) 13224 இன் கீழ் நிசார் மற்றும் முசாப் பட்டியலிடப்பட்டதாக அமெரிக்க திறைசேரி தெரிவித்துள்ளது.

பிரேசில், கொலம்பியா, இலங்கை, தான்சானியா, துருக்கி மற்றும் வளைகுடா உட்பட உலகம் முழுவதும் தாலிப் வணிகம் செய்துள்ளார்.

மொஹமட் இர்ஷாத் மொஹமட் ஹரீஸ் நிசார் பேருவளை பிரதேசத்தை வசிப்பிடமாகக் கொண்டவர் என ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

## நாட்டில்...

ஆயிரத்து 114 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக சுகாதார அமைச்சின் தேசிய டெங்கு நோய் கட்டுப்பாட்டுப் பிரிவு அறிவித்துள்ளது.

மேற்குறித்த காலப்பகுதிக்குள் கொழும்பு, கம்பஹா, களுத்துறை மற்றும் கண்டி உள்ளிட்ட 9 மாவட்டங்களில் அதிக எண்ணிக்கையிலான டெங்கு நோயளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், அவை டெங்கு அபாய வலயங்களாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன.

இதுகுறித்து டெங்கு நோய் கட்டுப்பாட்டு பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நாட்டின் ஜனவரி மாதம் முதல் இதுவரையான காலப்பகுதிக்குள் 63 ஆயிரத்து 549 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதன்படி கொழும்பு, கம்பஹா, களுத்துறை மற்றும் கண்டி உள்ளிட்ட 9 மாவட்டங்களில் அதிக எண்ணிக்கையிலான டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

கொழும்பில் 15ஆயிரத்து 127 பேர், கம்பஹா 10 ஆயிரத்து 519பேர், களுத்துறை 5ஆயிரத்து 597பேர், கண்டி 5 ஆயிரத்து 695 பேர், காலி 3 ஆயிரத்து 446 பேர், யாழ்ப்பாணம் 2 ஆயிரத்து 593 பேர், புத்தளம் 2 ஆயிரத்து 542 பேர், இரத்தினபுரி 2 ஆயிரத்து 973 பேர் மற்றும் கேகாலை 2 ஆயிரத்து 564 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதேவேளை, வவுனியா (78பேர்), முல்லைத்தீவு (23பேர்), மன்னார் (193 பேர்), கிளிநொச்சி(113பேர்), அம்பாறை (144பேர்) ஆகிய மாவட்டங்களில் குறைந்த எண்ணிக்கையிலான டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

மேலும், ஒக்டோபர் 31ஆம் திகதி முதல் நவம்பர் 06ஆம் திகதி வரையான காலப் பகுதிக்குள் நாட்டில் 1,114 டெங்கு நோயர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

மேற்குறித்த கொழும்பு, கம்பஹா மற்றும் கண்டி உள்ளிட்ட நாட்டின் 9 மாகாணங்கள் டெங்கு அதி அபாய வலயங்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.

அந்தவகையில் களுத்துறை மாவட்டத்திலேயே மேற்குறித்த ஒரு வாரகாலப்பகுதிக்கு அதிக எண்ணிக்கையிலான நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். களுத்துறையில் 190பேர், கொழும்பில் 190 பேர், களுத்துறையில் 48 பேர் கண்டியில் 123 பேர், காலியில் 65 பேர், யாழ்ப்பாணத்தில் 65 பேர், புத்தளத்தில் 90 பேர், இரத்தினபுரியில் 44 பேர் கேகாலையில் 43 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதேவேளை கடந்த ஒருவார காலப்பகுதிக்குள் கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் டெங்கு நோயளர் ஒருவரேனும் அடையாளம் காணப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. அத்தோடு நுவரெலியா (5 பேர்), மன்னார் (5 பேர்), வவுனியா (ஒருவர்), அம்பாறை (4 பேர்), பொலன்னறுவை (5 பேர்) ஆகிய மாவட்டங்களில் குறைந்த எண்ணிக்கையான டெங்கு நோயளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.






## கிலனுஜி தொழிலாளர்களின்...

தீர்வு பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளது.

தொழிலாளர் தேசிய சங்கம் மற்றும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸும் இணைந்தான ஹட்டன், தொழிலாளர் தொழில் நீதிமன்றில் நேற்று முன்தினம் (11) இடம்பெற்ற பேச்வார்த்தையின்போதே உரிய தீர்வு கிடைத்துள்ளது.

மஸ்கெலியா பெருந்தோட்ட கம்பனிக்குட்பட்ட கிலனுஜி தோட்ட தொழிலாளர்கள் தோட்ட நிர்வாகத்தின் கெடுபிடிகளுக்கு எதிராக வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுவந்தனர்.

இந்நிலையில், தோட்ட நிர்வாகத்துடன் பல சுற்று பேச்சுவார்த்தை இடம்பெற்ற போதும் அது பலனளிக்காத நிலையில் நேற்று முன்தினம் ஹட்டன், தொழிலாளர் தொழில் நீதிமன்றில் பேச்சுவார்த்தை இடம்பெற்றது.

இந்தப் பேச்சுவார்த்தையின்போது தொழிலாளர் தேசிய சங்கத்தின் தொழிற்சங்க உயர்பீட உறுப்பினர்கள், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தொழிற்சங்க உயர்பீட உறுப்பினர்கள், மஸ்கெலியா பெருந்தோட்ட கம்பனி பொது முகாமையாளர், கிலனுஜி தோட்ட முகாமையாளர் மற்றும் அனைத்து தொழிற்சங்க தோட்ட தலைவர்கள் முன்னிலையில் பேச்சுவார்த்தை இடம்பெற்றது.

அங்கு முன்வைக்கப்பட்ட 14 அம்ச கோரிக்கைகள் தோட்ட நிர்வாகத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்டதுடன், கட்டம் கட்டமாக நடைமுறைப்படுவதாக உறுதியளித்துள்ளனர்.

## ராஜீவ் கொலை...

இந்த சம்பவம் தொடர்பாக பேரறிவாளன், நளினி, முருகன், சாந்தன் ஆகியோருக்கு மரண தண்டனை உறுதி செய்யப்பட்டது. ரவிச்சந்திரன், ஜெயக்குமார், ரொபர்ட் பயஸ் ஆகியோருக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது.

இந்நிலையில் உச்ச நீதிமன்றம் கடந்த மே 18ஆம் திகதி சிறப்பு அதிகாரத்தை பயன்படுத்தி பேரறிவாளனை விடுதலை செய்தது.

இதையடுத்து, சிறைத் தண்டனை அனுபவித்து வந்த நளினி, முருகன், ரவிச்சந்திரன், ஹரிகரன், ஆகியோர் தங்களை சிறையிலிருந்து முன்கூட்டியே விடுதலை செய்யக் கோரி மேன்முறையீட்டு மனுக்களை தாக்கல் செய்திருந்தனர்.

இந்த மேன்முறையீட்டு மனுக்கள் உச்சநீதிமன்ற நீதிபதிகள் பி.ஆர்.கவாய், பி.வி.நாகரத்னா ஆகியோர் அடங்கிய அமர்வு விசாரித்த நிலையில் வெள்ளிக்கிழமை தீர்ப்பளித்துள்ளது. நீதிபதிகள் பிறப்பித்த தீர்ப்பில், பேரறிவாளன் வழக்கில் அளிக்கப்பட்ட தீர்ப்பு இந்த வழக்கில் தண்டனை பெற்ற ஆறு பேருக்கும் பொருந்தும் என்று குறிப்பிட்டுள்ளனர்.

ஆறு பேரையும் விடுதலை செய்ய தமிழ்நாடு அரசு பரிந்துரைத்த போதிலும், இந்த வழக்கில் முடிவெடுக்க மத்திய அரசுக்கே அதிகாரமுள்ளது எனத் தெரிவித்து தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவி, ஆறு பேரையும் விடுதலை செய்யவேண்டும் என்ற கோரிக்கை மீது முடிவெடுக்காமல் காலம் தாழ்த்தி வந்த நிலையில், உச்ச நீதிமன்றம் வெள்ளிக்கிழமை இந்த விடுதலை உத்தரவை பிறப்பித்துள்ளது.

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி படுகொலை செய்யப்பட்ட வழக்கில் தமிழக அமைச்சரவை தீர்மானத்தின் மீது ஆளுநர் முடிவெடுப்பதில் தாமதம் செய்ததாகக் கூறி அரசமைப்புச் சட்டத்தின் 142ஆவது பிரிவின் கீழ் தனது சிறப்பு அதிகாரத்தைப் பயன்படுத்தி பேரறிவாளனை விடுதலை செய்ய உச்சநீதிமன்றம் கடந்த மே மாதம் உத்தரவிட்டது.

இதனிடையே, சிறைத் தண்டனை அனுபவித்து வந்த எஞ்சிய அறுவரில் ரவிச்சந்திரன், நளினி ஆகிய இருவரும் தங்களையும் இதே காரணத்திற்காக சிறையிலிருந்து விடுவிக்க வேண்டும் என்று கூறி சென்னை உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தனர். இந்த விவகாரத்தை விசாரித்த உயர்நீதிமன்றம், இதுபோன்று ஏற்கெனவே ஒரு மனு தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் இருப்பதாலும், பேறறிவாளனை உச்சநீதிமன்றம் தனது சிறப்பு அதிகாரத்தைப் பயன்படுத்தி விடுவித்தது போன்ற அதிகாரம் உயர்நீதிமன்றத்திற்கு இல்லை என்றும் கூறி அந்த மனுக்களை தள்ளுபடி செய்து கடந்த ஜூன் 17ஆம் திகதி உத்தரவிட்டிருந்தது.

இதைத் தொடர்ந்து, ரவிச்சந்திரன், எஸ்.நளினி ஆகியோர் தரப்பில் உச்சநீதிமன்றத்தில் மேன்முறையீட்டு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. இந்த மனு கடந்த செப்டெம்பர் 26ஆம் திகதி விசாரணைக்கு வந்தபோது, இந்த விவகாரத்தில் இறுதி விசாரணை மேற்கொள்ளும் வகையில் எதிர்மனுதாரர்களான தமிழக அரசுக்கும், மத்திய அரசுக்கும் பதிலளிக்க நோட்டீஸ் அனுப்புமாறு தெரிவித்திருந்தனர்.

இதைத்தொடர்ந்து தமிழக அரசு தாக்கல் செய்த இரு தனித்தனி பிரமாணப் பத்திரத்தில், ராஜீவ் காந்தி படுகொலை வழக்கில் தண்டனை பெற்ற நளினி ஸ்ரீஹரன், ஆர்.பி.ரவிச்சந்திரன் ஆகியோரின் ஆயுள் தண்டனையை குறைக்கும் வகையில், 2018ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட தமிழக அமைச்சரவையின் ஆலோசனைக்கு ஆளுநர் கட்டுப்பட்டவர் ஆவார்.

அந்தப் பரிந்துரை இறுதியாக ஜனவரி 27 2021இல் தான் இந்திய குடியரசுத் தலைவருக்கு ஆளுநரால் அனுப்பப்பட்டது. அதன் மீது கடந்த ஒருவருட ஒன்றரை ஆண்டுகளுக்கு மேலாக இன்னும் முடிவு செய்யப்படவில்லை என்று பிரமாணப் பத்திரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, ராஜீவ் கொலை வழக்கில் தொடர்புடைய ரொபர்ட் பயஸ், ஜெயக்குமார், சாந்தன் ஆகியோரும் நளினி, ரவிச்சந்திரன் மேன்முறையீட்டு மனுவுடன் தங்களை இடையீட்டு மனுதாரர்களாக சேர்க்கக் கோரியும், பேரறிவாளன் விவகாரத்தில் உச்சநீதிமன்றம் அளித்த தீர்ப்பின்படி தங்களையும் விடுதலை செய்ய உத்தரவிட வேண்டும் எனக் கோரியும் உச்சநீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்திருந்தனர்.

இந்நிலையில், வழக்கை விசாரித்து வந்த உச்ச நீதிமன்ற நீதிபதிகள், ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தண்டனை பெற்று சிறையில் அடைக்கப்பட்டிருக்கும் ஆறு பேருக்கும், பேரறிவாளன் வழக்கில் அளித்த தீர்ப்பு பொருந்தும் என்பதால், அனைவரையும் விடுதலை செய்வதாக தீர்ப்பளித்துள்ளது.

## புளி வாழைப்பழங்கள்...

டுபாய் சந்தைக்கு 12,500 கிலோ புளி வாழைப்பழத்தை விடுவிப்பதற்கான அனைத்து ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சர் தெரிவித்துள்ளார்.

விவசாய மாதிரி தோட்டம் திட்டத்தின் கீழ் ராஜாங்கனை பகுதியில் பயிரிடப்பட்ட வாழைத் தோட்டத்தில் பெறப்பட்ட வாழைப்பழங்களே இவ்வாறு வெளிநாட்டு சந்தைக்கு ஏற்றுமதி செய்யப்படவுள்ளன.

விவசாயத்துறை நவீனமயமாக்கல் திட்டத்தின் கீழ் இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அமைச்சர் மஹிந்த அமரவீர மேலும் தெரிவித்தார்.

இலங்கையில் நிலவும் பொருளாதார நெருக்கடியைத் தடுக்கவும் அந்நிய செலாவணியை ஈட்டும் நோக்கிலும் ராஜாங்கனை புளி வாழைத் திட்டம் 200 ஏக்கர் நிலப்பரப்பில் பயிரிடப்பட்டுள்ளது.

இதேவேளை, டுபாய்க்கு வாராந்தம் புளி வாழைப்பழங்களை ஏற்றுமதி செய்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக விவசாயத் துறை நவீனமயமாக்கல் திட்டத்தின் பணிப்பாளர் கலாநிதி ரொஹான் விஜேகோன் தெரிவித்தார்.

முதல் தொகுதி ஏற்றுமதிசெய்யப்பட்ட பிறகு, ஒவ்வொரு சனிக்கிழமையும் டுபாய் சந்தைக்கு 12,500 கிலோ புளி வாழைப்பழங்களை அனுப்ப ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்றும் ரொஹான் விஜேகோன் கூறினார்.

## மலையக இந்திய...

வேலுசாமி இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

ஹட்டனில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு பேசும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது,

ஒரு சிலருடைய கருத்துகள் மிகவும் விதண்டாவாதமாகவும் குதர்க்கமாகவும் இருக்கின்றன. எங்களுக்கு, அதாவது மலையக மக்களுக்கு பிரச்சினைகளே இல்லை என்பதுபோல பேசுகின்றார்கள். இது மிகவும் தவறான ஒரு விடயமாகும். தயவுசெய்து எங்களுடைய வரலாற்றை நன்றாக தெரிந்து கொண்டு நாம் கருத்துகளை தெரிவிக்க வேண்டும்.

மலையக இந்திய வம்சாவளி தமிழர்கள் என்றுமே தங்களுடைய அடையாளத்தை விட்டுக் கொடுக்க மாட்டார்கள். குறிப்பாக இன்றைய இளைஞர்கள் அனைவரும் மலையக இளைஞர்கள் என்று சொல்லிக் கொள்வதில் அவர்கள் பெருமை கொள்கின்றார்கள். அது எங்களுடைய அடையாளம்.

இந்த நாட்டில் நான்கு சமூகங்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். சிங்களவர்கள், வடகிழக்கு தமிழர்கள், மலையக தமிழர்கள், முஸ்லிம்கள் ஆகியோர் இந்த நாட்டில் இலங்கையர் என்ற ரீதியில் தங்களுடைய அடையாளத்துடன் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

சிங்களவர்கள் வெளிநாடுகளுக்கு சென்றால் தங்களை இலங்கையர்கள் என்று குறிப்பிடுகின்றார்கள். வடகிழக்கு மக்கள் தங்களை இலங்கையின் வடகிழக்கு தமிழர்கள் என்று கூறுகின்றார்கள். அதேபோல மலையக தமிழர்கள் நாங்கள் இலங்கையர்கள், மலையக இந்திய வம்சாவளி தமிழர்கள் என்றே குறிப்பிடுகின்றார்கள். அது எங்களுடைய அடையாளம். அதனை நாங்கள் விட்டுக் கொடுக்க முடியாது.

அண்மையில் இங்கிலாந்தின் பிரதமராக தெரிவு செய்யப்பட்ட ரிஷி சுனக் அவரை இந்திய வம்சாவளியினர் என்றே குறிப்பிடுகின்றார்கள். அவரும் தான் பிரதமராக தெரிவுசெய்யப்பட்டவுடன் இந்து ஆலயத்திற்கு சென்றே முதலில் வழிபட்டார். அதற்கு காரணம் அவர் தன்னுடைய மதம், கலை, கலாசாரம் என்பவற்றை விட்டுக் கொடுக்கவில்லை. ஏனெனில், அவருக்கு பெருமை அதுதான்.

அமெரிக்க உப ஜனாதிபதி கமலா ஹரிஸ் ஓர் இந்திய வம்சாவளியை சேர்ந்தவர். அவரும் அதனை கூறியிருக்கின்றார். அது அவருடைய அடையாளம். அதே போல அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி ஒபாமா ஒரு ஆபிரிக்க பரம்பரையில் வந்தவர் அவரும் அதனை மறைக்கவில்லை. ஏனென்றால், எங்களுடைய அடையாளத்தை நாங்கள் மறைக்க முடியாது.

இப்படி அனைவருமே தங்களுடைய அடையாளத்தை விட்டுக் கொடுத்தவர்கள் அல்ல. இலங்கையின் எல்லாத் துறைகளிலும் பல உச்சங்களை தொட்டவர்கள் மலையக சமூகத்தில் இருக்கின்றார்கள். குறிப்பாக மறைந்த தலைவர் சௌமியமூர்த்தி தொண்டமான், அமரர் அசீஸ், ஜெயா பெரிசுந்தரம், கோ.நடேசய்யர் என இன்னும் பலரை குறிப்பிடலாம். அதே போல இன்று கொழும்பில் வர்த்தகத்துறையில் கொடிகட்டி பறக்கின்ற பலர் இருக்கின்றார்கள்.அவர்கள் அனைவருமே தங்களை மலையக இந்திய வம்சாவளி தமிழர் என்றே குறிப்பிடுகின்றார்கள்.

எனவே, நாங்கள் எங்களுடைய சமூகத்தின் அடையாளத்தை என்றுமே விட்டுக் கொடுக்கவோ எங்களுடைய குறைபாடுகளை நாடாளுமன்றத்திலும் சர்வதேசத்திற்கும் சுட்டிக் காட்டவோ தயங்குவது கோழைத்தனமாகும். வடகிழக்கு தமிழர்கள் தங்களுடைய பிரச்சினைகளை சர்வதேசம் வரை கொண்டு சென்றதன் காரணமாகவே இன்று இலங்கையில் இப்படி ஒரு சமூகம் இருப்பது அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. அது மட்டுமல்லாமல் அவர்களுடைய பிரச்சினையை தீர்ப்பதற்கு சர்வதேசம் தலையிடுகின்ற நிலைமை ஏற்பட்டுள்ளது.

இந்த நிலைமையை நாம் உருவாக்க வேண்டுமாக இருந்தால் நாமும் எம்முடைய பிரச்சினைகளை நாடாளுமன்றத்திலும் சர்வதேசத்திலும் உரத்துக் கூற வேண்டும். அப்படி செய்தால் மாத்திரமே எங்களுடைய குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்படும். அதைவிடுத்து எங்களுக்கு எந்த பிரச்சினையும் இல்லை என்றால் யாரும் எம்மை கண்டு கொள்ளமாட்டார்கள். இதனை புரிந்து செயற்பட வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.



# ஆயிரம் ஏமாற்றங்கள்!

## தொழிலாளர் நலனுக்காக முதலாளிமார் சம்மேளனத்துடன் பேச்சு நடத்துமா தொழிற்சங்கங்கள்?

**நிர்ஷன் இராமானுஜம்**

மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பளப் பிரச்சினை தீராமல் தொடர்ந்த வண்ணமிருக்கிறது. நாளாந்தம் ஆயிரம் ரூபா சம்பளம் வழங்கப்பட வேண்டுமென அரசாங்கம் அறிவித்து உயர் நீதிமன்றமும் அதற்குச் சாதகமான தீர்ப்பை வழங்கியிருந்தது.

எனினும், தொழிலாளர்களுக்கு அந்தச் சம்பளத்தை உரிய முறையில் வழங்குவதற்கு தோட்ட நிர்வாகங்கள் முன்வருவதில்லை என்ற குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகின்றன.

பொருளாதார நெருக்கடி காரணமாக வாழ்க்கைச் செலவு வெகுவாக அதிகரித்துள்ளது. இந்த நிலையில், அண்ணளவாக சுமார் 15 ஆயிரம் ரூபா மாதாந்த சம்பளத்தைப் பெறும் தொழிலாளர்கள் பெரும் பாதிப்பை எதிர்நோக்கியுள்ளார்கள். இதற்குக் காரணம் தோட்டக் கம்பனிகளே என அவர்கள் விரல் சுட்டுவது முதலாளிமார் சம்மேளனத்தைத் தான்.

இவ்வாறானதொரு சூழ்நிலையில், ஆயிரம் ரூபா சம்பளத்தை முதலாளிமார் சம்மேளனம் மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளது. இந்தத் தொகையை நட்டத்தின் மத்தியிலும் வழங்குவதாக அந்தச் சம்மேளனம் தெரிவித்தது.

பெருந்தோட்டக் கம்பனிகள் எதிர்நோக்கும் சவால்கள் மற்றும் தற்போதைய நிலைப்பாடு குறித்து கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் விளக்கமளிக்கப்பட்டது.

முதலாளிமார் சம்மேளனத்தின் புதிய தலைவராக தெரிவுசெய்யப்பட்டுள்ள சேனக அலவத்தேகம பல்வேறு கருத்துகளை இதன்போது முன்வைத்தார்.

2023 ஆம் ஆண்டு தேயிலை உற்பத்தியை அதிகரிப்பதே தமது நோக்கம் என அவர் குறிப்பிட்டார். மேலும், கிளைபோசெட் உரம் தடைசெய்யப்பட்டதன் காரணமாக தேயிலை உற்பத்தியில் வீழ்ச்சி ஏற்பட்டதாகவும் சுட்டிக்காட்டினார்.

முதலாளிமார் சம்மேளனத்தின் தகவல்களின் பிரகாரம் தொழிலாளர்களுக்கு தொடர்ச்சியாக ஆயிரம் ரூபா நாளாந்த சம்பளத்தை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஆயிரம் ரூபா சம்பளம் உள்ளடங்கலாக ஆயிரத்து 709.50 என்ற தொகை நாளாந்தம் செலவாவதாக சுட்டிக்கட்டப்பட்டுள்ளது.

1992 ஆம் ஆண்டு மூன்று இலட்சத்து 27 ஆயிரமாக இருந்த பெருந்தோட்டத் தொழிலாளர்களின் எண்ணிக்கை தற்போது ஒரு இலட்சத்து 20 ஆயிரமாக குறைவடைந்துள்ளதாக முதலாளிமார் சம்மேளனத்தின் பேச்சாளர் ரொஷான் ராஜதுரை தெரிவித்தார்.

"உற்பத்தித் திறனை அதிகரிப்பதன் ஊடாக தேயிலைத்துறையில் ஆரோக்கியமான மாற்றத்தைக் கொண்டு வர முடியும் என நாம் நம்புகிறோம். வெளிவாரி உற்பத்தி முறைமை இதற்கு சிறந்ததாகும். இதனையே நாம் முன்கொண்டு செல்வதற்கு முயற்சிகளை மேற்கொள்கிறோம்.

இலங்கையைப் பொறுத்தவரையில் 74 வீதமான தேயிலை சிறுதோட்ட உரிமையாளர்களால் உற்பத்திசெய்யப்படுகிறது. அவர்கள் அதில் வெற்றி கண்டிருக்கிறார்கள். அவ்வாறானதொரு முறைமையே பெருந்தோட்டத்துறைக்கும் அவசியமாகும். அதனூடாக தொழிலாளர்கள் அதிக சம்பளத்தையும் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கும்" - என்று அவர் குறிப்பிட்டார்.

அங்கு 'தமிழன்' ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளையும் அதற்கு ரொஷான் ராஜதுரை அளித்த பதில்களையும் இங்கே தருகிறோம்.

**Q வெளியார் உற்பத்தி முறைமை குறித்து பேசுகிறீர்கள். கூட்டு ஒப்பந்தம் இருக்கும்போது கடந்த ஆறு வருடங்களுக்கு முன்பே இது குறித்து முன்மொழியப்பட்டது. எனினும், அது சாத்தியமான முறையில் நடைமுறைப்படுத்தப் படவில்லை. இப்போது மீண்டும் அதனைப் பற்றி பேசுகிறீர்கள். இந்தத் திட்டம் இதுவரை நடைமுறைப்படுத்தாமைக்கு உள்ள தடைகள் என்ன?**



முதலாளிமார் சம்மேளனத்தின் பேச்சாளர் ரொஷான் ராஜதுரை

> இலங்கை ரூபாவுக்கு நிகரான டொலரின் பெறுமதி அதிகரிப்பு காரணமாக தேயிலை ஏற்றுமதி வருமானம் உயர்வடைந்துள்ளது. ஆயினும், உற்பத்திச் செலவை ஈடுசெய்ய முடியவில்லையெனக் கூறுகிறது முதலாளிமார் சம்மேளனம்.

வெளியார் உற்பத்தி முறைமை குறித்து நாம் அடிக்கடி பேசி வருகிறோம். ஆனால், ஒரு சில காரணங்களுக்காக பெரும்பாலான தோட்டங்களில் அதனை நடைமுறைப்படுத்த முடியவில்லை. இருந்தபோதிலும், அந்தத் திட்டம் நடைமுறையில் உள்ள தோட்டங்களில் வெற்றியளித்துள்ளது. தொழிலாளர்கள் ஆகக்கூடிய சம்பளத்தையும் பெறுகிறார்கள்.

**Q அவ்வாறெனின் தொழிற்சங்கங்கள் தடையாக இருக்கின்றன என்கிறீர்களா?**

தொழிற்சங்கங்கள் அரசியல் செய்வதால் ஒரு சில தோட்டங்களில் எமது நிலைப்பாடு தவறான தோரணையில் தொழிலாளர்கள் மத்தியில் கொண்டுசெல்லப்படுகிறது.

**Q தேயிலைத் தோட்டங்களில் தொடர்ச்சியாக நீங்கள் எதிர்பார்க்கும் அளவு கொழுந்து பறிக்க முடியாது. ஆகையால் நிர்வாகங்கள் கட்டுப்பாடுகள் பலவற்றை விதிக்கின்றன. இதனால் தொழிலாளர்கள் பாதிக்கப்படுகின்றார்கள் அல்லவா?**

எல்லா விவசாயத்துறைகளிலும் இந்த நிலைமை உண்டு. காலநிலைக்கு ஏற்றபடியே விளைச்சலையும் பெறக்கூடியதாக இருக்கும். நாம் இயலுமானவரை தொழிலாளர்களின் நலன்கருதியே செயற்படுகிறோம்.

**Q ஒரு சில தோட்டங்களில் தீபாவளி முற்பணம் வழங்குவதற்கு பல்வேறு கெடுபிடிகள் விதிக்கப்பட்டனவே?**

தொழிலுக்கு சமுகமளிக்காத ஒருவருக்கு எந்த உத்தரவாதமும் இல்லாமல் முற்கொடுப்பனவு வழங்க முடியாதல்லவா? அதனால்தான் 75 வீத வரவைக் கொண்டவர்களுக்கு மாத்திரம் முழுமையான முற்கொடுப்பனவு தொகையை வழங்கத் தீர்மானித்தோம்.

### முதலாளிமார் சம்மேளனத்திலிருந்து பெறப்பட்ட சில தகவல்கள்

- பெருந்தோட்டங்களில் 1,35,000 தொழிலாளர்கள் தொழில் புரிகின்றனர்.
- 1992 இல் தொழிலாளர் எண்ணிக்கை 3,27,000 ஆகும்.
- 13 மாவட்டங்களில் 453 தோட்டங்கள்.
- பிரசவத்தின்போது கர்ப்பிணிகளுக்கு கொடுப்பனவுடன் கூடிய 03 மாதகால விடுமுறை.
- சிறுவர் பராமரிப்பு, மருந்துகள், ஊசி, விற்றமின்கள் இலவசமாக வழங்கப்படுகின்றன.
- 61 வைத்தியசாலைகள், 323 மருந்தகங்கள், 1,474 சிறுவர் அபிவிருத்தி நிலையங்கள் நிர்வகிக்கப்படுகின்றன.
- முன்மொழியப்பட்ட சம்பளம் (நாளாந்தம்) ரூ.1,000
- நேரடி செலவினம் (நாளாந்தம்) – ரூ. 1,709.50
- நேரடி, மறைமுக செலவினம் (நாளாந்தம்) - ரூ. 1,757.99




**Q நுவரெலியா மாவட்டத்தில் பல்வேறு தோட்டங்களில் குறிப்பாக ட்ரைட்டன், டெவோன், சென். கிளையார், சென். என்ரூ, மவுன்டன், லிந்துலை, டெரிக்கிளயார் ஆகியவற்றில் தீபாவளி முற்பணம் வழங்குவதற்கு மின் கட்டணப் பட்டியல் கோரப்பட்டுள்ளது. ஏன் இவ்வாறான நெருக்கடிகளை தொழிலாளர்களுக்கு வழங்க வேண்டும்?**

இல்லை. அவ்வாறு கோரவில்லை. அப்படியொரு முறைப்பாடு கிடைக்கப்பெற்றால் நிச்சயமாக நாம் அது குறித்து ஆராய்வோம்.

**Q மஸ்கெலியா பெருந்தோட்ட நிறுவனத்துக்குக் கீழ் உள்ள தோட்டங்களில் தொழிலாளர்களுக்கு மதிய உணவு வழங்கப்படுகின்றது. இக்கட்டான பொருளாதார சூழ்நிலையில் ஏனைய கம்பனிகளும் இந்த நடைமுறையை பின்பற்றலாம் அல்லவா?**

தொழிலாளர் நலன்சார்ந்த திட்டங்கள் ஒவ்வொரு தோட்டத்திலும் வெவ்வேறு விதமாக முன்னெடுக்கப்படுகின்றன. அந்தந்த தோட்ட நிர்வாகங்கள் அது குறித்து தீர்மானம் மேற்கொள்கின்றன என்றார்.

பெருந்தோட்டத் தொழிலாளர்களைப் பொறுத்தவரை, ஆயிரம் ரூபா நாளாந்த சம்பள அதிகரிப்பு அறிவிக்கப்பட்டதன் பின்னர் நிர்வாகத்தினால் முறையாக தொழில் வழங்கப்படுவதில்லை.

உண்மையில் ஐந்து வருடங்களுக்கு முன்னரே ஆயிரம் ரூபா சம்பள அதிகரிப்பு கோரிக்கை முன்வைக்கப்பட்டது. ஆயினும், 2023 ஆம் ஆண்டுக்கும் ஆயிரம் ரூபாவையே தருவதற்கு முதலாளிமார் சம்மேளனம் தீர்மானித்துள்ளது.

பொருளாதார நெருக்கடி, வாழ்க்கைச் சுமை, பொருட்கள், சேவைகளின் விலை அதிகரிப்பு ஆகியவற்றால் பெருந்தோட்ட மக்கள் அதிகம் பாதிக்கப்படுகிறார்கள். இந்த நிலையில், மாதாந்தம் 15 முதல் 20 நாட்கள் மாத்திரமே நிர்வாகத்தினால் தொழில் வழங்கப்படுகிறது. அதிலும் குறிப்பாக 18 கிலோ கிராமுக்கும் அதிகமான எடையில் கொழுந்து பறிக்கப்பட வேண்டும் என வலியுறுத்தப்படுகிறது.

இந்தப் பின்னணியில், கழிவுகள் உள்ளடங்கலாக 15 ஆயிரம் ரூபாவுக்கும் குறைவான தொகையையே தொழிலாளர்கள் மாத சம்பளமாக பெற்றுக்கொள்கின்றனர்.

இலங்கை ரூபாவுக்கு நிகரான டொலரின் பெறுமதி அதிகரிப்பு காரணமாக தேயிலை ஏற்றுமதி வருமானம் அதிகரித்துள்ளது. ஆயினும், உற்பத்திச் செலவை ஈடுசெய்ய முடியவில்லையெனக் கூறுகிறது முதலாளிமார் சம்மேளனம்.

> மலையகத்தில் தொழிலாளர்கள் நலன்சார்ந்து இயங்குவதாகக் கூறும் தொழிற்சங்கங்கள் அனைத்தும் அரசியலை மையப்படுத்தியே செயற்படுகின்றன. அரசியலில் தமது இருப்பை தக்கவைத்துக் கொள்ளும் எண்ணம்தான் அவர்களிடையே மேலோங்கிக் காணப்படுகிறது.

"கிளைபோசெட் உரம் மீதான தடை காரணமாக தேயிலை உற்பத்தியில் கணிசமான அளவு வீழ்ச்சி ஏற்பட்டது. இன்னும் ஓரிரு மாதங்களில் அந்த உரம் கிடைக்கும் என எதிர்பார்க்கிறோம். எனினும், அதன் விலையும் அதிகரித்துள்ளது" என்கிறார் முதலாளிமார் சம்மேளனத்தின் புதிய தலைவர் சேனக அலவத்தேகம.

எதிர்வரும் 2023ஆம் ஆண்டு 300 மில்லியன் கிலோ கிராம் தேயிலை உற்பத்தியை எதிர்பார்ப்பதாகவும் அதற்கான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

உற்பத்தி அதிகரிக்கப்படுவதற்கு தொழிலாளர்களிடமிருந்து வினைத்திறனை எதிர்பார்க்கும் முதலாளிமார் சம்மேளனம், சம்பளத் தொகையை மாத்திரம் ஒரு கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பது கவலைக்குரியது.

திடீரென ஆயிரம் ரூபா சம்பள அதிகரிப்பு வழங்கியதால் நட்டம் ஏற்பட்டதாக சுட்டிக்காட்டப்பட்டாலும் இலாபமீட்டும் நோக்கில் இயங்கும் கம்பனிகள் இந்தத் தொழில்துறையைக் கைவிடவில்லையல்லவா?

மலையக மக்கள் இந்த நாட்டுக்கு வருகைதந்து 200 வருடங்களாகின்றன. இத்தனை வருடங்களாக பத்துக்குப் பத்து லயன் காம்பிராக்களில் வசிக்கும் அவர்களுடைய உரிமைகள் கூட மதிக்கப்படுவதில்லை.

குறைந்தளவு ஊதியத்துடன் அன்றாட தேவைகளை பூர்த்திசெய்துகொள்ள முடியாமல் தவிக்கும் மக்களுக்கு நியாயமான சம்பளத்தை யார் பெற்றுத்தரப் போகிறார்கள்? அதற்காக மலையகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தொழிற்சங்கங்கள் எவ்வாறான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளன?

தொழிலாளர்களின் சம்பள விடயத்தைப் பொறுத்தவரையில் முதலாளிமார் சம்மேளனம் தனது நிலைப்பாட்டிலிருந்து விலகுவதாக இல்லை. அவ்வாறெனின், தொழிலாளர்களுக்கு மாற்று வருமானம் கிடைக்கும் வகையில் புதிய திட்டங்களை தொழிற்சங்கங்கள் முன்மொழியலாம் அல்லவா?

2023 ஆம் ஆண்டில் தேயிலை உற்பத்தியை அதிகரிப்பதற்கு முதலாளிமார் சம்மேளனம் எதிர்பார்க்கிறது. இதனை சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு தரிசு நிலங்களையும் காடாகிப்போன தேயிலை மலைகளையும் துப்புரவுசெய்து அவற்றைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

விவசாயம், கால்நடை வளர்ப்பு, ஏனைய சுயதொழில் ஆகியவற்றில் தொழிலாளர்களின் மேலதிக நேரத்தை முதலீடு செய்வதன் மூலம் பொருளாதார நெருக்கடியிலிருந்து ஓரளவுக் கேனும் மீள முடியும். ஆனால், அவ்வாறான காத்திரமான திட்டங்களை முன்னெடுக்கப்போவது யார்? அல்லது அதற்கு தலைமைத்துவம் ஏற்கப்போவது யார்? என்ற கேள்வி எழுகிறது.

மலையகத்தில் தொழிலாளர்கள் நலன்சார்ந்து இயங்குவதாகக் கூறும் தொழிற்சங்கங்கள் அனைத்தும் அரசியலை மையப்படுத்தியே செயற்படுகின்றன. அரசியலில் தமது இருப்பை தக்கவைத்துக்கொள்ளும் எண்ணம்தான் அவர்களிடையே மேலோங்கிக் காணப்படுகிறது.

இலங்கைக்கும் இலங்கைத் தேயிலைக்கும் அடையாளம் கொடுத்தவர்கள் மலையகத் தொழிலாளர்கள். அவர்களுடைய வாழ்வாதாரம் பாதிக்கப்படக் கூடாது என்பதை அரசும் தொழிற்சங்கங்களும் முதலாளிமார் சம்மேளனமும் உறுதிசெய்ய வேண்டும்.

வாரவெளியீடு
தமிழன்
THAMILAN WEEKLY
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilanweekly@gmail.com/ thamilaneditor@gmail.com

ஞாயிற்றுக்கிழமை, நவம்பர் 13, 2022

# சொன்னதைச் செய்ய வேண்டும் ரணில்!

தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஆர்வம் வரவேற்கத்தக்கது. குறிப்பாக மிக விரைவில் தீர்வைத் தர வேண்டும் என்ற அவரது எண்ணப்பாடு அண்மைக்காலமாகவே வெளிப்படுத்தப்படுகிறது.

வடக்கு மக்கள் எதிர்கொண்டுள்ள பிரச்சினைகளுக்கு அடுத்த வருடத்துக்குள் தீர்வு காணப்பட வேண்டுமெனவும் இதற்காக வடக்கை பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கவுள்ளதாகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தில் கடந்த வியாழக்கிழமை கூறினார்.

அத்துடன் காணாமல்போனோர் தொடர்பில் ஆராய்ந்து விசாரணைகளை நிறைவுசெய்வதற்காக மேலதிக குழுக்களை நியமித்து விசாரணைகளை துரிதப்படுத்துமாறு நீதி அமைச்சருக்கு ஜனாதிபதி பணிப்புரை வழங்கியுள்ளார்.

அடுத்த வருடம் கொண்டாடப்படும் 75ஆவது சுதந்திர தினத்தின்போது இந்தப் பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும் என்று குறிப்பிட்ட ஜனாதிபதி, வெளிநபர்கள் எமது நாட்டு பிரச்சினைகளில் தலையிடத் தேவையில்லை என்றும் நாமே எமது பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டு முன்னோக்கிச் செல்ல வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

பயங்கரவாத தடுப்புச் சட்டம், உண்மையை கண்டறியும் மற்றும் நல்லிணக்கம் தொடர்பான ஆணைக்குழு மற்றும் ஊழல் தொடர்பில் புதிய சட்டங்கள் உருவாக்க வேண்டும் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார். ஜனவரி, பெப்ரவரி மாதமளவில் இது தொடர்பான சட்டங்களை சமர்ப்பிக்க சம்பந்தப்பட்ட அமைச்சர்கள் நடவடிக்கை எடுப்பார்கள் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

“நாம் எமது பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டும். பயங்கரவாத தடுப்புச் சட்டம், உண்மையை கண்டறியும் மற்றும் நல்லிணக்கம் தொடர்பான ஆணைக்குழு மற்றும் ஊழல் தொடர்பில் புதிய சட்டங்கள் ஆகியவற்றை உருவாக்க வேண்டும். ஜனவரி,பெப்ரவரி மாதமளவில் இரு அமைச்சர்களும் இதனை சமர்ப்பிக்கவுள்ளனர்.

வடக்கிலுள்ள மக்களின் பிரச்சினைகள் குறித்து ஆராய்ந்து வருகிறோம். தடுத்து வைக்கப்பட்டிருந்த சிலரை விடுதலை செய்துள்ளோம். மேலும், சிலர் விடுவிக்கப்பட வேண்டியுள்ளனர். எழுத்தாளர் ஒருவர் இருக்கிறார். அவருக்கு எதிரான வழக்குள்ளது. வழக்கு நிறைவடைந்த பின்னர் அவர் தொடர்பிலும் செயற்படுவோம். இந்தப் பிரச்சினைகளை தீர்ப்பதே எமது நோக்கமாகும்.

2019இல் எமது ஆட்சி நிறைவடைகையில் காணாமல் போனோர் தொடர்பில் 65 கோப்புகள்தான் எஞ்சியிருந்தன. தற்பொழுது 2000 பேர் தொடர்பான விடயங்கள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. தேவையானால் மேலும் நபர்களை நியமித்து எஞ்சியவற்றையும் பூர்த்தி செய்ய முடியும். அவற்றை துரிதமாக நிறைவு செய்யுமாறு நீதி அமைச்சருக்கு ஆலோசனை வழங்கியுள்ளேன். இவை தொடர்பில் எமக்கு மேலும் ஆராய முடியும். இதற்கான ஒரே வழி விசாரணைகளுக்காக மேலும் பல குழுக்களை நியமிப்பதேயாகும். அது மட்டுமே இதற்குள்ள ஒரே தீர்வு. அடுத்த வாரமளவில் வடக்கைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் விசேட கலந்துரையாடலொன்று உள்ளது. எனது நல்ல நண்பர் கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் அதில் பங்கெடுப்பார் என நினைக்கிறேன். அவர் அதில் அரைவாசி வரை பயணித்தால் கூட பெரிய விடயமாக இருக்கும்.

வடக்கிற்காக நாம் பல அபிவிருத்தித் திட்டங்களைக் கொண்டுள்ளோம். அதற்கான மதிப்பீடுகளும் எம்மிடமுள்ளன. வடக்கில் புதுப்பித்தக்க சக்தி மற்றும் பசுமை ஹைட்ரஜன் பயன்பாடு தொடர்பிலும் கவனம் செலுத்த வேண்டும்.

திருகோணமலையில் அபிவிருத்திச் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. கிழக்கு மாகாணத்தில் சுற்றுலாத்துறையும் மேம்படுத்தப்பட்டு வருகின்றது. இவை யாவும் இலங்கையர்களாகிய நமக்காகவே முன்னெடுக்கப்படுகின்றன.

75ஆவது சுதந்திர தினக் கொண்டாட்டத்தின்போது இந்தப் பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டும். யாரும் எமது நாட்டுப் பிரச்சினைகளில் தலையிடத் தேவையில்லை. எமது பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டு முன்னோக்கிச் செல்ல வேண்டும்” என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

பிரித்தானியாவின் இரண்டாம் எலிசபெத் மகாராணியாரின் இறுதிக் கிரியைகளில் கலந்துகொள்வதற்காக லண்டன் சென்றிருந்தபோது புலம்பெயர் இலங்கையர்களை சந்தித்து கலந்துரையாடிய வேளை ரணில் விக்கிரமசிங்க இந்த விடயத்தை சுட்டிக்காட்டியிருந்தார்.

தற்போது உயர் சபையிலும் இந்த விடயத்தில் அரசுக்குரிய கடப்பாட்டை தெளிவுபடுத்தியிருக்கிறார்.

இலங்கையைப் பொறுத்தவரையில் தமிழர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதாகக் கூறியே ஆட்சியாளர்கள் வாக்கு வங்கிகளை நிரப்பிக்கொண்டார்கள். ஆனால், ஆட்சிக்கு வந்த பின்னர் சாக்குப்போக்குச் சொல்லி காலம் தாழ்த்திவிடுகிறார்கள்.

இந்த நிலைமையே தொடர்வதால் தமிழ் மக்கள் அரசாங்கங்களின் மீது நம்பிக்கை கொள்வதில்லை. சர்வதேசத்தை நம்பியே உரிமைக்காக தொடர் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர்.

இவ்வாறானதொரு சூழ்நிலையில், தமிழ் மக்களுக்கு சாதகமான வகையில் அரச தலைவரின் அறிவிப்பு ஓரளவுக்கு நம்பிக்கை கீற்றுகளை ஒளிரச் செய்துள்ளன. அந்த ஒளியை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பிரகாசமடையச் செய்ய வேண்டும்.

# கல்வி மறுசீரமைப்பில் நுவரெலியா மாவட்டத்திற்கு அநீதி

(சுப்பிரமணியம் தியாகு)

இலங்கை கல்வி வரலாற்றில் நீண்ட இடைவேளைக்குப் பிறகு தற்பொழுது கல்வி மறுசீரமைப்பு தொடர்பான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. தற்போதைய கணினி மயப்படுத்தலுக்கு அமைவாக கல்வி மறுசீரமைப்பு மேற்கொள்ளப்பட வேண்டும் எனப் பல்வேறு தரப்பினரும் தங்களுடைய கருத்துகளைத் தெரிவித்து வருகின்றனர்.

இலங்கையின் கல்விக்கு சர்வதேச மட்டத்தில் நன்மதிப்பு இருந்தாலும் தற்பொழுது அதில் மாற்றம் ஏற்பட வேண்டும் என பலரும் எதிர்பார்க்கின்றார்கள். குறிப்பாக தொழில்மயப்படுத்தப்பட்ட கல்விக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் என்ற ஒரு சிந்தனை அனைவர் மத்தியிலும் இருக்கின்றது. தனியே அறிவுசார் கல்வியாக மாத்திரம் இல்லாமல் அது தொழில்துறை சார்ந்ததாக இருக்கவேண்டும் என்பதே பலருடைய எதிர்பார்ப்பாகவும் மாறியிருக்கின்றது.

மேலும், ஆங்கிலக் கல்வியின் முக்கியத்துவம் உணரப்பட்டுள்ளமை இன்றைய கல்வி மறுசீரமைப்பின் முக்கிய விடயமாகும். ஏற்கனவே இலங்கையில் ஆங்கிலக் கல்விக்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டிருந்த போதும், பின்பு அது அரசியல் காரணங்களுக்காக தமிழ் மொழி மூலம், சிங்கள மொழி மூலம் எனப் பிரிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து தனித்தனியான பாடசாலைகளும் உருவாக்கப்பட்டன.

இது இவ்வாறு இருக்க மலையகக் கல்வி என்பது 1975களின் பின்னரே அரச மயமாக்கப்பட்டது. அதாவது இலங்கைக்கு இலவசக் கல்வி 1945ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டாலும் மலையக கல்வியை 30 வருடங்களின் பின்னரே அங்கீகரித்தனர். ஆக 30 வருடங்கள் நாம் கல்வியில் பின்தங்கியவர்களாகவே இருக்கின்றோம்.

இதுவும் எங்களுடைய மலையகக் கல்வியின் பின்னடைவிற்கு ஒரு காரணமாக அமைந்துள்ளது. தற்பொழுது கல்வி மறுசீரமைப்பு தொடர்பான செயற்பாடுகளை கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த ஆரம்பித்திருப்பதை நாம் பாராட்டியாக வேண்டும். ஆனாலும், இந்த நிலையிலும் நுவரெலியா மாவட்டத்திற்கு அநீதி ஏற்படும் வகையிலேயே இந்த மறுசீரமைப்பு அமைந்துள்ளதாக மலையகத்தில் இருக்கின்ற கல்விமான்களும் கல்வித்துறை சார்ந்தவர்களும் கருத்து தெரிவிக்கின்றனர்.

தற்பொழுது நுவரெலியா மாவட்டத்தில் ஐந்து கல்வி வலயங்கள் இருக்கின்றன. அதில் நுவரெலியா, ஹட்டன், கொத்மலை, வலப்பனை, ஹங்குரன்கெத்த ஆகிய கல்வி வலயங்கள் காணப்படுகின்றன. இதனடிப்படையில் கீழே முழுமையான அட்டவணை ஒன்று தரப்பட்டுள்ளது.

நுவரெலியா மாவட்டத்தின் ஆசிரியர்கள் மாணவர்களின் தொகை வலய அடிப்படையில்.

| வலயம் | பாடசாலைகள் | மாணவர்கள் | ஆசிரியர்கள் |
|---|---|---|---|
| நுவரெலியா | 156 | 44,961 | 3,020 |
| ஹட்டன் | 150 | 48,196 | 3,018 |
| கொத்மலை | 86 | 21,692 | 1,538 |
| வலப்பனை | 89 | 21,548 | 1,445 |
| ஹங்குரன்கெத்த | 69 | 22,657 | 1,572 |
| மொத்தம் | 550 | 159,054 | 10,593 |

மேலே உள்ள தரவுகளின் அடிப்படையில் கொத்மலை, ஹங்குரன்கெத்த, வலப்பனை ஆகிய மூன்று கல்வி வலயங்களிலும் 65,897 மாணவர்களுக்கும் 4,555 ஆசிரியர்களுக்கும் மூன்று வலயமும் நுவரெலியா, ஹட்டன் வலயங்களில் 93,157 மாணவர்களுக்கும் 6,038 ஆசிரியர்களுக்கும் இரண்டு வலயங்களும் மாத்திரமே உருவாக்கப்பட்டு நிர்வாகம் நடைபெறுகின்றது.

இந்தச் செயற்பாடும் நுவரெலியா மாவட்டத்தில் தமிழ்க் கல்வி அபிவிருத்தியடைவதில் பல்வேறு சிக்கல்கள் நிலவுகின்றன. குறிப்பாக 45,000 சராசரியான மாணவர்களுக்கும் 3,000 ஆசிரியர்களுக்கும் ஒரு கல்வி வலயமே காணப்படுகின்றது. இதில் பல்வேறு நிர்வாக சிக்கல்கள் ஏற்படுகின்றன. ஆசிரியர்கள் தங்களுடைய சேவைகளைப் பூர்த்தி செய்துகொள்வதற்காக பல கி.மீ. தூரம் கடந்துசெல்ல வேண்டிய நிலைமை. மேலும், அவர்களுக்கு சேவையை பெற்றுக்கொடுப்பதற்கு குறைவான அதிகாரிகளே உள்ளனர்.

இக்கல்வி வலயங்களுக்குப் பெற்றுக்கொடுக்கப்படுகின்ற நிதியின் அளவும் பாரிய அளவில் குறைவடைந்துள்ளது. ஏனெனில், மூன்று கல்வி வலயங்களில் இருக்கின்ற 65,897 மாணவர்களுக்குக் கிடைக்கின்ற அளவு நிதியானது இரண்டு கல்வி வலயங்களில் இருக்கின்ற 93,157 மாணவர்களுக்கும் கிடைக்கின்றது. அத்துடன் 4,555 ஆசிரியர்களுக்காக மூன்று வலயங்களும் 6,038 ஆசிரியர்களுக்கு சேவையை பெற்றுக் கொடுக்க இரண்டு வலயங்களும் உள்ளன. இந்த செயற்பாடானது திட்டமிட்ட அடிப்படையில் தமிழ்க் கல்வி புறக்கணிக்கப்படுகின்றதா என்ற கேள்வி எழுகின்றது.

நுவரெலியா மாவட்டத்தில் அதிகளவான தமிழ் மொழி மூல மாணவர்களும் ஆசிரியர்களும் இருந்தாலும் ஹட்டன் வலயத்தில் மாத்திரமே ஒரே ஒரு தமிழ் கல்வி வலய பணிப்பாளர் இருக்கின்றார். வலயங்கள் அதிகரிக்கப்பட்டால் எங்களுடையவர்களும் வலயக் கல்விப் பணிப்பாளர்களாக வர முடியும். இதன் மூலமாக இன்னும் எங்களுடைய பாடசாலைகளை அபிவிருத்தி செய்வதற்கும் ஆசிரியர்களின் தேவைகளை விரைவாகப் பூர்த்தி செய்வதற்குமான ஒரு நிலைமை ஏற்படும்.

தற்பொழுது கிடைத்திருக்கின்ற தகவல்களின் அடிப்படையில் இன்னும் இரண்டு வலயங்களே அதிகரிப்பதற்கான பரிந்துரைகள் செய்யப்பட்டு வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இது எந்த விதத்திலும் ஏற்றுக்கொள்ள முடியாது. கட்டாயமாக ஆகக் குறைந்தது இன்னும் நான்கு புதிய வலயங்கள் உருவாக்கப்பட்டு நுவரெலியா மாவட்டத்தில் 9 வலயக் கல்விப் பணிமனைகளாவது உருவாக்கப்பட்டால் மாத்திரமே எமது பாடசாலைகளும் ஆசிரியர்களும் வலயக் கல்விப் பணிமனையின் ஊடாக பெற்றுக் கொள்கின்ற சேவைகளை விரைவாகவும் நேர்த்தியாகவும் காலதாமதம் இல்லாமலும் பெற்றுக் கொள்ள முடியும்.

எனவே, இந்த விடயம் தொடர்பாக அனைத்து நுவரெலியா மாவட்ட தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களும் இணைந்து செயற்பட முன்வர வேண்டும் என மலையகத்தின் கல்விமான்களும் புத்திஜீவிகளும் எதிர்பார்க்கின்றார்கள். கடந்த காலங்களில் கல்வி விடயங்களில் மலையக தமிழ் அரசியல் தலைமைகள் இணைந்து செயற்படவில்லை என்ற குற்றச்சாட்டு பரவலாகவே முன்வைக்கப்படுகின்றது. அதில் உண்மையும் இருக்கின்றது.

வலயங்களை அதிகரிப்பது தொடர்பில் தற்பொழுது தலவாக்கலையிலும் நோர்வூட் பகுதியிலும் இரண்டு வலயங்களை அதிகரிப்பதற்கான செயற்பாடுகள் முன்னெடுப்பது தொடர்பாக கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருகின்றன. அதிலும் இரண்டு அல்ல, ஒன்று போதுமானது என்ற கருத்தும் பெரும்பான்மை அதிகாரிகள் மத்தியில் நிலவுகின்றது.எனவே, இது தொடர்பாக உடனடியாக கவனம் செலுத்தவேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

குறித்த விடயம் தொடர்பாக நாடாளுமன்றத்தில் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வேலுசாமி இராதாகிருஷ்ணன் ஆகியோர் கல்வி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வந்து கருத்துகளை தெரிவித்தனர். இது தொடர்பாக தொடர்ச்சியாக குரல் கொடுக்க வேண்டிய தேவைகள் இருக்கின்றன. அதைவிடுத்து எல்லாம் முடிந்தவுடன் குரல் கொடுப்பதில் எந்தப் பயனும் இருக்காது என்பதே உண்மை.

# ஹரீஸ் – ஹக்கீம் மோதல்: மன்னிப்பின் பின்னால் உள்ள அரசியல்..?





20க்கு வாக்களித்த முஸ்லிம் கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு கட்சித் தலைவர்கள் என்ன தண்டனையை வழங்கப் போகிறார்கள் என்ற வினா பரவலாக மக்களின் உள்ளத்தில் இருந்தது. மக்களின் இவ்வினாவுக்கான விடையை மு.கா. தலைவர் பலவழிகளிலும் தவிர்த்து வந்திருந்தாலும், அவர் பதில் வழங்கியே ஆக வேண்டிய நிர்ப்பந்தம் நடைபெற்று முடிந்த 30ஆவது பேராளர் மாநாட்டில் ஏற்பட்டிருந்தது. இதற்கான பதில் கிடைத்துமிருந்தது எனலாம்.

20க்கு ஆதரவளித்த பைசால் காசிம் மற்றும் தௌபீக் ஆகியோருக்கு பேராளர் மாநாட்டில் பதவிகள் வழங்கிவைக்கப்பட்டிருந்தன. ஹரீஸுக்கு மாத்திரம் பதவிகள் வழங்கப் படவில்லை. ஹரீஸ் தவிர்ந்த ஏனைய இருவரும் மன்னிப்பு கேட்டதாக கூறப்படுகிறது. இவர்கள் யாரிடம் மன்னிப்புக் கோர வேண்டும் என்ற நியாயமான வினா மக்களிடையே இருந்தாலும், மன்னிப்புக் கேட்டதன் மூலம் அவர்கள் செய்த தவறுகளை, தானாக ஏற்றுக்கொண்டுள்ளனர். இவ்விருவரில் ஒருவர் கடந்த ஜனாதிபதி தெரிவின்போது கூட மு.காவின் முடிவை புறக்கணித்து, ரணிலை ஆதரித்திருந்ததான பலத்த சந்தேகமுள்ளது. இவருக்கு மன்னிப்பளிப்பது வெட்கப்பட வேண்டிய ஒன்று.

இவ்விடயத்தில் ஹரீஸ் மன்னிப்புக்கோரத் தயங்கியுள்ளார். மன்னிப்புக் கோருவதானது, தான் செய்த பிழையை ஏற்றதாகப் பொருள்படும் என்பதை ஹரீஸ் நன்கு அறிவார். தனது கடந்தகால செயற்பாடுகளுக்கு மக்கள் முன்பு பல நியாயங்களை முன்வைத்த ஹரீஸுக்கு இது பலத்த அவமானத்தை ஏற்படுத்தும். அச்செயற்பாடானது ஹரீஸ் மீதான நம்பிக்கையீனத்தை அதிகரிக்கும். அவரின் நெருங்கிய ஆதரவாளர்கள் கூட ஹரீஸை நியாயப்படுத்த முடியாத நிலைக்குத் தள்ளப்படுவார்கள். இது ஹரீஸின் அரசியல் எதிர்காலத்தை சூனியமாக்கும்.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் மு.கா. தலைவர் ஹக்கீம் ஹரீஸுக்கு எதிரான அரசியலை நேரடியாகவே செய்தார். ஹரீஸும் ஹக்கீமின் சவாலையும் சமாளித்தே தேர்தலை எதிர்கொண்டார். எதிர்வரும் தேர்தலில் மு.காவில் ஹரீஸுக்கு வாய்ப்பளிக்கப்பட்டாலும் ஹரீஸுக்கு எதிரான அரசியலை ஹக்கீம் முன்னெடுப்பார் என்பதில் ஐயமில்லை. தற்போது ஹரீஸ் மன்னிப்புக் கேட்பாராயின் அவ்வேளையில் அது அவருக்குப் பாரிய சவாலாக அமையும். வேட்பாளராகக் களமிறக்கிய பின்பு இவ்விடயத்தை வைத்து ஹரீஸை வீழ்த்த முனைவார் ஹக்கீம். எதிர்வரும் தேர்தலில் மு.கா. தனித்துக் களமிறங்கவே அதிக வாய்ப்புள்ளது. ஹரீஸ் என்ற தனி நபரின் தோல்வி கட்சிக்கு சிறிய பாதிப்பையும் ஏற்படுத்தாது என்பதால், இது ஹரீஸுக்கு எதிரான ஹக்கீமின் செயற்பாட்டை மேலும் வீரியமாக்கும்.

தற்போது ஹரீஸை உள்வாங்கி பதவி வழங்கினாலும், ஹரீஸுக்கு தேர்தலில் போட்டியிட ஆசனம் வழங்கப்படுமா என்ற ஒரு சிறிய அச்சமும் இல்லாமலில்லை. அந்தளவு இவர்கள் மீதான மக்கள் எதிர்ப்புள்ளது. 20க்கு ஆதரவளித்தவர்களுக்கு தேர்தல் வாய்ப்பளித்தால் மு.கா. பலத்த எதிர்ப்பை பெறும். ஹரீஸ் மன்னிப்பும் கேட்டு, தேர்தலில் களமிறங்க வாய்ப்பளிக்கப் படாமலும் விட்டால், ஹரீஸின் அரசியல் என்னவாவது ? மன்னிப்புக் கேட்ட பிறகு, இக்குறித்த விடயத்தில் ஹரீஸ், தன்னை நியாயப் படுத்த மக்கள் முன்னிலையிலும் செல்ல முடியாது. இவ்விடயத்தில் முன்னர் போன்று ஹக்கீமின் அனுமதியுடனேயே செய்தேன் என குற்றம் கூறவும் முடியாது. இவற்றை எல்லாம் வைத்து நோக்கும்போது ஹரீஸ் இக்குறித்த விடயத்தில் மன்னிப்புக் கேட்காமல் தவிர்ப்பதே சாமர்த்தியம் எனலாம்.

ஹரீஸ் மன்னிப்புக் கேட்காமல் அவரை கட்சியோடு இணைக்க முடியாத நிர்ப்பந்தத்தில் ஹக்கீம் உள்ளார். யார் என்ன சொன்னாலும் ஹக்கீமைப் பொறுத்தவரையில் தற்போது ஹரீஸை உள்வாங்குவதையே பொருத்தமாக கருதுகிறார். உள்வாங்கி வெட்டு கொடுப்பதே அவரது நோக்கம் எனலாம். இதனையே கடந்த பேராளர் மாநாட்டிலும் ஹக்கீம் வெளிப்படுத்தியிருந்தார். ஹரீஸ் மன்னிப்புக் கோரினால் அவரது பதவிகளை வழங்க, தலைமை முன்னிற்கும் என்பதை பகிரங்கமாக பேராளர்கள் முன்னிலையில் வெளிப்படுத்தியிருந்தார். இது மன்னிப்பின் நோக்கை பிறழச் செய்கிறது எனலாம்.

ஒருவர், தன் தவறை உணர்ந்து மன்னிப்புக் கேட்க வேண்டும். அப்போதே மன்னிப்பின் நோக்கம் சரியாகும். ஒருவரிடம், “நான் உனக்கு பதவி தருகிறேன், மன்னிப்புக் கேள்” என அழைப்பு விடுப்பது மிகவும் கேவலமானது. மன்னிப்பு வழங்குபவரே மன்னிக்கத் தயார் என, மன்னிப்புக் கேட்க முன்பே பகிரங்கமாக கூறுவது நாகரிகத்தின் மிக இழிநிலை எனலாம். இதனை விட இயலாமை வேறொன்றுமில்லை. மன்னிக்கவே முடியாத பாரிய சமூக துரோகத்தை செய்துள்ள இவருக்கு, மன்னிப்புக் கேட்க முன்பே மன்னிப்பு வழங்கியுள்ள ஹக்கீமின் தாராள குணம் வேறு யாருக்கும் இருக்க முடியாது. அஷ்ரப்பின் முயற்சியில் விருட்சமான இந்த மரம் ஹரீஸ் எனும் தனி நபரில் எந்தளவு தங்கியுள்ளது என்பதை இவ் விடயம் துல்லியமாக்குகின்றது.

ஏ.கே.மிஸ்பாஹுல் ஹக்,
சம்மாந்துறை.

# மீளப்பெற முடியாத அதிகாரப்பகிர்வுக்கு...

**அக்கினியான்**

மத்திய அரசினால் மீளப்பெற முடியாத சமஷ்டி முறையிலான அதிகாரப்பகிர்வு தமிழ் மக்களுக்கு வழங்கப்படவேண்டும், வடகிழக்கு மாகாணம் மீண்டும் ஒருங்கிணைக்கப்படவேண்டும், வடகிழக்கு தனி ஒரு மாகாண அலகாக உருவாக்கப்படவேண்டும் என்ற கோரிக்கைகளை முன்வைத்து அதிகாரப்பகிர்வு கோரிய செயன்முறையின் நூறாம் நாள் அன்று வடகிழக்கிலுள்ள எட்டு மாவட்டங்களிலும் வெளியிடப்பட்ட பிரகடனத்தில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை தென்னிலங்கை அரசியல் சம்பிரதாயங்களில் புதிய அரசியலமைப்பை நாடாளுமன்றின் ஊடாக உருவாக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துவருகிறது. இந்த முன்னெடுப்புக்கு எதிர்க்கட்சிகளின் பங்களிப்பு அவசியமானது. நாடாளுமன்றுக்கு வெளியே ஒரு அரசியல் சாசனம் உருவாகுவதற்கு எக்காரணம் கொண்டும் நடவடிக்கை எடுக்கப்பட மாட்டாது. அனைத்து மக்களது ஒத்துழைப்பு இருந்தால் மட்டுமே புதிய அரசியல் சாசனத்தை கொண்டுவர முடியும் என்ற கோரிக்கைகளும் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

மேலேயுள்ள கோரிக்கைகள் வடகிழக்கில் வாழும் தமிழ்ப்பேசும் மக்களின் அபிலாஷைகளின் வெளிப்பாடான பிரகடனமாக காணப்படுகிறது. பின்னையது தேசிய பிரச்சினை சார்ந்த நிலைப்பாட்டின் அழைப்பாகக் காணப்படுகிறது. இந்த அழைப்புகளும் கோரிக்கைகளும் இலங்கை அரசியல் நடைமுறையில் புதியதொரு விடயமுமல்ல. அறியாத செய்தியையும் சொல்ல வரவில்லை. தர்க்கரீதியாக பார்க்கப்போனால், பூகோள அமைப்பில் வட கிழக்கு மக்களின் கோரிக்கையை முன்னையது எடுத்துக்காட்டுகிறது. முன்னையதோ தென்னிலங்கைவாதிகளின் யதார்த்தத்தை எடுத்துக்காட்ட முற்படுகிறது. மறுபுறம் கூறுவதானால் தமிழ்த் தேசியத்துக்கும் சிங்கள தேசிய வாதத்துக்கும் இடையிலான போட்டா போட்டிகளின் வெளிப்பாட்டை தெரிவிக்க வருகிறது.

வடகிழக்கு மக்களின் நீண்ட காலப்பிரச்சினைக்கு நிரந்தரமான நிலையான தீர்வு வேண்டுமென்ற போராட்டங்கள் சுதந்திரத்துக்குப்பின் கடந்த 70 வருடங்களுக்கு மேலாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அப்போராட்ட வடிவங்கள் காலத்துக்கு காலம் மாற்றமெடுத்திருந்தபோதும், அம்மாற்றங்களின் பெறுமானங்களையோ அன்றி தாற்பரியங்களையோ சிங்கள தலைமைகள் ஏற்றுக் கொள்ளவுமில்லை அங்கீகரிக்கவுமில்லை. சிங்கள தேசியவாதமும் அடைப்படைவாதமும் பௌத்த மேலாதிக்கவாதமும் சிறுபான்மையினரின் போராட்டங்களையும் அபிலாஷைகளையும் கிள்ளுக்கீரையாக எடுத்துக்கொண்டு அதை அடக்க ஒடுக்க நினைத்தார்களே தவிர அதற்கான பரிகாரங்களை முன்வைக்க விரும்பவில்லை.

தமிழர்கள் கோரியிருந்த சமஷ்டி என்ற அரசியல் சாசனத் தீர்வுக்கான விளக்கங்களை தவறாக பிரசாரம் செய்தார்கள். சிங்கள மக்கள் மத்தியில் தவறான வியாக்கியானங்களை வழங்கி சமஷ்டி கோரிய தலைவர்களை சிங்கள மக்களுக்கெதிரான அரசியல் அசுரர்களாக உருவகப்படுத்தினார்கள். இந்த நிலை இன்றும் தொடர்ந்து கொண்டிருக்கும் நிலையில் மீண்டும் இத்தகைய கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வென்பது இம்முறையில்தான் இருக்கவேண்டும் என்பதில் உள்ள சிக்கல் சமஷ்டியா அல்லது ஒற்றையாட்சிக்குள்ளான தீர்வா என்பதில் உள்ள குளறுபடிகளை யார் தீர்த்துவைப்பது என்பதில் தான் இம்முடிச்சு அவிழ்க்கப்படவேண்டும். பூனைக்கு யார் மணிகட்டுவது என்பதில்தான் அனைத்து விடயங்களும் உள்ளடக்கப்பட்டிருக்கின்றன. முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன கூறியதுபோல் சமஷ்டி என்றவுடன் தென்னிலங்கை சக்திகள் போர்க்கொடி தூக்கும் நிலை இன்னும் நின்றுவிடவில்லை.

இவ்வாறானதொரு நெருக்கடி நிலையில் மீளப்பெற முடியாத சமஷ்டி யாப்பின் ஊடாக அரசியல் தீர்வு என்பது எவ்வாறு முன்னெடுக்கப்படப்போகிறது. அதை முன்னெடுக்கக்கூடிய பலம் வாய்ந்த அரசியல் சக்திகள் இன்று தென்னிலங்கையில் உள்ளனரா என்பதை கண்டு பிடிக்கவேண்டும். கடந்த 200 வருடங்களுக்கு மேலாக தென்னிலங்கையில் இனவாத தூபங்கள் இடப்பட்ட ஒரு சமூகம் வளர்த்தெடுக்கப்பட்டதே தவிர இனச்சமவாதம் பேசும் சமூகம் கட்டி எழுப்பப்படவில்லை. உதாரணமாக, 1833ஆம் ஆண்டு கோல்புறூக் ஆணைக்குழுவின் சிபாரிசுக்கு அமைய சட்டவாக்க கழகம் மற்றும் சட்ட நிர்வாக கழகம் உருவாக்கப்பட்டபோதும் மேற்படி கழகத்துக்கு தமிழர்களை நியமிப்பதில் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது. 1870இல் இருந்தே மருதானை சிங்கள - முஸ்லிம் கலவரம் தொடங்கப்பட்ட காலத்திலிருந்தே தென்னிலங்கை அவ்வாறுதான் வளர்த்தெடுக்கப்பட்டது. இந்த போக்குக்கு மாறுபட்டதாக வடகிழக்கையும் கூறிவிட முடியாது.

மத்திய அரசாங்கத்தினால் மீளப்பெற முடியாத அதிகாரம் கொண்ட சமஷ்டி முறையிலான தீர்வை மிக அழுத்தம் திருத்தமாக கேட்பதற்கான காரணம், தமிழ் மக்கள் கடந்த காலத்தில் கற்றுக்கொண்ட பாடங்கள் காரணமாக இருக்கலாம். 13ஆவது திருத்தமானது தமிழ் மக்களுக்கான நிரந்தரத்தீர்வை நோக்கிய ஆரம்பமாக எடுத்துக்கொள்ளலாம் என ஆரம்பத்தில் அறிவுரை வழங்கப்பட்டபோதும் நாட்டபட நாட்டபட அதன் அதிகாரங்கள் மத்திய ஆட்சியாளர்களால் பிடுங்கி எடுக்கப்பட்டதன் விளைவே அதன்மீது நம்பிக்கை இழப்பு வடகிழக்கு மக்களுக்கு ஏற்பட்டது. கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதைபோல் மத்திய அரசாங்கமானது திட்டமிட்ட முறையில் மாகாண சபை அதிகாரங்களை கபளீகரம் செய்து கொண்டது மாத்திரமல்ல, அதை ஒரு வெள்ளை யானை நிலைக்கு கொண்டுவந்துவிட்டது. இதனாலேயே சுயாட்சி வடிவிலான அதிகாரப்பகிர்வு வேண்டும் என்ற கோரிக்கையை தமிழர்கள் தொடர்ந்து வைத்து வந்திருக்கிறார்கள்.

சமஷ்டி என்பது சிங்களத் தரப்பினரைப் பொறுத்தவரை தமிழீழத்துக்கான வழிவகுப்பு என்பது அவர்களால் வரைவிலக்கணப்படுத்துகிற விடயமாக காணப்படுகிற காரணத்தினால் தான் சமஷ்டி பற்றி பேசுகிறபோதெல்லாம் சிங்கள தலைமைகளும் மக்களும் கொதித்தெழும்பும் நிலையை காணுகிறோம். சமஷ்டி என்பது பல்லின சமூகம் வாழுகின்ற ஒருநாட்டில் அச்சமூகங்களை ஒன்றிணைத்து ஆட்சிசெய்யும் ஒரு அதிகாரப்பகிர்வு முறை என்பதை சிங்கள மக்கள் ஏற்றுக்கொள்வதாகவேயில்லை. உதாரணமாக, சுவிட்ஸர்லாந்து நான்கு மொழிகளை பேசுவோரைக்கொண்ட கூட்டாட்சி நாடு என்று குறிப்பிடுவார்கள். இங்கு 65 வீதமானவர்கள் ஜேர்மனியரும் 18 வீதம் பிரான்ஸ் மொழி பேசுகிறவர்களும் 9 வீதத்தினர் இத்தாலி மொழியையும் ஒரு வீதம் ரோமன் மொழி பேசுபவர்களாகவும் காணப்படுகிற காரணத்தினால் 1948ஆம் ஆண்டு கூட்டாட்சி யாப்பு உருவாக்கப்பட்டது. எமது அயல் நாடான இந்திய உபகண்டத்தில் ஹிந்தி, கன்னடம், தெலுங்கு, தமிழ், பஞ்சாபி உட்பட்ட 18 மொழிகள் தேசிய மொழிகளாகவுள்ளன. இங்கு உருவாக்கப்பட்ட யாப்பு கூட்டாட்சி தன்மை கொண்டது. இருந்தபோதிலும் நாட்டின் பெயரில் கூட்டாட்சி என்ற பெயர் இடம்பெறவில்லை. இவ்வாறு உலகின் பலநாடுகளில் இன மற்றும் பிரதேச ரீதியான தேசியப் பிரச்சினைக்கு சமஷ்டி ஆட்சி முறையை தீர்வாக பயன்படுத்திக்கொண்டது பல நாடுகளில் அனுபவங்களாக காணப்படுகின்றன.

வடகிழக்கு மாகாணம் மீள ஒருங்கிணைக்கப்படவேண்டும் என்ற கோரிக்கைகள் தொடர்ந்து வலியுறுத்தப்பட்டுவருவது பூர்வீகமாகவும் வரலாற்று ரீதியாகவும் அதேவேளை பூகோள அமைப்பிலும் வடகிழக்கு ஒன்பது ஒத்த தன்மை கொண்டவை மாத்திரமன்றி மொழி, கலாசாரம், வாழ்வியல்முறையிலும் ஒன்றோடு ஒன்று ஒட்டிப்பிறந்த பிரதேசங்களாகும். நிலமானிய சமுதாயமுறைக் காலத்திலிருந்து இந்த ஒத்தத்தன்மை காணப்படுகிற காரணத்தினால்தான் திருகோணமலையை நடுநாயகமாகக்கொண்டு ஒரு இணைப்பு உருவாக்கப்படவேண்டுமென தமிழ்த் தலைமைகள் கோரி வந்துள்ளனர். இதன் அடிப்படையிலேயே தமிழரசுக்கட்சியின் முதலாவது தேசிய மாநாட்டை தந்தை செல்வா 1951ஆம் ஆண்டு திருகோணமலையில் நடத்தினார். ஆனால் திருகோணமலையை குறிப்பாக கிழக்கு மாகாணத்தின் இனப்பரம்பலை மாற்றும் வகையில் சிங்கள அரசாங்கங்கள் பலவகை குடியேற்றத்திட்டங்களை திட்டமிட்ட முறையில் உருவாக்கி சிங்கள மக்களின் ஆதிக்கத்தை அதிகரிக்க வைத்ததன் விளைவு கிழக்கில் பல பிரதேசங்கள் பறித்தெடுக்கப்பட்டு விட்டன. கிழக்கின் இனப்பரம்பல் தற்போது மாறு நிலை கொண்டதாக மாற்றப்பட்டுவிட்டது.

இலங்கை - இந்திய ஒப்பந்தம் (29.07.1987) மாகாண சபை அறிமுகம், வட கிழக்கை தற்காலிகமாக இணைப்பதற்கான வழியை உண்டாக்கித்தந்தபோதும் அந்த இணைப்புக்கு 2006ஆம் ஆண்டு மரண சாசனம் எழுதப்பட்டது. (16.10.2006) 16 வருடங்கள் இணைந்திருந்த வட கிழக்கு மாகாணங்கள் உச்ச நீதிமன்ற தீர்ப்புக்கு அமைய பிரித்தெடுக்கப்பட்டன. இதன் சூத்திரதாரிகளாக இருந்தவர்கள் ஜே.வி.பியினர். முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்தனவின் தந்திரோபாயமான சூட்சுமத்தால் வட கிழக்கு தொடர்ந்து இணைந்திருக்கவாய்ப்பில்லாமல் போய்விட்டது.

தற்போது வட கிழக்கு இணைப்பென்பது பல்வேறு நெருப்பாறுகளைக் கடந்து சாதிக்கவேண்டிய கண்ட பாய்ச்சலாகவே இருப்பதாக பேசப்படுகிறது. வடகிழக்கு இணைக்கப்படவேண்டுமாயின் கிழக்கு மாகாணத்தில் அதற்கான வாக்கெடுப்பு நடத்தப்படவேண்டும் என்பது 13ஆவது திருத்தத்தில் விதிக்கப்பட்டிருக்கும் சட்ட ஆலோசனையாகும். இந்த நிபந்தனையை மிக சூட்சுமமாக புகுத்தியவர் முன்னாள் ஜனாதிபதி ஜெயவர்த்தன. இந்த நிலையில் கிழக்கு வாழ் முஸ்லிம் மக்களுடைய ஏகோபித்த ஆதரவு இல்லாமல் நடைமுறைப்படுத்துவது என்பது முயற்கொம்பு தேடிய கதையாக போய்விடும். இதுவுமன்றி கிழக்கின் இனப்பரம்பலில் சிங்கள மக்களின் விகிதாசார வேகமென்பது கடந்த 35 வருடத்தில் பல்மடங்காக பல்கி பெருகியிருக்கும் நிலையில், முஸ்லிம் மக்களுடைய உடன்பாடுகளை விட சிங்கள மக்களின் உடன்பாடுகளை அடைந்துகொள்வது என்பது ஆகாத காரியமாகக்கூட இருக்கலாம்.

1990ஆம் ஆண்டுக்குப்பின் ஏற்பட்ட மனக்கசப்பான சம்பவங்கள், குரோத விரோதங்கள் முஸ்லிம் சமூகத்துக்கு மத்தியில் இணைப்புக்கான விரக்தியையும் வெறுப்பையும் உண்டாக்கியுள்ளது என்பதையும் மறந்துவிட முடியாது. இதற்கு மிக நேர்த்தியான தூபமிடுகைகளை சிங்கள அரசியல்வாதிகள் செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதும் தெரிந்து கொள்ளவேண்டிய விடயம். இருந்தபோதிலும் நேரடியாகவே 2009ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட அரசியல் மாற்றம் உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலை காரணங்காட்டி முஸ்லிம் சமூகத்தின்மீது மேற்கொள்ளப்பட்ட அடக்குமுறைகள், அராஜகங்கள், கோட்டபாய ராஜபக்ஷவின் வல்லாண்மை ஆட்சியில் அவர்களுக்கு நேரடியாகவே இழைக்கப்பட்ட அநீதிகள், ஆவேசங்கள் அவர்களை சிந்திக்க வைத்திருக்கின்றன என்பதையும் வைத்து சிந்தித்துப் பார்க்கவேண்டிய புரிந்துணர்வு மாற்றங்களை பற்றிக்கொள்ளவேண்டிய தேவை தமிழ்த் தலைமைகளைச் சார்ந்தது.

இன்னொரு விடயம் பற்றியும் தற்போது தமிழ்ப்பேசும் மக்கள் மத்தியில் அதிகம் பேசப்படுகிறது. வடகிழக்கு தனியொரு மாகாணமாக உருவாக்கப்படவேண்டும் என்ற அவசியம் பற்றிய கருத்தாடல் இடம் பெறுகின்றது. குறிப்பாக கடந்த காலங்களில் முஸ்லிம் மக்களுக்கு எதிராக உருவாக்கப்பட்ட சிங்கள தேசியவாதம், பௌத்த மதவாதம் ஏதோ ஒருவகையில் சிந்திக்க வைத்திருக்கிறது அவர்களை என்பது வெளிப்படையாக தெரிகிற விடயம். சிறுபான்மை மக்களாகிய தமிழ் முஸ்லிம் மக்கள் வடகிழக்கில் பலமுடையவர்களாகவும் உரிமை யுடையவர்களாகவும் சுதந்திரம் சமத்துவம் கொண்ட சமூகமாக வாழவேண்டுமாயின் வடகிழக்கிலுள்ள இரு இனத்தவரும் இணைந்தும் ஒருமித்தும் வாழும் நிலை யொன்று உருவாகவேண்டுமென்ற கருத்தும் சிந்தனையும் வலியுறுத்தப்பட்டுவருவது முக்கியமான விடயமாகும்.

மறுபுறம், கடந்த 75 வருடங்களுக்கு மேலாக வடகிழக்கு பொருளாதார ரீதியாக புறக்கணிக்கப்பட்டு மாற்றான் மனைகள் செழிப்புற்று காணப்படும் நிலையில் வடகிழக்கு பொருளாதார வளமுடையதாக மாற்றப்படவேண்டுமாயின் அல்லது அபிவிருத்தியை நோக்கி நகர்த்தப்படவேண்டுமாயின் இனங்களுக்கிடையேயுள்ள முரண்பாடுகள் நீக்கப்பட்டு ஒன்று சேர்ந்து பயணிப்பதன் மூலமே எதிர்காலத்தை நோக்கிய வளர்ச்சிக்கு வித்திட முடியும் என்பது பட்டுக்கொண்ட பட்டறிவின் மூலம் தெரிந்து கொள்ளப்பட்டிருக்கிறது. கடந்த பல நூற்றாண்டுகளாக வட கிழக்கு புறக்கணிக்கப்பட்டு வந்ததன் காரணமாகவே ஏனைய பிரதேசங்களுக்கும் வட கிழக்குக்கும் இடையேயான பொருளாதார சமமின்மை காணப்படுகிறது. ஊர் இரண்டு பட்டால் கூத்தாடிக்கு கொண்டாட்டம் என்பது போல் மோதவிட்டு வேடிக்கை பார்த்து இலாபத்தை அடைந்து கொள்ளும் தந்திரோபாயத்தை உடைத்தெறியவேண்டுமாயின் வட கிழக்கு ஓர் அலகாக பரிணமிப்பது அவசியமாகிறது.

எவ்வாறு இருந்தபோதும் இவை அனைத்தையும் ஆற்றக்கூடிய அல்லது நடைமுறைப்படுத்தக்கூடிய அதிகாரம் கொண்டது. நாட்டின் அரசியல் சாசனமென்பது தெளிவுடைய விடயம். இந்த நிலையில் தற்போதைய அரசாங்கமானது குறிப்பாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் ஆட்சியில் புதிய அரசியலமைப்பொன்று நாடாளுமன்றின் ஊடாக உருவாக்க அரசு நடவடிக்கை எடுத்துவருவதாகவும் இந்த விவகாரத்துக்கு எதிர்க்கட்சிகளின் ஆதரவும் பங்களிப்பும் அவசியமானது எனவும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நாடாளுமன்றுக்கு வெளியே அரசியல் சாசனம் உருவாக்க நடவடிக்கை எடுக்கப்பட மாட்டாது எனவும் பிரதமர் தினேஷ் குணவர்த்தன எதிர்க்கட்சிகளுக்கு அழைப்பு விடுத்திருக்கிறார்.

கடந்த காலத்தில் உருவாக்கப்பட்ட இரு குடியரசு யாப்புகளும் இந்த நாட்டின் தேசியக்குடிகளான தமிழ் முஸ்லிம் சமூகங்களின் பங்களிப்பு இல்லாமலே உருவாக்கப்பட்டது என்ற விமர்சனங்கள் தொடர்ந்து இருந்துகொண்டே இருக்கின்றன. இவ்வாறு பெறப்பட்டமையின் காரணமாகவே இரண்டாவது குடியரசு யாப்பானது 21 தடவைகளுக்கு மேல் திருத்தம் செய்யப்பட்ட யாப்பாக இருந்து வந்துள்ளது என்ற கருத்து தெரிவிக்கப்படுகிறது.

கடந்த நல்லாட்சிக்காலத்தில் புதிய அரசியல் யாப்பொன்றை உருவாக்குவதற்காக நாடாளுமன்றை அரசியல் நிர்ணய சபையாக மாற்றி எடுக்கப்பட்ட முயற்சிகள் அரைகுறைப்பிரசவமாகிப்போனது நாடறிந்த செய்திகளாகும்.

தற்போது நடை முறையிலுள்ள அரசாங்கமானது புதிய அரசியல்சாசனமொன்றை உருவாக்குவதற்கான முயற்சிகளில் தீவிரம் காட்டிவருவதாக கூறப்படுகிற நிலையில், சிறுபான்மை மக்களாகிய தமிழ் முஸ்லிம் மற்றும் மலையக தமிழர் எவ்வகை அபிலாஷைகளைக் கொண்டவர்களாக இருக்கிறார்கள் என்பதை அரசு புரிந்துகொள்ளவேண்டும்.



**1. உருவாக்கப்படவுள்ள புதிய அரசியல் சாசனமானது, இந்நாட்டில் வாழும் சகல இன மக்களினதும் அபிலாஷைகளையும் பூர்த்தி செய்வதாக அமையவேண்டும் என்பது அனைவரது பிரார்த்தனையாகவும் காணப்படுகிறது.**

**2. நாட்டில் வாழும் மக்களின் எதிர்பார்ப்புகளுக்கு குந்தகம் ஏற்படாதவகையில் யாப்பு உருவாக்கப்படவேண்டும்.**

**3. புதிய அரசியலமைப்பானது எந்தவொரு மக்களுக்கும் அநீதியை ஏற்படுத்தக்கூடாது.**

**4. தமிழ்ப்பேசும் மக்களின் நீண்ட காலக்கோரிக்கையான அரசியல் தீர்வுத்திட்டம் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படவேண்டும்.**

**5. 13ஆவது திருத்தத்துக்கு அப்பாற்சென்று மாகாண சபைகளுக்கான அதிகாரங்கள் வலுப்படுத்தப்படவேண்டும்.**

**6. சிறுபான்மை மக்களின் ஆலோசனைகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படவேண்டும்.**

**7. மக்கள் உரிமை மற்றும் அவர்களுக்கான ஜனநாயகம் உறுதிப்படுத்தப்படவேண்டும்.**

என்பது பொதுவான எதிர்பார்ப்புகளாக இருந்தபோதும், தமிழ்ப்பேசும் மக்களின் நிலையான எதிர்பார்ப்பு என்பது இணைந்த வடகிழக்கில் மீளப்பெற முடியாத சமஷ்டி முறையிலான அதிகாரப்பகிர்வு வழங்கப்படவேண்டும் என்ற மிக நீண்ட கால அபிலாஷைகளை முன்வைத்துள்ளனர். இந்த செயல்முறை ஒன்றின் மூலமே மிக நீண்ட காலமாக நீறுபூத்த நெருப்பாகவும் கொதிநிலை பெற்றிருக்கும் தமிழ் மக்களுக்கான பிரச்சினைக்கு அமைதியான வழியில் முடிவொன்றை காணமுடியுமென்பது சகல தரப்பினரது ஆலோசனையாக இருந்துவரும் நிலையில், பழையபடி பெரும்பான்மை சமூகத்தின் நலன்களை அடிநோக்கமாகக் கொண்டு சாசனம் மீண்டும் கொண்டுவரப்படுமாயின் அது பழைய குருடி கதவைத்திறவடி என்ற நிலைக்கு நாட்டை மீண்டும் நெருக்கடிக்குள் தள்ளிவிடும் என்பதை ஆட்சியாளர்கள் சாதுரியமாக புரிந்துகொள்ளவேண்டும்.

ஏலவே தேசியப் பிரச்சினைக்கான தீர்வைக்காண்பதற்கான பிரயத்தனங்கள் பல்வேறு தடவைகள் பல்வேறு சந்தர்ப்பங்களில் முன்னெடுக்கப்பட்டபோதும் அவை திட்டமிட்ட வகையில் தோற்கடிக்கப் பட்டதும் கைவிடப்பட்டதுமான நிலையே காணப்பட்டது. பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டன. ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. சர்வதேச வழி முறைகள் நாடப்பட்டன. அரசியல் பொதிகள் என்றும் தீர்வுத்திட்டங்கள் என்றும் பல்வேறு முன்னெடுப்புக்கள் மேற்கொள்ளப்பட்டபோதும் ஏதோ காரணங்களினால் அவை மழுங்கடிக்கப்பட்ட வரலாறே அதிகம். இவ்வாறான கடந்தகால அனுபவங்களின் அடிப்படையில்தான் புதிய ஜனாதிபதியாக பதவியேற்றுக் கொண்டிருக்கும் ரணில் விக்ரமசிங்க குறித்த ஒருவருட காலத்துக்குள் புதிய அரசியல் சாசனத்தை நிறைவேற்றித்தருவேன் என சூளுரைத்துள்ளார். இந்த முயற்சிக்கு எதிர்க்கட்சிகளும் சிறுபான்மை மக்களும் ஆதரவு தரவேண்டுமென பிரதமர் தினேஷ் குணவர்த்தன வினயமான அழைப்பு விடுத்திருக்கிறார். இவை அனைத்தும் அனுகூலமான சூழ்நிலையை காட்டுவதாக வைத்துக்கொண்டாலும் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வை முன்வைக்காத புதிய குடியரசு சாசனமொன்றினால் பயனற்ற நிலை மீண்டும் வந்துவிடக்கூடாது என்பதை ஆட்சியாளர்கள் புரிந்துகொள்ளவேண்டும்.



# கடலில் கலைந்த கனடா கனவு!

• நா.தினுஷா

பொருளாதார நிலைமையைக் காரணங்காட்டி வெளிநாடுகளை நோக்கிய குடிப்பெயர்வுகள் காலங்காலமாக இடம்பெற்றே வருகின்றனர். இலங்கையைப் பொறுத்தவரையில் வீட்டுப் பணியாட்களாகவும், பணியாளர்களாகவும் வெளிநாடுகளுக்கு செல்பவர்கள் இருக்கிறார்கள். அதேபோன்று, கல்வித் தகைமைகளுடன் நிறுவனங்களை இலக்காகக் கொண்டு சிறந்த நிபுணர்களாக வெளிநாடுகளுக்கு செல்பவர்களும் இருக்கிறார்கள்.

நாட்டில் தற்போதுள்ள நிலவரங்களுக்கமைய வெளிநாடுகளை நோக்கிய இடப்பெயர்வுகள் அதிகரித்துவிட்டன. சட்டத்திட்டங்களுக்கு உட்பட்டு பாதுகாப்பான முறையில் வெளிநாடுகளை நோக்கி இடம்பெயர்பவர்களுக்கு அப்பால், தரகர்களின் ஆசை வார்த்தைகளால் சட்டவிரோதமாக வெளிநாடுகளை நோக்கிப் படையெடுப்பவர்களே அதிகமாக இருக்கிறார்கள்.

வெளிநாடு செல்லும் ஆசையில் தமது தாய்நாட்டிலிருக்கும் சொத்துகளைக் கூட விற்றுவிட்டு, அந்தப் பணத்தை வைத்து குடும்பத்துடன் வெளிநாடுகளுக்கு செல்லும் நிலைமை இன்று உருவாகியுள்ளது. சட்டவிரோதமாக வருபவர்களுக்கு தாம் தஞ்சம் வழங்கத் தயாராக இல்லையென்று தெரிவித்து அவுஸ்திரேலியா போன்ற நாடுகள் கடுமையான சட்டத்திட்டங்களை அமுல்படுத்தியிருந்தாலும், சட்டவிரோதமாக படகுகளினூடாக அங்கு சென்று பிடிப்பட்டு மீண்டும் நாட்டுக்குத் திருப்பி அனுப்பி வைக்கப்பட்டவர்கள் ஏராளமாக இருக்கிறார்கள். இன்னும் அங்கிருந்து நாடு திரும்பாமல் அங்கேயே தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களும் இருக்கிறார்கள்.

அதுமாத்திரமின்றி சட்டவிரோதமாக வெளிநாடுகளுக்கு குடிப்பெயர்ந்து சென்று தமது பெறுமதிமிக்க உயிர்களை பலி கொடுத்தவர்களும் இருக்கிறார்கள். அபாயம் என்று தெரிந்தும் இவ்வாறான இடப்பெயர்வுகள் சர்வதேச மட்டத்தில் இலங்கை அகதிகள் என்ற சமூகத்தையே உருவாக்கும் நிலை உருவாகியுள்ளது.

வரலாறுகளைப் பார்த்தால் இலங்கையை பொறுத்தவரையில் வடக்கு பிரதேசங்களைச் சேர்ந்த மக்களே இவ்வாறு வெளிநாடுகளுக்கு செல்லும் நிலை காணப்பட்டது. ஆனால், இன்று தென் பகுதியைச் சேர்ந்த மக்களும் படகுகளினூடாக வெளிநாடுகளுக்கு படையெடுக்குமொரு நிலைமை எழுந்துள்ளது.





சர்வதேச மட்டத்தில் இயங்கும் ஒருசில முகவர்கள், நாட்டுக்குள் தனியான வலையமைப்பை உருவாக்கி, தரகர்களினூடாக ஆசைவார்த்தைக் காட்டி மக்களிடமிருந்து பணம் பறிக்கும் ஒரு சூழ்ச்சிவலை இருக்கிறது என்பதைத் தெரிந்தோ தெரியாமலோ அவர்களின் வலையில் சிக்கிக்கொள்கிறார்கள்.

இவ்வாறானதொரு பின்னணியிலேயே கனடா செல்வதாகப் படகில் சென்று 303 இலங்கையர்கள் கடந்த ஐந்தாம் திகதி வியட்நாமின் தெற்கு வுங் டௌ நகரின் தென்கிழக்கில் சுமார் 258 கடல் மைல்தொலைவில் தத்தளித்துக்கொண்டிருந்தார்கள்.

“நானொரு விவசாயி. நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடியிலிருந்து தப்பித்து நல்ல வாழ்க்கை அமையும் என்ற நம்பிக்கையிலேயே கனடா செல்வதற்காக இந்தப் பயணத்தை ஆரம்பித்தேன். ஆனால், இவ்வளவு பெரிய ஆபத்தில் சிக்கிக்கொள்வேனென்று நான் கருதவில்லை. இந்தப் பயணத்துக்காக இடைத்தரகரொருவருக்கு 15 இலட்சம் ரூபா செலுத்தியுள்ளேன். பல்வேறு சிரமங்களின் மத்தியிலேயே இந்த நிதியைத் திரட்டினேன்” என்று அந்தப் படகில் பயணித்த 37 வயதான வி.மோகனசுவேந்தன் தனது மனக்கவலையை வெளிப்படுத்துகிறார்.

பணத்தை இலக்காகக் கொண்டு முன்னெடுக்கப்படும் ஒருங்கிணைந்த ஆட்கடத்தல் குழுவின் இந்த சூழ்ச்சித் திட்டத்தில் இந்தியா, மலேசியா, சிங்கப்பூர், இந்தோனேசியா போன்ற நாடுகளிலிருந்து முன்னாள் போராளிகள் மற்றும் இலங்கையிலிருந்த முன்னாள் போராளிகளும் இந்தப் படகில் சிக்கியிருந்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

சட்டவிரோத ஆட்கடத்தலுக்கான இந்த சூழ்ச்சியை, இவர்கள் பயணித்த லேடி ஆர் - 3 என்ற ஆழ்கடல் மீன்பிடி படகே வெட்டவெளிச்சத்துக்கு கொண்டுவந்துள்ளது. இந்த மீன்பிடி படகு மியன்மார் நாட்டுக்குரியது என்றும் நீண்ட நாட்கள் மீன்பிடி நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்பட்டதன் பின்னர் பயன்பாட்டுக்கு பொறுத்தமற்றது என்றும் கைவிடப்பட்ட நிலையிலிருந்த படகை மலிவு விலைக்கு பெற்றுக்கொண்டுள்ளதாகவும் அறியக்கிடைக்கிறது.

இந்த விபத்தில் சிக்கிக்கொண்ட

**கனடா செல்ல முயற்சித்து 303 இலங்கையர்கள் ஆழ்கடலில் சிக்கிய விவகாரத்தின் பின்னணியில் சர்வதேச முகவர்கள்.**

**15 இலட்சம் முதல் 20 இலட்சம் ரூபா வரை ஆட்கடத்தல் காரர்களுக்கு சன்மானம்.**

**அகதிகளை ஏற்றிச்சென்ற படகு மியன்மாருக்கு சொந்தமானதென்றும், மீன்பிடி நடவடிக்கை களுக்காக பயன்படுத்தப்பட்ட பழமையானது என்றும் தகவல்.**

**மீண்டும் இலங்கைக்கு வரமட்டோம். அங்கு சென்று அவலப்பட முடியாது. இலங் கைக்கு அழைத்தால் இங்கேயே மாண்டு மடிவோம் எனக் கூறும் அகதிகள்.**

இலங்கையர்கள் நாட்டிலிருந்து விமான நிலையத்தினூடாக சட்டப்பூர்வமாக வெளியேற்றப்பட்டு, மூன்று மாதங்களில் கனடாவை சென்றடைய முடியும் என்று குறிப்பிட்டு தாய்வான் மற்றும் வியட்நாம் ஆகிய நாடுகளுக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர். அதன் பின்னர் தாய்வானுக்கு அழைத்துச் செல்லப்பட்டவர்களை மீண்டும் வியட்நாமுக்கு அழைத்து வந்து அங்கிருந்தே இந்த கடற்பயணத்தை ஆரம்பித்துள்ளதுடன், இவர்கள் வருகை விசாவினூடாகவே இந்த நாடுகளுக்குச் சென்றுள்ளனர்.

வியட்நாமிலிருந்து பயணத்தை ஆரம்பித்து மூன்று வாரங்களாகியும் படகு தென்சீனக் கடலிலேயே பயணித்ததாகவும் கடற்கொந்தளிப்பினால் படகின் இயந்திர அறை சேதமடைந்து கடல் நீர் படகில் உட்புக ஆரம்பித்ததாக படகிலிருந்தவர்கள் தெரிவிக்கிறார்கள். மறுபுறம் கொண்டு சென்ற உணவு, குடிநீர் என்பன முடிந்து விட்டதால் பெரும் சிரமத்தை எதிர்கொள்ள நேர்ந்ததாகவும் படகில் பயணித்தவர்கள் தெரிவிக்கிறார்கள்.

“முகவர் நிலையமொன்றினூடாக கடவுச்சீட்டு செய்துகொண்டேன். இந்த பயணத்துக்காக 20 இலட்சம் ரூபா செலுத்தினேன். என்னையும் என்னுடன் வந்த மற்றையவர்களையும் கடந்த 09ஆம் திகதி வியட்நாமிலிருந்து ஒரு பஸ்ஸில் லேடி ஆர்3 என்ற படகுக்கு அழைத்துச் சென்றார்கள்.

லேடி ஆர்3 படகு மிகவும் சிறியது. மிகவும் பழைமையானது. ஆனால், படகின் கொள்ளவுக்கும் அதிகமானவர்களை ஏற்றிவிட்டார்கள். படகுக்குள் நீர் புகுந்து படகின் தடை விரிசலடைய ஆரம்பித்து விட்டது. அதனால் அனைவரும் பயத்தில் கூச்சலிட ஆரம்பித்து விட்டார்கள். தகவல் வழங்கி அதிகாரிகள் வந்து எங்களை மீட்கும் வரை உயிர் மீதான பயம் எங்களை விட்டு நீங்கவில்லை. மனம் படபடத்துக்கொண்டிருந்தது” என்று அந்த படகில் சென்றவர்களில் ஒருவராக 38 வயதான கேசவன் தெரிவித்துள்ளார்.

“இலங்கையிலிருந்து எங்களை அழைத்து வந்தவர்கள் அனைவரும் நடுக்கடலில் தத்தளிக்க விட்டுவிட்டு ஓடி ஒழிந்துவிட்டார்கள். அவர்களெல்லாம் எங்கு சென்றார்கள் என்ன செய்தார்கள் என்று எதுவும் எங்களுக்கு தெரியாது. நடுக்கடலில் தத்தளித்துக்கொண்டு உயிர்போகும் இக்கட்டானவொரு சூழ்நிலையில் இருந்தோம்.

ஜப்பான் அதிகாரிகளே எங்களை காப்பாற்றினார்கள். இரண்டு நாட்கள் அந்த படகில் பாதுகாப்பின்றியே இருந்தோம். அதன் பின்னர் வியட்நாம் அதிகாரிகளினால் வியட்நாமுக்கு அழைத்து வரப்பட்டோம். இதுவரையில் எங்களுக்கு எந்த முடிவும் கிடைக்கவில்லை. எங்கள் 303 பேருக்கும் தீர்வு வேண்டும்.

மீண்டும் எங்களை இலங்கைக்கே திருப்பி அனுப்பி வைக்கப்போவதாக பேசிக்கொள்கிறார்கள். இலங்கையே எங்களுக்கு வேண்டாம். எங்களுடைய பிள்ளைகளை அழைத்துக்கொண்டு மீண்டும் இலங்கைக்கு செல்லமுடியாது. தமிழர்கள் ஏற்கனவே அநேகமான விடயங்களையும் இழந்தே இந்த நிலைமைக்குள்ளாகியுள்ளோம்.

இலங்கை வேண்டாம். இலங்கைக்கு போகவே மாட்டோம். இலங்கைக்கு போவதென்றால் 303 பேரும் இங்கேயே குடும்பத்தோடு சாகவும் தயார். இலங்கையில் போய் இறப்பதற்கு பதிலாக இங்கேயே செத்து மடிகிறோம். நடுக்கடலிலும் பல்வேறு துயரங்களை அனுபவித்து, இலங்கைக்கு போய் மீண்டும் இந்த கொடூரங்களை அனுபவிக்க முடியாது.

அழுக்கான நீரையே இந்தப் பயணத்தில் நாங்கள் குடித்து வந்தோம். எங்களுடைய குழந்தைகளுக்கும் இந்த அழுக்கான நீரையே வழங்கினோம். இனிமேல் மீண்டும் இலங்கைக்கு போக மாட்டோம். இல்லாவிட்டால் இங்கேயே தற்கொலை செய்துகொள்வோம். எங்களின் பிரச்சினைகள் குறித்து ஐக்கிய நாடுகள் சபை கவனம் செலுத்த வேண்டும்” என்று வியட்நாம் இராணுவ முகாமில் அகதிகளாகவுள்ள பெண்கள் குறிப்பிடுகின்றனர்.

இதுபோன்றவொரு அவலத்தை சந்தித்துள்ள இலங்கை அகதிகளுக்கு மனிதாபிமான அடிப்படையில் ஒத்துழைப்பை வழங்கத் தயாராக இருப்பதாக வியட்நாம் அறிவித்திருந்தாலும் இவர்கள் குறித்து



அதிக கவனம் செலுத்தவேண்டிய கட்டாயம் இலங்கை அரசுக்கு இருக்கிறது என்பதையும் மறுக்கமுடியாது.

வெளிநாடுகளுக்கு செல்வது தொடர்பான சட்டத்திட்டங்கள் கடுமையாக்கப்பட்டிருந்தாலும் இவ்வாறான ஆட்கடத்தல் செயற்பாடுகளை முன்னெடுப்பவர்கள் இருந்துகொண்டே இருக்கிறார்கள். இவ்வாறு மக்களை அகதிகளாக்கும் வலையமைப்புகள் சர்வதேச மட்டத்தில் இருக்கிறது என்றால், தொழில்வாய்ப்புகளுக்காக வெளிநாடு செல்பவர்கள் மிக அவதானத்துடன் செயற்பட வேண்டியது அவசியமாகும். அவ்வாறு இல்லாவிட்டால் அதனால் ஏற்படக்கூடிய பிரதிபலன்களை மக்களே அனுபவிக்க வேண்டி ஏற்படும்.

அதுமாத்திரமின்றி இந்த அகதிகளில் சிறுவர்களும் சிக்கிக்கொண்டுள்ளார்கள். இதனால், அவர்களின் உரிமைகள் மறுக்கப்படுவது மாத்திரமின்றி அவர்களின் கல்வி நடவடிக்கைகளும் பாதிப்புக்குள்ளாகியுள்ளமை பிரச்சினைக்குரிய விடயமாகும்.

இவ்வாறு ஆட்கடத்தல்காரர்களின் வலையில் சிக்கி, தற்போது வியட்நாமில் அகதிகளாக இருக்கும் இலங்கையர்களை பாதுகாப்பாக நாட்டுக்கு அழைத்து வருவோம் என்று வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் அலி சப்ரி 'தமிழன்' வார இதழுக்கு தெரிவித்துள்ளார். இருந்தபோதும் இந்த விடயம் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டியது கட்டாயமாகும்.

★★★★




## ★ ஜனாதிபதித் தேர்தல் அல்லது சர்வசன வாக்கெடுப்பு - தயாராகும் ரணில்

## ★ சுகாதார அமைச்சு ராஜிதவுக்கு - அதிருப்தியில் கெஹேலிய ரம்புக்வெல்ல

## ★ சம்பந்தனுக்கு விருது - நேரடியாக சென்று வாழ்த்திய ஜீவன் தொண்டமான்

## ★ முஸ்லிம் காங்கிரஸ் பேராளர் மாநாட்டுக்கு வராத முக்கியஸ்தர்கள் - அதிரடிக்குத் தயாராகிறாரா ஹரீஸ் எம்.பி?

## ★ நாடாளுமன்ற சபையில் ஹெப்பி பேர்த் டே சொன்ன மனோ - தேவானந்தாவை போனில் வாழ்த்திய ரணில் - டக்ளஸின் பிறந்தநாளை ரணிலுக்கு நினைவூட்டிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பி.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதித் தேர்தலொன்றுக்கு தயாராகி வருவதாக செய்திகள் கசிந்துள்ளன.

அடுத்தவருடம் நாடாளுமன்றத்தின் ஆதரவுடன் சில சட்ட ஏற்பாடுகளை செய்துவிட்டு தேர்தலொன்றுக்கு செல்லலாமென கருதுகிறார் ரணில். அல்லது இப்போதைய பதவிக்காலத்தை நீடிக்க சர்வசன வாக்கெடுப்பொன்றை நடத்தலாமாவென யோசிக்கிறார் ரணில். இது தொடர்பில் கடந்தவாரம் சட்ட ஆலோசனைகளையும் பெற்றுள்ளார் அவர்.

நாடு தற்போதுள்ள நிலைமையில் ஸ்திரமான ஆட்சியொன்று தேவையென கருதப்படுகிறது. அதனால் ஜனாதிபதித் தேர்தலை நடத்தி மீண்டும் பதவியை கைப்பற்ற நினைக்கிறார் ரணில். ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நிலைப்பாடும் அப்படியேதான் இருக்கிறது.

நாடாளுமன்றத் தேர்தல் அடுத்து நடக்கும்போது ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன படுதோல்வியடையும் என்று அக்கட்சியே கருதுகிறது. அதனால் ஜனாதிபதித் தேர்தல் ஒன்றை நடத்தி தங்களுக்கு ஏற்ற ஒருவரை ஜனாதிபதியாக்கி அதன் பின்னர் அந்த பலத்தை வைத்துக்கொண்டு நாடாளுமன்றத் தேர்தல் ஒன்றுக்கு செல்வதற்கு பொதுஜன பெரமுன உத்தேசிப்பதாக தெரிகிறது. அல்லது ஜனாதிபதி பதவியை நீடிப்பதுதான் வழி.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன இவ்வாறு யோசிப்பதற்கு பிரதான காரணம் அண்மையில் அக்கட்சி நடத்திய இரகசிய ஆய்வு ஒன்றாகும். மக்களிடம் தங்களுக்குள்ள செல்வாக்கு குறித்து அக்கட்சி கடந்த சில வாரங்களாக இரகசிய ஆய்வொன்றை நடத்தியது. அந்த ஆய்வின்படி மக்கள் மத்தியில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன மீது ஏற்பட்ட அதிருப்தி இன்னமும் அப்படியே இருப்பது தெரியவந்துள்ளது. இதனால் மாவட்ட ரீதியில் நடத்திய கூட்டங்களை தற்காலிகமாக நிறுத்துவதற்கு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தீர்மானித்துள்ளதாக தெரிகிறது. ஏற்கனவே களுத்துறை, நாவலப்பிட்டி, புத்தளம் ஆகிய பகுதிகளில் கூட்டங்களை பெரமுன நடத்தியபோதும், எதிர்பார்த்தளவான மக்கள் கூட்டம் வரவில்லையென சொல்லப்பட்டது. கம்பஹாவில் இப்படியொரு கூட்டத்தை நடத்த ஏற்பாடு செய்யப்பட்டபோதும், அங்கு இவ்வாறான கூட்டத்தை நடத்த அமைச்சர் பிரசன்ன ரணதுங்க அனுமதிக்கவில்லை.

கடந்த வாரம் நாடாளுமன்ற உணவகத்தில் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க மற்றும் பெரமுனவின் சிரேஷ்ட உறுப்பினர்கள் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் உரையாடிக்கொண்டிருந்தனர். அப்போதும் கட்சியின் கூட்டங்களை நடத்துவது பற்றிய பேச்சு வந்தது.

கட்சியை நாங்கள் கஷ்டப்பட்டு ஆரம்பித்தோம். ஆனால், அடிமட்ட நிலை இப்போது வேதனைமிக்கதாக இருக்கிறது. கட்சியை முதலில் மறுசீரமைத்து அதன் பின்னர் கூட்டங்களை நடத்துவோம். கட்சியின் தொண்டர்கள் அதிருப்தியில் உள்ளனர். முதலில் அவர்களின் குறைகளை - நிறைகளை கேட்டறிவோம் என்று அப்போது குறிப்பிட்டுள்ளார் பிரசன்ன. மஹிந்தவும் இதனை ஆமோதித்துள்ளதாகத் தெரிகிறது.

ஜனாதிபதித் தேர்தலை மனதில் வைத்து செயற்படும் ரணில் விக்கிரமசிங்க ஐக்கிய தேசியக் கட்சியை முழு அளவில் மறுசீரமைக்க முயற்சிகளை எடுத்துள்ளார். அதேபோல் முஸ்லிம் அரசியல் கூட்டணியொன்றை அமைக்க அவரின் ஆலோசனை சிலருக்கு வழங்கப்பட்டுள்ளது. மலையகத்தின் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், தமிழ் முற்போக்கு கூட்டணி ஆகியவற்றின் ஆதரவைப்பெற்று தேர்தலை எதிர்கொள்ளலாமென ரணில் கருதுவதாகத் தெரிகிறது.

வரவு-செலவுத் திட்டம் அடுத்த வாரம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் அமைச்சரவையில் மாற்றங்களை செய்யவுள்ளார் ரணில். சுகாதார அமைச்சை ராஜித சேனாரத்னவுக்கு வழங்க ரணில் முயற்சிக்கிறார். ஆனால், சுகாதார அமைச்சை தன்னிடமிருந்து பறித்தால் உறுப்பினர்கள் பலருடன் எதிர்க்கட்சிக்கு சென்றுவிடுவேன் என்று இப்போதைய சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல தனது நெருக்கமான சகாக்களிடம் கூறியிருப்பதாக சொல்லப்படுகிறது.

சுகாதார அமைச்சுப் பொறுப்பில் மாற்றங்களை செய்ய ஜனாதிபதி ரணில் தீர்மானித்துள்ளமைக்கு இன்னொரு காரணம் உள்ளது. இலங்கை மருந்துப்பொருட்களை கொள்வனவு செய்ய இந்தியா வழங்கியுள்ள கடனுதவித் திட்டத்தை அரசியல்வாதி ஒருவரின் அதிகாரம் கொண்ட உறவினர் ஒருவர் துஷ்பிரயோகம் செய்வதாக ஜனாதிபதி மட்டத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. மருந்துப்பொருட்களை கொள்வனவு செய்வதில் ஊழல்கள் இடம்பெறும் நிலைமை ஏற்பட்டுள்ளதாகவும் இந்தியக் கடனுதவியில் அவ்வாறான செயற்பாடுகளுக்கு அனுமதியளிக்க முடியாதெனவும் இந்திய தரப்பில் இராஜதந்திர மட்டத்தில் அரசுக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது. இதனால் அடுத்த அமைச்சரவை மாற்றத்தில் சுகாதார அமைச்சை ரணில் மாற்றியே தீருவாரென சொல்லப்படுகிறது.

இதற்கிடையில் ஜனாதிபதிக்கு நெருக்கமான அதிகாரி ஒருவர் கொழும்பிலுள்ள ஆசிய தூதரகம் ஒன்றிடம் கையூட்டல் பெற முயன்றார் என்ற செய்திகள் வெளிவந்துள்ளன. குறிப்பிட்ட தூதரகம் சுகாதாரப் பணியாளர்களை தனது நாட்டுக்கு வேலைக்கமர்த்த நடத்திய பேச்சு ஒன்றின்போது, அதில் தனக்கு இருக்கும் நன்மை என்று அந்த அதிகாரி வினவியதாகவும், இனி அந்த பணியாட்களை அனுப்பும்போது தன்னூடாகவே அனுப்பவேண்டுமெனவும் அந்த அதிகாரி கேட்டுக்கொண்டதாகவும் சொல்லப்படுகிறது. சுகாதார அமைச்சு விடயமென்பதால் இதனையும் கவனத்திற்கொண்டுள்ள ஜனாதிபதி இவ்வாறான விடயங்களை கையாள

புதிய அமைச்சரை அறிவுறுத்துவாரென அறியமுடிந்தது.

### முஸ்லிம் காங்கிரஸின் மாநாடு

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் உயர்பீடக் கூட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை கட்சித் தலைமையகமான தாருஸலாமில் நடைபெற்றது. இந்த கூட்டத்தினையடுத்து மறுநாள் புத்தளத்தில் அக்கட்சியின் பேராளர் மாநாடும் நடந்தது.

குறிப்பாக கட்சியை விட்டு இடைநிறுத்தப்பட்ட பைஸல் ஹாசிம், எம்.எஸ்.தௌபீக் ஆகிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் பேராளர் மாநாட்டில் கலந்துகொண்டார்கள். நாடாளுமன்ற உறுப்பினர் ஹரிஸ் கலந்துகொள்ளவில்லை.

குறிப்பாக கட்சியை விட்டு இடைநிறுத்தப்பட்டவர்களுக்கு பதவிகள் வழங்கக் கூடாதென உயர்பீட உறுப்பினர்களுக்கு மத்தியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. இருந்த போதும் கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம், ஹாபீஸ் நஸீர், எச்.எம். ஹரீஸ் தவிர்ந்த ஏனைய இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் பதவிகள் வழங்க வேண்டும் என்று விடாப்பிடியாக இருந்தார்.

இதன் காரணமாக நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தௌபீக் கட்சியின் தேசிய அமைப்பாளராக தேர்வுசெய்யப்பட்டார். கட்சியின் பொருளாளராக நாடாளுமன்ற உறுப்பினர் பைஸல் காசிம் தெரிவு செய்யப்படார்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஐ.எம்.மன்சூர் பிரதித் தலைவராகவும், முன்னாள் இராஜாங்க அமைச்சர் அலிசாஹீர் மௌலானா பிரதித் தலைவராகவும், முன்னாள் மாகாண அமைச்சர் உதுமாலெப்பை பிரதி தேசிய அமைப்பாளராகவும் நியமிக்கப்பட்டனர்.

கட்சியின் ஸ்தாபக செயலாளர் சட்டத்தரணி எஸ்.எம்.ஏ.கபூர் மீண்டும் பிரதித் தலைவராக தெரிவுசெய்யப்படார். தவிசாளராக முழக்கம் மஜீத், செயலாளராக சட்டத்தரணி நிஸாம் காரியப்பர், தலைவராக ரவூப் ஹக்கீம் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

முன்னாள் இராஜாங்க அமைச்சர் எச்.எம்.ஏ.ஹரீஸ் பேராளர் மாநாட்டில் கலந்துகொள்ளவில்லை. முன்னாள் மாகாண சபை உறுப்பினர்கள் எல்.தவம், ஆரிப் சம்சுதீன், ஷிப்லி பாரூக், அட்டாளைச்சேனை பிரதேச சபைத் தலைவர் அமானுல்லா, கல்முனை மேயர் ரகீப் ஆகியோர் கலந்துகொள்ளாமை குறித்து கூட்டத்தில் பலரும் பேசிக்கொண்டனர்.

பேராளர் மாநாட்டில் கலந்துகொள்ள அமைச்சர் ஹாபீஸ் நஸீர் நாடாளுமன்ற தொகுதியான ஏறாவூரில் இருந்து பலர் வந்தபோதிலும், அவர்கள் கூட்டத்திற்குள் அனுமதிக்கப்படவில்லை. ஹாபீஸ் நஸீரை மீண்டும் கட்சிக்குள் சேர்க்குமாறு அவர்கள் பிரச்சினைகளை ஏற்படுத்தலாமென கருதி இவ்வாறான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. எனினும், முன்னாள் எம்.பி. அலிஸாஹிர் மௌலானா சுட்டிய ஆட்கள் மட்டும் பேராளர் மாநாட்டில் கலந்துகொள்ள அனுமதிக்கப்பட்டனர்.


முஸ்லிம் காங்கிரஸின் மாநாடு


சம்பந்தன் - ஜீவன் தொண்டமான் சந்திப்பு

கட்சியில் மன்னிப்பு கேட்காத, பேராளர் மாநாட்டில் கலந்துகொள்ளாத ஹரீஸ் எம்.பி. அரசாங்கத்தின் வரவு-செலவுத் திட்டத்திற்கு ஆதரவளிப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. எவ்வாறாயினும் ஹரீஸை கட்சியில் சேர்த்து செயற்பட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தரப்பொன்று முயற்சிகளை எடுத்துவருவதாக தெரிகிறது. இதற்கிடையில் புதிய அரசியல் நகர்வொன்றை மேற்கொள்ள ஹரீஸ் எம்.பி. தயாராகிவருவதாக கிழக்குச் செய்திகள் சொல்கின்றன. கிழக்கு மாகாண புத்திஜீவிகளை கொண்டு புதிய அரசியல் அணியொன்றை ஹரீஸ் ஆரம்பிக்கவேண்டுமென சில தரப்பால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ள நிலையில், அதற்கான ஆரம்பகட்ட வேலைகளை ஹரீஸ் செய்துவருவதாக அறியமுடிகின்றது.

### சம்பந்தன் - ஜீவன் தொண்டமான் சந்திப்பு

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தனுக்கு ஜனநாயகப் பொன் விருது கடந்த வாரம் வழங்கப்பட்டது. இன்ஸிரியூட் ஒப் பொலிட்டிக்ஸ் நிறுவனத்தால் இந்த விருது வழங்கப்பட்டது.

இந்த விருது ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்காக தன்னை அர்ப்பணித்த மூத்த அரசியல் பிரமுகரை அங்கீகரிப்பதற்காக வழங்கப்படுகின்றது.

இன்ஸிரியூட் ஒப் பொலிட்டிக்ஸ் நிறுவனத்தின் வருடாந்த டிப்ளோமா சான்றிதழ் வழங்கும் நிகழ்வு இலங்கை அறக்கட்டளை நிறுவனத்தில் நடைபெற்றது. இதில் பாடநெறியை முடித்த 75 பேர் டிப்ளோமா பட்டத்தைப் பெற்றனர்.

இந்த வருடாந்த டிப்ளோமா வழங்கும் விழாவில் ஜனநாயகம் மற்றும் நல்லிணக்கம் ஆகிய பாடங்களுக்காகத் தன்னை அர்ப்பணித்த புகழ்பெற்ற அரசியல் பிரமுகர்களின் மதிப்பீடு நடத்தப்படுகின்றது.

அதற்கமைய, அதில் இரா.சம்பந்தன், வாழ்நாளில் ஒருமுறை மட்டுமே கிடைக்கும் ஜனநாயகப் பொன் விருதைப் பெற்றார். நான்கு தசாப்த கால நாடாளுமன்ற வாழ்க்கையில் ஜனநாயகத்துக்காக சம்பந்தன் காட்டிய அர்ப்பணிப்பை மதிப்பிடுவதே இதன் நோக்கமாகும் என்று தெரிவிக்கப்பட்டது.

விருது பெற்ற சம்பந்தனை வாழ்த்துவதற்கு கடந்த வியாழக்கிழமை அவரது இல்லத்திற்கு சென்றது இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் குழு. இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமான், பொதுச் செயலாளர் ஜீவன் தொண்டமான், போஷகர் சிவராஜா, பிரதி தலைவி அனுஷியா சிவராஜா, சிரேஷ்ட சட்ட ஆலோசகர் மாரிமுத்து ஆகியோர் நேரில் சென்று வாழ்த்துகளை தெரிவித்தனர்.

இரா.சம்பந்தன் ஆற்றிய சேவைகளுக்காக இவ்விருது பல வருடங்களுக்கு முன்னதாக கிடைத்திருக்க வேண்டியது என்றும், இவ்விருதானது தங்களுடைய அளப்பரிய சேவையை எடுத்துக் காட்டுகிறது எனவும் இவ்விருது கிடைத்தமைக்கு முழு மலையக மக்கள் சார்பாகவும் வாழ்த்துகளை தெரிவிப்பதாகவும் இ.தொ.கா. இங்கு தெரிவித்தது.

இரா.சம்பந்தன் இ.தொ.காவின் வாழ்த்துகளுக்கு தனது நன்றிகளை தெரிவித்ததுடன், தனக்கும் மறைந்த தலைவர் சௌமியமூர்த்தி தொண்டமானுக்குமிடையிலான நட்புறவையும் இங்கு நினைவுபடுத்தினார்.

மறைந்த தலைவர் சௌமியமூர்த்தி தொண்டமான் எனது சிறந்த நண்பர். அவருடன் இணைந்து பல அறிவுபூர்வமான கலந்துரையாடல்களில் ஈடுபட்டுள்ளோம். மலையக மக்களுக்கு அவர் ஆற்றிய சேவைகள் வரலாற்று சாதனை படைத்தவை என்றும், அரசாங்கத்தால் மலையக மக்களின் பிரஜாவுரிமை பறிக்கப்பட்டு, முகவரியற்ற சமூகமாக மாற்றப்பட்டபோது அம்மக்களுக்காக அரசாங்கத்திற்கு எதிராக முன்னின்று பல போராட்டங்கள் செய்து, அதை வெற்றிகொண்டு, மலையக மக்களுக்காக பிரஜாவுரிமையை பெற்றுக்கொடுத்து அவர்களை ஒரு ஆளும் சமூகமாக மாற்றினார். அவருடைய அரசியல் சாணக்கியத்தை ஈடு செய்ய முடியாது. சௌமியமூர்த்தி தொண்டமான் எங்களுக்கு நல்ல பல ஆலோசனைகளை வழங்கிய ஒரு தலைவர். எங்களின் பிரச்சினைகளுக்கு அவர் எங்கள் பக்கம் நின்று ஒத்துழைத்துள்ளார். அவரின் சேவைகளை நாங்கள் மறக்கவில்லை. அந்தப் பணியை நீங்கள் இளவயதில் தொடரவேண்டும். மலையகத் தலைவர்கள் எல்லோரும் ஒற்றுமையாக செயற்படவேண்டும். நாங்களும் உங்கள் பிரச்சினைகளின்போது உங்களுடன் இருப்போம்.

என்று சம்பந்தன் ஜீவன் தொண்டமானிடம் கூறியுள்ளார்.

### டக்ளஸை சபையில் வாழ்த்திய ரணில், மனோ

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தாவின் 65ஆவது பிறந்த நாள் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றதால் அன்று அவருக்கு பலதரப்பிலும் பிறந்த நாள் வாழ்த்துகள் தெரிவிக்கப்பட்டன. முன்னாள் ஜனாதிபதி மஹிந்த, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் ஆகியோர் தொலைபேசியூடாக வாழ்த்துகளை தெரிவித்தனர்.

அன்றைய தினம் நாடாளுமன்றத்தில் அமைச்சர் டக்ளஸ் உரையாற்றும்போது இடையில் குறுக்கிட்டார் மனோ கணேசன் எம்.பி. அமைச்சர் பேசும்போது ஒழுங்குப் பிரச்சினையொன்றை மனோ எம்.பி. எழுப்புவது குறித்து சபாநாயகர் ஆசனத்தில் இருந்த பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ வியப்புடன் நோக்கினார்.

அமைச்சர் டக்ளஸுக்கு பிறந்த நாள் வாழ்த்துகள். தமிழ் மக்களுக்கான உங்களின் சேவைகள் தொடர வாழ்த்துகிறேன் என்று தெரிவித்துவிட்டு அமர்ந்தார் மனோ கணேசன்.

நாடாளுமன்ற அமர்வுகள் முடிந்து தனது அலுவலகம் திரும்பிக்கொண்டிருந்த டக்ளஸை தொலைபேசியில் அழைத்த ரணில், டக்ளஸ் உங்களுக்கு இன்று பிறந்த நாளல்லவா? மறந்துபோனேன்.. இனிய பிறந்த நாள் வாழ்த்துகள்.. எனக்கு இதனை சுமந்திரன்தான் நினைவூட்டினார் என்று சத்தமாக சிரித்தபடியே சொன்னாராம் ஜனாதிபதி ரணில்.

### தமிழ்ப்படத்தை குடும்பத்துடன் பார்த்து ரசித்த நாமல்

நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ நேற்று முன்தினம் வன்கோல்பேஸ் கட்டடத் தொகுதியின் சினிமா அரங்கில் பொன்னியின் செல்வன் திரைப்படத்தை குடும்பத்துடன் பார்த்து ரசித்தார்.

இயக்குனர் மணிரத்னத்தின் ரசிகரான நாமல் அவரின் படங்களில் இது தமக்கு மிகவும் பிடித்துவிட்டதாக அவரின் துணைவியாரிடம் கூறினாராம்.

ஆர்.சிவராஜா
mesivaraj@yahoo.com

# ராஜீவ்காந்தி கொலையும்.. கைதும்.. விடுதலையும்..

**ராஜீவ் கொலை சந்தேகநபர்கள் 31 வருடங்களுக் குப் பின்னர் விடுதலை**

## முழுவிபரம்

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி 1991ஆம் ஆண்டு மே மாதம் 21ஆம் தேதி சென்னைக்கு அருகில் உள்ள ஸ்ரீ பெரும்புதூரில் தற்கொலைப்படைக் குண்டுதாரி ஒருவரால் கொல்லப்பட்டார்.

இன்று வரையிலும் இந்த வழக்கு சூடு குறையாத பேசுபொருளாகவே இருந்து வரும் நிலையில், ராஜீவின் கொலைக்கு முன்னும் பின்னும் என்ன நடந்தது? வழக்கு கடந்து வந்த பாதை என்ன என்பதை ஆண்டுவாரியாக விளக்கும் இந்தக் கட்டுரையை உங்களுக்காக மறுபகிர்வு செய்கிறோம்.

**1991 மே 20:** ஆந்திரா, கர்நாடகா மற்றும் தமிழ்நாடு பகுதிகளில் தேர்தல் பொதுக்கூட்டங்களில் கலந்துகொள்வதற்காக வாடகைக்கு அமர்த்தப்பட்டிருந்த கிங் ஏர் விமானத்தில் புறப்பட்டார் ராஜீவ்காந்தி.

**1991 மே 21 மாலை 6.30 மணி:** விசாகப்பட்டணத்தில் இருந்து ராஜீவ் காந்தி சென்னை நோக்கிப் புறப்பட்டார்.

**1991 மே 21 இரவு 8.20 மணி:** சென்னை பழைய மீனம்பாக்கம் விமான நிலையத்தில் விமானம் தரையிறங்கியது. அங்கிருந்து வாழப்பாடி ராமமூர்த்தி, மரகதம் சந்திரசேகர், பாதுகாப்பு அதிகாரிகள் ஆகியோருடன் புறப்பட்டார் ராஜீவ்.

**1991 மே 21 இரவு 9 மணி:** போரூரிலும் பூந்தமல்லியிலும் இரண்டு தேர்தல் பொதுக்கூட்டங்களில் பேசிவிட்டு ஸ்ரீ பெரும்புதூரை நோக்கிப் புறப்பட்டார் ராஜீவ்காந்தி.

**1991 மே 21 இரவு 10.10 மணி:** ஸ்ரீபெரும்புதூரை வந்தடைந்த ராஜீவ் காந்தி இந்திரா காந்தியின் சிலைக்கு மாலை அணிவித்துவிட்டு மைதானத்தை நோக்கி நடந்தார்.

**1991 மே 21 இரவு 10.20 மணி:** லதா கண்ணன் என்பவரும் அவருடைய மகள் கோகிலாவும் நின்று கொண்டிருந்தனர். கோகிலா ராஜீவிடம் கவிதை ஒன்றைப் படித்தார். அடுத்ததாக சல்வார் கமீஸ் அணிந்திருந்த பெண்மணி ஒருவர் ராஜீவின் கழுத்தில் மாலை அணிவித்துவிட்டு கீழே குனிந்தார். அடுத்த வினாடி மிகப் பெரிய வெடிச் சத்தம் கேட்டது. அங்கே இரத்தமும் சதையும் சிதறிக்கிடந்தன.

**1991 மே 21 மே 10.25 மணி;** ராஜீவ்காந்தி, லதா கண்ணன், கோகிலா, சல்வார் கமீஸ் அணிந்திருந்த பெண், ராஜீவ் காந்தியின் பாதுகாப்பு அதிகாரி, மாவட்ட காவல்துறை அதிகாரி முகமது இக்பால் உள்ளிட்ட 9 காவலர்கள் உயிரிழந்தனர்.

**1991 மே 21 இரவு:** ராஜீவ் காந்தி அணிந்திருந்த லோட்டோ ஷூக்கள் மூலம் அவரது உடலை ஜி.கே. மூப்பனார் அடையாளம் கண்டார். அவரது உடல் ஒரு பொலிஸ் வாகனத்தில் ஏற்றப்பட்டு பிரேதப் பரிசோதனைக்காக சென்னை அரசு தலைமை மருத்துவமனைக்கு (இப்போது ராஜீவ் காந்தி அரசு தலைமை மருத்துவமனை)அனுப்பப்பட்டது.

**1991 மே 22:** ஸ்ரீ பெரும்புதூர் பொலிஸ் நிலையத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்யப்பட்டது. குற்ற எண்: 329/91

**1991 மே 24:** மத்தியப் புலனாய்வுத்துறை புதிதாக ஒரு வழக்கைப் பதிவுசெய்தது. வழக்கு எண் - RC 9/S/91/CBI/SCB/MADRAS. இதையடுத்து வழக்கு தமிழ்நாடு பொலிஸ்துறையிடமிருந்து சி.பி.ஐக்கு மாற்றப்பட்டது.

**1991 மே 29:** சந்தேகத்திற்குரிய கொலையாளி, அவர் அருகில் நின்று கொண்டிருந்த குர்தா பைஜாமா அணிந்த நபர் ஆகியோரின் படங்களை சிறப்புப் புலனாய்வுக்குழு வெளியிட்டது.

**1991 ஜூன் 11:** நளினியின் தாயார் பத்மா, சகோதரர் பாக்கியநாதன் ஆகியோர் கைதுசெய்யப்பட்டனர். இந்த வழக்கு தொடர்பான முதல் கைது இதுதான்.

**1991 ஜூன் 14:** நளினி, முருகன் ஆகிய இருவரும் சைதாப்பேட்டை பஸ் நிறுத்தத்தில் கைதுசெய்யப்பட்டனர். இதற்கடுத்ததாக, பேரறிவாளன், ராபர்ட் பயஸ், ஜெயக்குமார் ஆகியோர் கைதுசெய்யப்பட்டனர்.

**1991 ஜூன் 18:** ராபர்ட் பயஸ் கைதுசெய்யப்பட்டார்.

**1991 ஜூன் 19:** பேரறிவாளன் கைது

**1991 ஜூன் 26:** ஜெயக்குமார் கைது.

**1991 ஜூலை 02:** சென்னையின் பிரபல புகைப்படக் கலைஞர் சுபா சுந்தரம் கைது.

**1991 ஜூலை 17:** கோடியக்கரை ஜமீன்தார் சண்முகம் கைதுசெய்யப்பட்டார். ஜூலை 20ஆம் தேதி ஒரு மரத்தில் தொங்கிய நிலையில் அவர் சடலமாகக் கண்டுபிடிக்கப்பட்டார்.

**1991 ஜூலை 27:** புலிகள் அமைப்பைச் சேர்ந்த விக்கி, ரகு ஆகிய இருவரும் கோயம்புத்தூரில் பிடிபட்டனர். இதற்கு அடுத்த நாள் டிக்ஸன், குணா என்ற இருவர் சயனைட் அருந்தி உயிரிழந்தனர்.

**1991 ஆகஸ்ட் 17:** கர்நாடகத்தின் முதாடி, பிருடா பகுதிகளில் தங்கியிருந்த புலிகள் இயக்கத்தினரை பொலிஸார் சுற்றி வளைத்ததும் 17 பேர் சயனைட் அருந்தினர். 12 பேர் இறந்துவிட, ஐந்து பேர் காப்பாற்றப்பட்டனர்.

**1991 ஓகஸ்ட் 19:** பெங்களூரின் புறநகர்ப் பகுதியில் ஒரு வீட்டில் தங்கியிருந்த சிவராசன், சுபா, நேரு, சுரேஷ் மாஸ்டர், அம்மன், சாரதி ஒருவர் உள்ளிட்டோர் தற்கொலை செய்துகொண்டனர். பொலிஸார் சுற்றிவளைத்ததால், அவர்கள் இந்த நடவடிக்கையில் இறங்கினர்.

**1992 ஜனவரி 31:** பிரபாகரன், பொட்டு அம்மான், அகிலா ஆகிய மூவரும் தலைமறைவு குற்றவாளிகளாக அறிவிக்கப்படுகிறார்கள்.

**1992 மே 20:** 55 பக்க குற்றப் பத்திரிகை தாக்கல்செய்யப்பட்டது. 41 பேர் மீது குற்றம் சுமத்தப்பட்டது. 3 பேர் தலைமறைவாக இருந்தவர்கள். தற்கொலை செய்துகொண்டவர்கள் 12 பேர். சிறையில் இருந்தவர்கள் 26 பேர்.

**1993 மே 5:** பிராசிக்யூஷன் தரப்பின் தலைமை வழக்கறிஞர் பி.ராஜமாணிக்கம், சிறப்பு நீதிமன்ற நீதிபதி எஸ்.எம்.சித்திக் முன்பாக தனது வாதத்தைத் தொடங்கினார்.

**1994 டிசம்பர்:** இன்டர்போல் மூலமாக பிரபாகரன் மற்றும் பொட்டு அம்மானை கைதுசெய்ய வேண்டுமென இன்டர்போல் மூலம் ரெட் கோர்னர் நோட்டீஸ் அனுப்பியது சி.பி.ஐ.

**1995 ஜூன்:** பிரபாகரன் உள்ளிட்ட மூன்று பேரைக் கைதுசெய்து இந்தியாவுக்கு அனுப்ப வேண்டுமென முறைப்படி இலங்கையிடம் கோரியது இந்தியா.

**1998 ஜனவரி 28:** ராஜீவ் காந்தி வழக்கில் குற்றம்சாட்டப்பட்டிருந்த 26 பேருக்கும் மரண தண்டனை விதித்து சிறப்பு நீதிமன்றம் தீர்ப்பளித்தது. தண்டிக்கப்பட்டோர் தரப்பில் உச்ச நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்தனர்.

**1999 மே 11:** 1998 செப்டெம்பர் முதல் 1999 ஜனவரி வரை உச்ச நீதிமன்றத்தில் வழக்கு நடைபெற்றது. கே.டி.தாமஸ், டி.பி.வாத்வா, சையத் ஷா முகமது கத்ரி ஆகியோர் விசாரித்தனர். மே 5ஆம் தேதி தீர்ப்பு வழங்கப்பட்டது. அந்தத் தீர்ப்பில் நளினி, சாந்தன், முருகன், பேரறிவாளன் ஆகிய நால்வருக்கு மட்டும் மரண தண்டனை உறுதிசெய்யப்பட்டது. ராபர்ட் பயஸ், ஜெயக்குமார், ரவிச்சந்திரன் ஆகியோரது மரண தண்டனை ஆயுள் தண்டனையாக மாற்றப்பட்டது. தடா சட்டப்படி குற்றம்சாட்டப்பட்ட சண்முக வடிவேலு குற்றமற்றவர் என விடுவிக்கப்பட்டார். மற்ற 18 பேரும் குற்றம் சாட்டப்பட்டதைவிட தீவிரம் குறைந்த குற்றங்களையே புரிந்ததாக நீதிமன்றம் கூறியது. அவர்கள் அதுவரை சிறையில் இருந்த காலத்தையே தண்டனைக் காலமாகக் கருதி விடுதலைசெய்யப்பட்டனர்.

**1999 ஒக்டோபர் 8:** உச்ச நீதிமன்றத் தீர்ப்ப எதிர்த்து சி.பி.ஐ. தாக்கல் செய்த மேல் முறையீட்டு மனு தல்ளுபடி செய்யப்பட்டது.

**1999 ஒக்டோபர் 10:** தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட நான்கு பேரும் ஆளுநருக்கு கருணை மனுக்களை அனுப்பினர்.

**1999 ஒக்டோபர் 29:** ஆளுநர் பாத்திமா பீவி இந்தக் கருணை மனுக்களைத் தள்ளுபடி செய்தார். தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட நால்வரும் ஆளுநர் தன்னிச்சையாக முடிவெடுத்ததாகக் கூறி உயர் நீதிமன்றத்தை அணுகினர்.

**1999 நவம்பர் 25:** ஆளுநரின் உத்தரவை இரத்து செய்த உயர் நீதிமன்றம் அமைச்சரவை முடிவின் மீதே ஆளுநர் முடிவெடுக்க வேண்டுமெனக் கூறியது.

**2000 ஏப்ரல் 19:** இந்த விவகாரம் குறித்த மு.கருணாநிதி தலைமையிலான அமைச்சரவை கூடி விவாதித்தது. இதில் நளினியின் தூக்குத் தண்டனையை ஆயுள் தண்டனையாகக் குறைக்க ஆளுநருக்குப் பரிந்துரைக்க முடிவெடுக்கப்பட்டது.

**2000 ஏப்ரல் 24:** தமிழக அரசு வெளியிட்ட அரசாணையின் மூலம் நளினியின் தூக்குத் தண்டனை ஆயுள் தண்டனையாகக் குறைக்கப்பட்டது.

**2000 ஏப்ரல் 26:** நளினியின் தூக்குத் தண்டனை ஆயுள் தண்டனையாகக் குறைக்கப்பட்ட நிலையில், மீதமிருந்த பேறிவாளன், சாந்தன், முருகன் ஆகிய மூவரும் குடியரசுத் தலைவருக்கு கருணை மனுக்களை அனுப்பினர்.

**2000 - 2007:** இந்த காலகட்டத்தில் குடியரசுத் தலைவர்களாக இருந்த கே.ஆர்.நாராயணன், ஏ.பி.ஜே. அப்துல் கலாம் ஆகியோர் கருணை மனுக்களை நிலுவையில் வைத்தனர்.

**2006 செப்டம்பர் 14**: பத்தாண்டுகளுக்கு மேல் சிறையில் இருந்த 472 ஆயுள் தண்டனைக் கைதிகளை விடுவிப்பதாக தமிழக அரசு அரசாணை வெளியிட்டது. இருந்தாலும் நளினி, ராபர்ட் பயாஸ், ஜெயக்குமார், ரவிச்சந்திரன் ஆகியோருக்கு இந்த அரசாணை மூலம் விடுதலை கிடைக்கவில்லை. இதனை எதிர்த்து நளினி நீதிமன்றத்தை நாடினார்.

**2008 செப்டம்பர் 24:** நளினியின் மனுவை உயர் நீதிமன்றம் தள்ளுபடி செய்தது. மேல் முறையீட்டிலும் இந்த மனு தள்ளுபடி செய்யப்பட்டது.

**2007:** குடியரசுத் தலைவராக பிரதீபா பாட்டீல் இருந்த காலகட்டத்தில் இந்தக் கருணை மனு மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டது.

**2011 ஓகஸ்ட் 12:** கருணை மனுக்கள் தள்ளுபடி செய்யபப்பட்டதாக குடியரசுத் தலைவர் அறிவித்தார். செப்டெம்பர் மாதத்தில் அவர்கள் தூக்கிலிடப்படலாம் என செய்திகள் வெளியாயின.

**2011 ஓகஸ்ட்:** தங்களுடைய கருணை மனுக்கள் கடந்த 11 ஆண்டுகளாக நிலுவையில் வைக்கப்பட்டதால் தாங்கள் தினமும் துன்பத்தை அனுபவித்ததாகவும் அதனால், தங்களுடைய மரண தண்டனையை இரத்து செய்ய வேண்டுமென்றும் கோரி சென்னை உயர் நீதிமன்றத்தில் மூவரும் வழக்குத் தொடர்ந்தனர். மனுவை விசாரணைக்கு ஏற்ற நீதிமன்றம், மூவரையும் தூக்கிலிட தடை விதித்தது. பிறகு இந்த வழக்கு உச்ச நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டது.

**2014 பிப்ரவரி 18:** பல ஆண்டு காலம் மூவரது கருணை மனுக்களும் எந்தக் காரணமுமின்றி நிலுவையில் இருந்ததால் பேரறிவாளன், சாந்தன், முருகன் ஆகியோரது மரண தண்டனை இரத்து செய்யப்படுவதாக சதாசிவம் தலைமையிலான மூன்று நீதிபதிகள் அடங்கிய அமர்வு தீர்ப்பளித்தது.

**2014 பிப்ரவரி 19:** தமிழக அமைச்சரவை எடுத்த தீர்மானத்தின்படி ராஜீவ் கொலையில் குற்றஞ்சாட்டப்பட்ட அனைவரும் விடுவிக்கப்படுவதாக முதலமைச்சர் ஜெயலலிதா அறிவித்தார். குற்றவியல் நடைமுறைச் சட்டப்படி, வழக்கை மத்தியப் புலனாய்வுத்துறை விசாரித்திருந்தால் மத்திய அரசுக்குத் தெரிவிக்க வேண்டுமென கூறப்படுவதால் மத்திய அரசுக்கு தெரியப்படுத்தவதாகவும் மூன்று நாட்களில் 7 பேரும் விடுவிக்கப்படுவார்கள் என்றும் ஜெயலலிதா கூறினார்.

**2014 பிப்ரவரி:** தமிழக அரசின் முடிவை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தை அணுகியது மத்திய அரசு. 7 பேரையும் மூன்று நாட்களுக்குள் விடுவிக்க தடையாணையும் பெறப்பட்டது. சி.பி.ஐ. விசாரித்த வழக்குகளில் மத்திய அரசின் ஒப்புதல் இல்லாமல் விடுவிக்க முடியாது என்று கூறியது மத்திய அரசு.

**2014 ஏப்ரல் 25:** இந்த வழக்கில் மத்திய - மாநில அரசின் அதிகாரம் சம்பந்தப்பட்ட விவகாரங்கள் வருவதால், வழக்கு 5 நீதிபதிகள் அடங்கிய அரசியல் சாசன அமர்வுக்கு மாற்றப்பட்டது.

**2015 டிசம்பர் 2:** மத்திய புலனாய்வுத்துறை விசாரித்த வழக்கின் குற்றவாளிகளை மத்திய அரசின் ஒப்புதல் இல்லாமல் விடுவிக்க முடியாது என இப்ராஹிம் கலிபுல்லா தலைமையிலான ஐந்து பேர் அடங்கிய அமர்வு தீர்ப்பளித்தது. ஆனால், 161வது பிரிவின் கீழ் விடுதலை செய்தால் மத்திய அரசின் ஒப்புதல் தேவையில்லையெனக் கூறியது. இந்தக் கருத்துகளின் அடிப்படையில் வழக்கைத் தீர்மானிக்க, மூன்று பேர் அடங்கிய அமர்வுக்கு வழக்கு மாற்றப்பட்டது.

**2016 மார்ச் 2:** 7 பேரையும் விடுவிக்க அனுமதி கோரி மத்திய அரசுக்கு கடிதம் அனுப்பியது தமிழக அரசு.

**2018 செப்டெம்பர் 6:** 7 பேரையும் விடுவிப்பது குறித்து அரசியல் சாசனத்தில் 161ஆவது பிரிவின் கீழ் ஆளுநர் முடிவெடுக்க வேண்டுமென ரஞ்சன் கோகய் தலைமையிலான உச்ச நீதிமன்ற மூவர் அமர்வு தீர்ப்பளித்தது.

**2018 செப்டெம்பர் 9:** சாந்தன், முருகன், பேரறிவாளன், நளினி, ரவிச்சந்திரன், ராபர்ட் பயஸ், ஜெயக்குமார் ஆகிய 7 பேரையும் விடுவிக்க தமிழக அமைச்சரவை தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியது.

**2021 மே 20:** தமிழ்நாடு அமைச்சரவைத் தீர்மானத்தை ஏற்று, ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தண்டிக்கப்பட்டு சிறையில் உள்ள 7 பேரையும் விடுதலை செய்ய ஆணையிட வேண்டுமென குடியரசுத் தலைவருக்கு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் கடிதம் எழுதினார்.

**2022 மே 18:** இந்த வழக்கில் ஆயுள் தண்டனை அனுபவித்துவந்த ஏ.ஜி.பேரறிவாளன் உச்ச நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டார். 2018இல் இந்த 7 பேரையும் விடுதலை செய்ய தமிழ்நாடு அரசு அளித்த பரிந்துரையின் மீது செயல்பட ஆளுநர் காலவரம்பற்ற தாமதம் செய்த நிலையில், உச்ச நீதிமன்றம் தமக்கு உள்ள சிறப்பு அதிகாரத்தைப் பயன்படுத்தி பேறிவாளனை விடுதலை செய்வதாக தீர்ப்பில் கூறியிருந்தது.

**2022 நவம்பர் 11:** பேரறிவாளன் விடுதலை செய்யப்பட்டதன் அடிப்படையில் தங்களுக்கும் விடுதலை வழங்கவேண்டும் என்று கோரி நளினி, ரவிச்சந்திரன் ஆகியோர் தாக்கல் செய்த மனுவை விசாரித்த உச்ச நீதிமன்றம் அவர்கள் இருவரை மட்டும் இல்லாமல் வழக்கில் சிறையில் இருக்கும் 6 பேரையும் விடுதலை செய்து கடந்த வெள்ளிக்கிழமை உத்தரவிட்டது.

***(பா.அரியநேத்திரன்)***

## தனுஷ்கவுக்கு ஒரு கடிதம்




ஆயுபோவன்
தனுஷ்க குணதிலக்க,

என்னடா மோனை கம்பிக்குப் பின்னால சுகமா இருக்கிறியே..? எட கோதாரி விழுவானே உங்க இருக்கிற முக்கியமான ஆக்களுக்கு கடுதாசி போடக்கூட நேரமில்லையெண்டு நான் இஞ்ச ஆதளி மாதளிப்பட்டு ஓடித்திரியுற நேரம் பார்த்து உனக்கும் ஒரு கடுதாசி போடுற அளவுக்கு வந்திட்டுது நிலைமை பாத்தியே... நல்லவேளை நீ ஸ்ரீலங்கன் பொலிஸிட்ட மாட்டாம ஒஸ்றேலியன் பொலிஸிட்ட மாட்டினது. நீ இஞ்சை மாட்டியிருந்தா எப்பிடி எப்பிடி எல்லாம் காயம் வராம அடிக்கலாம் எண்டு அவங்களுக்கு நல்ல வடிவாத் தெரியும்..! போட்டு விளாசியிருப்பாங்கள். முந்தி எங்கட சனத்தை ஆண், பெண் வேறுபாடு இல்லாமல் வயது வேறுபாடு இல்லாமல் சந்தேகத்திலை பிடிச்சுக்கொண்டு போய் எல்லாவிதமான சித்திரவதையளும் செய்து அவங்களுக்கு நல்ல அனுபவம் இருக்குது கண்டியோ.

அடேய்..! ஸ்ரீலங்கா எண்டாலே கிரிக்கற்தான்ரா உலகத்தில உள்ள எல்லாச் சனத்துக்கும் நினைவுக்கு வரும்... அதுவும் உலகச் சம்பியனா வந்த பிறகு எங்கட நாடு இன்னும் விலாசமா வந்ததெல்லே. அதுவும் எங்கட சனத்துக்கு கிரிக்கற் எண்டாலே ஒரு வித விசர் எண்டுதான் சொல்ல வேணும். என்னதான் அங்கினேக்கை இங்கினேக்கை எண்டு எந்த விளையாட்டுகள் நடந்தாலும் உந்த கிரிக்கற் கோதாரியெண்டாலே எங்கட சனம் விழுந்தெழும்பி அடிபடுங்கள்... அந்தளவுக்கு விசர் முத்தி நிக்குது...

ஒருகாலத்தில உதை எல்லாரும் கனவான் விளையாட்டு எண்டு சொன்னவை... அப்படித்தான் முந்தி கிரிக்கற் விளையாடின ஆக்கள் இருந்தவை. இந்தியாவின்ரை கபில்தேவ், எங்கட அர்ஜுன ரணதுங்க எண்டு பேர் போன ஆக்கள் எல்லாம் உந்த விளையாட்டை விளையாட்டோட நிப்பாட்டினவங்கள்... டிசிப்பிலீனை மெயின்ரெயின் பண்ணினவங்கள். முந்திச் சிலர் அங்க இஞ்ச எண்டு சில விஷயங்கள்ள ஈடுபட்டாலும் குறுக்கால போன உன்ன மாதிரி நட்டின்ரை மானத்த அந்த ஆக்கள் ஒரேயடியா கப்பல்லை ஏத்தேல்லைத் தெரியுமே...

இண்டைக்கு ஸ்ரீலங்கா கிரிக்கற் துறையைப் பார்த்தமெண்டா அதுக்குள்ள வாறத்துக்கு எண்டு சில தகமையள் இருக்க வேணும் எண்டு ஆக்கள் பறையினம்... ஒண்டில் அரசியல் பின்னணி இருக்க வேணும்.. இல்லாட்டில் பெரும் பேமஸான மதகுருமாற்றை சப்போர்ட் இருக்க வேணும்... இல்லாட்டில் காசு புழங்க வேணும் எண்டு பறையுதுகள். உந்த எல்லா விசயங்களோடையும் கொஞ்சம் திறமை இருந்தாச் சரி எண்டதுதான் நிலைமை எண்டு சொல்லுகினம்... உண்ணான நீ இதிலை ஏதோ ஒரு வகையுக்கை இருக்க வேணும். ஆனால், கோதாரி எந்த வகை எண்டுதான் எனக்கு தெரியேல்லை... ஆனா, இதில ஏதோ ஒண்டு உனக்கு கட்டாயம் இருக்கவேணுமெண்டது என்ர கணிப்பு... இல்லாட்டில் நீ திருப்பித் திருப்பிக் குழப்படி செய்ய என்னண்டு உன்னை ரீமிலை வச்சிருப்பாங்கள்...

சரி... சரி... உது கிடக்கட்டும்... டேய் விழுவானே விளையாடப்போன இடத்தில விளையாடப்போன விளையாட்டை விளையாடாமல் என்ன கோதாரிக்கு தேவையில்லாத விளையாட்டு விளையாடப் போனனி. அம்மாவாண உன்ரை கொப்பன் கோத்தை உன்னை ஒழுங்கா வளத்திருந்தா உந்த வேலை செய்திருப்பியே... அது சரி, உவங்கள் ஒஸ்றேலியா எம்பசிக்காரங்கள் இஞ்ச எங்கட ரேடியோக்களிலை, டீவீயளிலை சட்டவிரோதமா உள்நுழையிறது தண்டனைக்குரிய குற்றம் எண்டு சொல்லுற விளம்பரங்கள் போடுறாங்கள் எல்லே.. நீ அது ஒண்டையும் பாக்கேல்லையே. அதுசரி, அவள் அந்தப் பெடிச்சி பொலிசிலை நீ அவளை நாலு தரம் நாசமாக்கினனி எண்டு சொல்லுறாள். நான் தெரியாமைத்தான் கேக்கிறன்... கிரவுண்டில நிக்கேக்கை பந்தை அடிச்சுப்போட்டு நாலு ரன் ஓடச் சொன்னா நாக்கைத் தொங்கப்போடுறனி என்ன தைரியத்தில அப்பிடிச் செய்தனி..?

முந்தி 2018ஆம் ஆண்டும் உன்ர பிறெண்ட் விழுவான் ஒருத்தனோடை கொள்ளுப்பிட்டியில பாலியல் கேஸ் ஒண்டில் மாட்டிப் பேந்து ஒருமாதிரி வெளியில வந்தனி எல்லே. பேந்து அங்க லண்டனுக்குப் போன இடத்தில களவாச் சுருட்டுக் குடிக்கப் போய் மாட்டினனி எல்லே. அடேய் தெரியாமத்தான் கேக்கிறன்... நீ திருந்தவே மாட்டியா..? மனுசனாப் பிறந்தா கொஞ்சம் எண்டான்ன வெக்கம், ரோசம், சூடு, சுரணை, மானம் இருக்கவெல்லே வேணும்... உனக்கு எங்கட ஆச்சி நெடுகவும் சொல்லுற மாதிரி வெக்கம் படைக்கேக்கை விடிஞ்சு போச்சுது போல. நல்ல மாட்டுக்கு ஒரு சூடு எண்டு ஊரில சொல்லுவினம்... சூடு கண்ட பூனை அடுப்பங்கரைக்கும் போகாதெண்டும் சொல்லுவினம்... ஆனால், நீ முந்தி உனக்கு விழுந்த சூட்டை சுகமாக நினைச்சுக்கொண்டாய் போலக் கிடக்குது... அதுசரி, விதி ஆரை விட்டது..? இந்த முறை அவங்கள் நல்ல ஆழமாத்தான் சுடுவாங்கள் போலக் கிடக்குது...

அடேய்..! போன இடத்தில உனக்கு வாதையெண்டு போட்டு நீ விளையாடேல்லை... அப்படி விளையாடாத உன்னை திருப்பியனுப்பாமல் உங்கினைக்க வச்சிருந்த ஒப்பீஸர்மாரை என்ன செய்யுறதெண்டு தெரியேல்ல... சரியடாப்பா, வாதை எண்டு இருந்த நீ பேந்து என்ன வாதையில அங்க உந்த அவுஸ்திரேலியாக்காரிட்ட ஓடினனீ..? அட மோடா உதே வேலையை உங்கினைக்க உன்ரை ரீமில இருக்கிற மற்ற ஆக்கள் சிலரும் எவ்வளவு அமசடக்கமாச் செய்யுறாங்கள் தெரியுமே? அவங்களிட்டைக் கேட்டிருந்தா எப்பிடி மாட்டுப்படாம உந்த வேலையளைச் செய்யிறது எண்டு சொல்லித் தந்திருப்பாங்கள் எல்லே... போன இடத்தில பாலியல் துஷ்பிரயோகம் எண்டதுக்கு மேல அந்தப் பெட்டையோட சண்டையும் போட்ட குற்றம் வந்திருக்குது... எடேய் நீ இப்படி மாட்டுப்பட்ட செய்தி வந்த கையோட இதைக்கூட ஒழுங்குமுறையா செய்யத்தெரியாதவன் எப்படியடா கிரிக்கற் அடிச்சுகப் கொண்டுவருவான் எண்டுபோட்டு கொஞ்சப்பேர் சோசல் மீடியாவில பகிடி பண்ணினவங்கள்...

என்னக்கேண்டா உந்த வேலை.? துண்டறப் பிடிக்கேல்லைக் கண்டியோ... எங்க போனா எப்படி விளையாட வேணும் எண்ட இங்கிதம் தெரியாத நீ எல்லாம் என்ன ஐஸே விளையாட்டுக்காறன்..? இப்ப பார்... இனி எங்கட ரீம் அவுஸ்திரேலியாவுக்கு விளையாடப்போனா ஆயிரம் கேள்வி கேப்பாங்கள்... இன்னொரு நாட்டுக்கு போனாலும் கூட சும்மா வெளியால சுத்தித் திரிய முடியாத நிலைமை... கண்ணுக்கை எண்ணெய் விட்டுக்கொண்டு மீடியாக்காறங்கள் திரிவாங்களே... எங்கினேக்கையும் விளையாடப்போன இடத்தில பெட்டையளோட சும்மா சிரிச்சுப் பேசினாலும் கிரிக்கற் ரீம் பெடியளை அந்த நாட்டுச் சனம் நம்புமோ..? மீடியாக்காறங்கள் விடுவாங்களோ..? உஷ் இரகசியம் எண்டு செய்தியாக்கி எல்லே போடுவாங்கள்..!

இது சதிவேலை... திட்டமிட்டு உன்னை பழிவாங்கிப் போட்டாங்கள் எண்டு கொஞ்சப்ப பேர் சொல்லித்திரிஞ்சவ. திட்டமிட்டுப் பழிவாங்கிற அளவுக்கு நீ அப்பிடி ஒண்டும் பெரிய ஆள் இல்லைத்தானே... என்ன நான் சொல்லுறது... என்னவோ தெரியேல்லை... நாட்டை அட்டமத்துச்சனியன், அட்டமத்து வியாழன் எல்லாம் ஒன்டுமோண்டா நிண்டு ஆட்டி வைக்கிறதும் பத்தாமை உன்னை மாதிரி ஆக்களும் நாட்டைக் கிலிசகெடுத்துப் போட வேணும் எண்டு நாண்டு கொண்டு நிக்கிறியள். இஞ்சை சனம் தின்னக் குடிக்க வழியில்லாம கிடக்கேக்கை உன்னை மாதிரி ஆக்கள் கண்டதையும் திண்டுப்போட்டுக் கொளுப்பெடுத்துத் திரியிறியள். "ஆடான ஆடெல்லாம் தவிடு புண்ணாக்குக்கு அழ சின்னையன்ரை சொத்தி ஆடு என்னத்துக்கோ அழுததாம்" எண்டு எங்கட அப்பு நெடுகவும் சொல்லுற கதைதான் உன்ரை கதையைக் கேட்டபிறகு எனக்கு ஞாபகத்துக்கு வருகுது.

என்னவோ நடந்தது நடந்து போச்சுது... இனி உனக்கு கடும் கஷ்ட காலம் எண்டு நான் சொல்லுறன் எண்டு போட்டு குறை நினையாதை... கொஞ்ச நாளைக்கு அங்கை அப்படியே இருந்த பிறகாவது திருந்தி நடப்பாய் எண்டு நினைக்கிறன்... கிரிக்கற்றால நல்ல பெயரெடுத்த ஸ்ரீலங்கா இப்ப அதே கிரிக்கற்றால கெட்ட பெயரும் எடுத்திருக்குதெண்டா அது ஆரால எண்டு உனக்கு விளங்குது தானே..?

சரி, சரி... நான் ஆட்டுக்குக் குலை முறிக்கப் போக வேணும். பேந்து ஆறுதலா இன்னொரு கடுதாசி எழுதுறன்... இப்ப நிப்பாட்டுறன்... சரிதானே..?

நன்றி
வணக்கம்...
இப்படிக்கு பேரம்பலம்.

பின் குறிப்பு : அது சரி, நீ ஏதோ அப் பாவிச்சுத்தான் அந்தப் பெடிச்சியோடை தொடுசல் ஆனனி எண்டு ஆக்கள் பறையினம். உந்த அப்பை உவங்கள் உன்ரை ரீம் பெடியள்தான் தந்தவங்களோ, இல்லாட்டில் வேறை ஆரும் தந்தவங்களோ..?

# அரசியல் தீர்வும் கைதிகளும்

பா.அரியநேத்திரன்

தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு ஒரு வருடத்துக்குள் தீர்வு வழங்கப்படுமென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருந்தார்.

அதுபோல் "புதிய அரசமைப்பின் ஊடாக அரசியல் தீர்வே தமிழ் மக்களின் பிரதான எதிர்பார்ப்பு. அதை நாம் நிறைவேற்றியே தீருவோம்" என்று நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷவும் தெரிவித்தார்.

ஆனால், பிளவுபட்டுள்ள தமிழ் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் ஒற்றுமையாக ஓரணியில் வரவேண்டும். வந்தால் அரசியல் தீர்வு சாத்தியம் என்ற நிபந்தனையை அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா கூறியிருக்கிறார்.

விடுதலைப்புலிகளுக்கும் அரச தரப்புக்கும் இடையில் ஐரோப்பிய நாடுகளில் இடம்பெற்ற பல சுற்றுப் பேச்சுவார்த்தைகளில் அரச தரப்பில் தலைமையேற்று கலந்துகொண்டவர் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா. அப்போது ஏக பிரதிநிதிகளாக விடுதலைப்புலிகள் தமிழர் தரப்பில் அரசியல் தீர்வு விடயங்கள் தொடர்பாக பேச்சுவார்த்தைகளில் 2002 தொடக்கம் 2008 வரை நடத்தியபோது எதையுமே ஏற்றுக்கொள்ளாது தட்டிக்கழித்தவர் இந்த அமைச்சர். ஏதோ தமிழ் தரப்புகளிடம் ஒற்றுமையில்லை, அதனால்தான் இலங்கை அரசு அரசியல் தீர்வு வழங்குவதில் தாமதம் ஏற்படுகிறது என்ற விதமாக யாருக்கு காதில் பூ சுற்ற இந்தக் கதையை அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா கூறுகிறார்?

முழுப்பூசணிக்காயை சோற்றில் புதைப்பது இலங்கை ஆட்சியாளர்களுக்கு கைவந்த கலை என்பது தெரிந்த விடயம்.

விடுதலைப்புலிகளுக்கும் இலங்கை அரசுக்கும் இடையேயான அமைதிப் பேச்சுவார்த்தை ஐரோப்பிய நாடுகளில் இடம்பெற்றபோது ஒரு குரலாக ஓரமைப்பாக தமிழர் தரப்பு நியாயங்களை எடுத்துக் கூறியபோதெல்லாம் இதனை கணக்கில் எடுக்காமல் உதாசீனம் செய்த பெருமைக்குரியவரே இப்போது தமிழர்கள் ஒற்றுமையாக வரவேண்டும் என்ற விடயத்தை கூறியிருப்பது ஆச்சரியத்தை தருகிறது.

இலங்கை ஆட்சியாளர்கள் யாராக இருந்தாலும் தமிழ் மக்களுக்காக எப்படியான தீர்வை வழங்கலாம் என்று சிந்தித்த தலைவர்கள் எவருமே இருந்ததில்லை. எப்படி தமிழர் தரப்பை தட்டிக்கழிக்கலாம் என்பதை சிந்திக்கின்ற தலைவர்களே தொடர்ந்தும் இருந்துள்ளனர். அதில் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா கைதேர்ந்தவர்.

அரசியல் தீர்வு என்பது வடக்கு - கிழக்கு இணைந்த மகாணத்தில் சமஷ்டி அடிப்படையிலான தீர்வு என்பதை அனைத்து தமிழ்த் தேசியக் கட்சிகளின் கொள்கையாகவே கடந்த 2009 மே 18க்குப் பின்னர் வலியுறுத்தி வருகின்றமை எல்லோரும் அறிந்த விடயம். அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவின் கருத்தைப் பார்க்கும்போது தமிழ் தலைமைகள் ஒற்றுமையாக இல்லை. இதனால் தான் தீர்வு வழங்கமுடியாது உள்ளது. எனவே, நீங்கள் ஒற்றுமை பெற்றுவாருங்கள்.

தீர்வைத் தருகின்றோம் என்ற விதமாக பந்தை தமிழ் அரசியல் தலைவர்கள் பக்கம் விட்டு காலத்தை இழுத்தடிக்கலாம் என்பது தெளிவாக தெரிகிறது.

இதற்கு உடனடியாகவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் தெளிவான பதிலை அவருக்கு வழங்கியுள்ளார். அனைத்து தமிழ்த் தேசியக் கட்சிகளின் கொள்கையும் சமஷ்டி அடிப்படையிலான தீர்வு வழங்கப்படவேண்டும் என்பதுதான் ஒருமித்த முடிவு. எனவே, அதை செய்யுங்கள் என்ற விதமாக அவர் பதில் கூறியுள்ளார்.

வடக்கு - கிழக்கு தமிழ்மக்களுக்கான சமஷ்டி அடிப்படையிலான தீர்வுக்காகவே தந்தை செல்வா 1949 டிசம்பர் 18இல் இலங்கை தமிழரசு கட்சியை தோற்றுவித்தார். அதனால் அந்தக் கட்சியை சமஷ்டிக்கட்சி என சிங்கள தலைவர்கள் அப்போது அழைத்த வரலாறுகளும் உண்டு.

தந்தை செல்வா சமஷ்டித்தீர்வை பெறவே பேச்சுவார்த்தைகள், பல்வேறுபட்ட மகாநாடுகள், அகிம்சைப்போராட்டங்கள், ஒப்பந்தங்கள் என தன்னாலான சகல முயற்சிகளையும் சளைக்காமல் மேற்கொண்டு களைத்துப்போன நிலையில்தான் 1976 மே 14இல் வட்டுக்கோட்டை தீர்மானமாக தமிழீழ தனியரசு தீர்மானத்தை எடுத்தார் என்பதும் அதன் பின்னர் இளைஞர்கள் ஆயுதப்போராட்டம் மேற்கொண்டு 2009 மே18இல் முள்ளிவாய்க்காலில் போர் மௌனித்தமையும் ஒரு வரலாறு.

போர் மௌனித்த பின்னர் முழுநேர அரசியல் பணியை கையில் எடுத்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தலைவர் இரா. சம்பந்தன் ஒருமித்த நாட்டிற்குள் வடக்கு - கிழக்கு தமிழ் மக்களுக்கு சமஷ்டி அடிப்படையிலான அரசியல் தீர்வு வழங்கப்படவேண்டும் என்பதை கடந்த 13 வருடங்களாக தொடர்ச்சியாக நாடாளுமன்றத்திலும், நாடாளுமன்றத்துக்கு வெளியிலும் வலியுறுத்தி வந்துள்ளமை கண்கூடு.

யுத்தம் முடிந்தும் 13 வருடங்களாக நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிகளாக பதவி வகித்த மகிந்த ராஜபக்ஷ, மைத்திரிபால சிறிசேன, கோட்டாபய ராஜபக்ஷ, ஏன் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எல்லோரும் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு வழங்கப்படவேண்டும் என்பதைவிட தாம் தொடர்ந்தும் எப்படி ஆட்சியில் நிலைத்திருப்பது என்பதை தீர்மானித்தார்களே தவிர நாட்டைப் பற்றியோ, தமிழ் இனத்தைப் பற்றியோ சிந்திக்கவில்லை.

அப்படி சிந்தித்திருந்தால் கடந்த 2015இல் நல்லாட்சி என்ற லேபளுடன் ஆட்சியமைத்த ஜனாதிபதி மைத்திரியும், பிரதமர் ரணிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை தேவைக்கு மட்டும் பயன்படுத்தாமல் அவர்களால் முன்வைக்கப்பட்ட புதிய அரசியலமைப்புடன் ஒரு அரசியல் தீர்வை வழங்கி இருக்கலாம். அப்படி செய்ய ரணிலுக்கோ, மைத்ரிக்கோ மனம் வரவில்லை.

நல்லாட்சியில் தமிழ்த்தேசிய நீக்க அரசியலுக்காகவே தமது நரித்தனத்தை ரணிலும், மைத்ரியும் பயன்படுத்தினர்.







சலசலப்பின்றி செய்யக்கூடிய கல்முனை வடக்கு பிரதேச செயலக தரம் உயர்த்தல் விடயத்தைக்கூட தட்டிக்கழித்தவர்களே அவர்கள்.

இப்போது நாட்டில் வங்குரோத்து நிலை, பொருளாதார வீழ்ச்சி ஏற்பட்ட பின்னர் சர்வதேச அழுத்தம், புலம்பெயர் தமிழர்களின் முதலீடுகளைக் கவர்ந்து இழுக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டதன் எதிரொலியாக தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு வழங்குவதாகவும் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாகவும் பேசப்படுவதையும் அவதானிக்கமுடிகிறது. அதில் 08 தமிழ் அரசியல் கைதிகளைக் கடந்த தீபாவளி தினத்தில் வெளியிடப்பட்டதையும் ஒரு நல்ல சகுனமாகப் பார்க்க முடிகிறது.

தேசிய இனப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வு புதிய அரசமைப்பு மூலம் கிடைக்கும் எனவும், சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லிம்கள் என மூவின மக்களும் எதிர்நோக்கும் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தனது பதவிக் காலத்தில் தீர்வு காண்பேன் எனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருந்தார்.

இதற்கேற்றவாறு புதிய அரசமைப்பு உருவாக்கப்படும். அது விரைந்து நிறைவேற்றப்படும். ஒரு வருடத்துக்குள் இந்தப் பணிகள் முற்றுப்பெற வேண்டும் என்பதே தனது நோக்கம் என ரணில் மேலும் தெரிவித்திருந்தார்.

"தமிழ் மக்களுக்கு மீள்குடியேற்றப் பிரச்சினை, காணிப் பிரச்சினை, காணாமல்போனோர் பிரச்சினை, அரசியல் கைதிகள் பிரச்சினை, அரசியல் தீர்வுப் பிரச்சினை எனப் பல பிரச்சினைகள் உண்டு. தனக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி சில பிரச்சினைகளைத் தீர்க்க முடியும். அந்தப் பணியைத் தற்போது ஆரம்பித்துள்ளேன்.

அதன் ஒரு கட்டமாகவே தண்டனை பெற்று சிறையில் இருந்த 08 அரசியல் கைதிகளுக்கு பொது மன்னிப்பு வழங்கியுள்ளேன். என்னால் இயன்ற காரியங்களைத் தொடர்ந்து முன்னெடுப்பேன். அரசியல் தீர்வு புதிய அரசமைப்பு மூலம் கிடைக்கும்" என ஜனாதிபதி கூறியிருந்தார்.

இதேபோல் "புதிய அரசமைப்பின் ஊடாக அரசியல் தீர்வே தமிழ் மக்களின் பிரதான எதிர்பார்ப்பு. அதை நாம் நிறைவேற்றியே தீருவோம்" என்று நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ தெரிவித்தார்.

தம்மைச் சந்திக்கும் சர்வதேச பிரதிநிதிகள் புதிய அரசமைப்பு தொடர்பிலும், தேசிய இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு தொடர்பிலும் முக்கியத்துவம் வழங்கிக் கலந்துரையாடி வருகின்றனர். எனவே, இந்தக் கருமத்தில் நாம் முழு அர்ப்பணிப்புடன் செயற்படுவோம்.

ஒரு வருடத்துக்குள் தீர்வுக்கான அனைத்துப் பணிகளும் நிறைவுக்கு வரவேண்டும் என்பதை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எம்மிடம் தெரிவித்துள்ளார்.

"அதற்கு முன் தமிழ் அரசியல் கைதிகள், காணி விவகாரம் தொடர்பில் ஆராய்ந்து அதற்குரிய தீர்வுகளை அரசு வழங்கும். அதன் ஓர் அங்கமாகவே தமிழ் அரசியல் கைதிகள் சிலர் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

ஏனையோரும் விரைவில் விடுவிக்கப்படுவார்கள். நல்லாட்சி அரசில் தீர்வு விடயத்துக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முழுமையான ஒத்துழைப்பை வழங்கியது.

ஆனால், தற்போது கூட்டமைப்பின் ஒத்துழைப்பு எமக்குக் கிடைக்கவில்லை என்று அர்த்தம் இல்லை. ஒத்துழைப்பு கிடைக்கின்றது. ஆனால், அந்த ஒத்துழைப்பு முழுமையான ஒத்துழைப்பாக இருக்க வேண்டும்.

வடக்கு, கிழக்கில் காணி விவகாரம் தொடர்பில் பல முறைப்பாடுகளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் எம்மிடம் முன்வைத்துள்ளனர்.

இவை தொடர்பில் நாம் நேரில் ஆராய்ந்து விரைந்து தீர்வு காண்போம். எந்தத் தரப்பும் பாதிக்காத வகையில் நாம் தீர்மானங்களை எடுப்போம்" - எனவும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ கூறியுள்ளார்.

இதேவேளை வடக்கு-கிழக்கு ஒருங்கிணைப்புக்குழு என்ற அமைப்பின் ஊடாக இலங்கையின் வடக்கு - கிழக்கு மக்களுக்கு மதிப்பான உரிமையுடன் கூடிய அரசியல் தீர்வு வழங்கப்பட வேண்டும் என்ற தொனிப் பொருளிலான கவனயீர்ப்பு நிகழ்வுகள் வடக்கு - கிழக்கில் உள்ள 08 மாவட்டங்களிலும் இடம்பெற்றுள்ளது.

இதன்போது வடக்கு - கிழக்கு மாகாணங்களுக்கு அதிகாரப் பரவலாக்கம் என்பது ஒரு ஜனநாயக உரிமையாகும் என மக்கள் வலியுத்தியுள்ளனர்.

வடக்கு - கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் தலைமையில் வடக்கு - கிழக்கில் உள்ள மாவட்டங்கள் அனைத்திலும் 100 நாட்கள் செயல்முனைவுத் திட்டம் மேற்கொள்ளப்பட்டு இறுதி நாளான கடந்த செவ்வாய்கிழமை 08/11/2022 அன்றைய தினம் வடக்கு - கிழக்கில் உள்ள 08 மாவட்டங்களிலும் அன்று ஒரே நேரத்தில் மு.ப. 10.30 மணிக்கு ஐக்கிய இலங்கைக்குள் ஒருங்கிணைந்த வடக்கு - கிழக்கு மாகாணத்திற்கு மீளப்பெற முடியாத சமஷ்டி முறையிலான அதிகாரப்பகிர்வு வேண்டிய மக்கள் பிரகடனம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

ஓர் அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றின் ஏற்பாட்டில் எந்தவொரு அரசியல் கட்சியுமின்றி முழுமையாக ஒரு பொது அமைப்பு வடக்கு - கிழக்கில் ஒரே நாளில் 08 மாவட்டங்களிலும் 08 இடங்களில் மக்களை அழைத்து இன்ப்படுகொலைக்கான தீர்வு வேண்டும், சர்வதேச விசாரணை வேண்டும், வடக்கு - கிழக்கு இணைந்த சமஷ்டி அடிப்படையிலான தீர்வு வழங்கவேண்டும் என முதன்முதலாக இவ்வாறு வடக்கு - கிழக்கை உள்ளடக்கி 08 மாவட்டங்களிலும் பிரகடனம் மேற்கொண்டமை இதுவே முதல்தடவையாகும்.

இந்தப் பொது அமைப்பின் கோரிக்கையை இலங்கை அரசு உதாசீனம் செய்ய முடியாது. ஒருவகையில் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தமிழ் அரசியல் தலைவர்களை ஒற்றுமையாக அரசியல் தீர்வு விடயத்தில் இணையவேண்டும் என்று கூறினாலும், வடக்கு - கிழக்கு தமிழ் மக்களுடைய 74 வருடக் கோரிக்கை சமஷ்டி அடிப்படையிலான அரசியல் தீர்வு என்பதை அரசியல் கட்சிகள் இன்றி பொதுமக்களாவே கோரிக்கை விடுத்துள்ளதை தட்டிக் கழிக்க முடியாது.

அரசாங்கம் மட்டுமல்ல, பேச்சுவார்த்தைகளில் கலந்துகொள்ளும் தமிழ்த் தேசியக் கட்சிகளும் இனி சுற்றிவளைத்து 'சமஷ்டி' என்ற சொல்லை மறைத்து நாடகம் ஆடாமல் வெளிப்படையாக இலங்கை அரசிடம் ஒன்றுபட்ட இலங்கை நாட்டில் வடக்கு - கிழக்கு இணைந்த மகாணத்தில் சமஷ்டி அடிப்படையிலான தீர்வே எமது கொள்கை என்பதை அழுத்தம் திருத்தமாக வெளிப்படையாகக் கூறவேண்டிய காலம் இது என்பதை அனைத்து தமிழ்த் தேசிய தலைமைகளும் உணரவேண்டும். கடந்த 8ஆம் திகதி வடக்கு - கிழக்கில் 08 மாவட்டங்களிலும் ஒருமித்து மேற்கொண்ட பிரகடனம் இதையே வலியுறுத்திவிட்டது.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி,வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய 08 மாவட்டங்களிலும் ஒரே நேரத்தில் இந்த பிரகடனம் வாசிக்கப்பட்டு மக்களின் ஆணை பெறப்பட்டதை நானும் நேரில் கலந்துகொண்டதன் மூலம் அறிந்து கொண்டேன்.

ஒரு வருடத்துக்குள் அரசியல் தீர்வை வழங்குவதாக உறுதி கூறிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சர்வதேசத்தை திருப்திப்படுத்த பெயரளவில் இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தை கையாளாமல் இதயசுத்தியுடன் அதனை தீர்க்கவும், எஞ்சியுள்ள அனைத்து தமிழ் அரசியல் கைதிகளையும் ஏற்கனவே 08 தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்தது போன்று எதிர்வரும் 2023 ஆம் ஆண்டு தைப்பொங்கல் திருநாளன்று முற்றுமுழுதாக அனைவரையும் விடுதலை செய்ய வேண்டும். அப்படி செய்வதே தமிழ் மக்களின் மனதை வென்றெடுக்கக் கூடிய நல்ல சகுனமாகும்.

---

## 'வெடி'மணியம்

முதலாம் பக்கத் தொடர்ச்சி...

*ஆகவேதான் இந்த "கனடாக்கப்பல்" ஏமாற்று நாடகத்தை மிகத் துல்லியமாக அரங்கேற்றினார்கள்.*

*ஊரிலுள்ள பலர் இந்த ஆட்கடத்தல்காரர்களின் மிக நெருக்கமான உறவினர்கள்.*

*அத்தோடு, அதிகார மட்டங்களில் மிக நெருக்கமான தொடர்புகளோடு இருப்பவர்கள்.*

*இந்த 300 பேரும் இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்பட்டு விசாரணைகளின் பின்னர் விடுதலை ஆனாலும் இவர்கள் செலுத்திய முற்பணத்தில் ஒரு சதம் கூட திருப்பி வேண்டமுடியாது.*

*அதைவிடக் கொடுமை ஊரில் இந்த ஆட்கடத்தல் நாடகத்தில் பங்காளியாக இருந்தவர்களை சட்டத்தின் முன்னால் நிறுத்தமுடியாது. ஏனெண்டால்;*

*ஆட்கடத்தல்காரர்களுக்கு இருக்கும் அரசியல் பலமும் அதிகார பலமும் உறுதியானது.*

*இலங்கையிலிருந்து சுமார் 9,000 பேர் அவுஸ்திரேலியாவுக்குக் கப்பலில் இந்த வருடத்தில் போக முயன்றார்கள் எண்டு முதலில் குறிப்பிட்டம். இவர்கள் அனைவரும் மீண்டும் நாடு கடத்தப்பட்டு சிறிலங்காவுக்கு வந்த பின்னர் அவர்களில் யாரும் இதுவரை இந்த ஆட்கடத்தல்காரர்கள் பற்றி மூச்சு திறக்கவில்லை.*

*இதுவரை எந்த ஆட்கடத்தல்காரர்களும் கைதுசெய்யப்பட்டதாக எந்த பேப்பர்லையும் செய்திகள் வரவுமில்லை.*

*சிறிலங்கா அரசாங்கத்தை பொறுத்தவரை தமிழர்கள் நாட்டைவிட்டு தப்பி ஓடுவதைப்பற்றி அலட்டிக்கொள்ளமாட்டார்கள்.*

*கோடிக்கணக்கில் பணமோசடி நடப்பதைப் பற்றியும் சிறிலங்கா புலனாய்வுத்துறை கண்டுகொள்ளாது.*

*ஆட்கடத்தல்காரர்களும் புலம்பெயர் தமிழர்கள். காசு கொடுக்கிறவர்களும் புலம்பெயர் தமிழர்கள். நடுக்கடலில நிண்டு தத்தளிக்கிறவர்களும் தமிழர்கள்!*

*ஆக;*

*இதுக்குள்ள சிறிலங்கா அரசாங்கத்துக்கு என்ன வேலை?*

*ஆகவேதான் அவர்கள் இதை ஒருபோதும் கண்டுகொள்வதும் இல்லை. சம்பந்தப்பட்ட ஆட்கடத்தல்களை தடுப்பதும் இல்லை. சட்ட நடவடிக்கை எடுப்பதும் இல்லை.*

*மாறாக;*

*வெளிநாட்டு புலம்பெயர் தமிழர்களால் ஆட்கடத்தல் காரர்களுக்கு கொடுக்கப்படும் பலகோடி பணத்தில்;*

*சில கோடிகள் இலஞ்சமாக சிறிலங்கா அதிகார வட்டங்களில் பகிரப்படுகிறது.*

*ஆக;*

*சிறிலங்கா அரசாங்கத்தைப் பொறுத்தவரை "வருமானம்" வருகிறது. எனவே, அவர்கள் இந்த ஆட்கடத்தல் நாடகங்களைப் பார்த்து ரசிப்பார்கள். இதுதான் யதார்த்தம்.*

*சீட்டுக் கட்டி வாழ்க்கையில் உயர்ந்தவர்களைவிட அழிஞ்சவர்களே அதிகம்.*

*ஆனாலும், ஊரிலும் வெளிநாடுகளிலும் இப்போதும் பல ஆயிரம் பேர் சீட்டுக் கட்டிக்கொண்டுதான் இருக்கிறார்கள்.*

*அதேபோலத்தான் எஜெண்டுக்கு காசு கொடுத்தவன் பல லச்சம் பேர் இருக்கிறாங்கள்.*

*இருந்தாலும் "வெளிநாட்டுக்கனவுகளை" ஊரில் உள்ளவர்களை காணக்கூடாது எண்டு தடுக்கமுடியாது.*

*இண்டைக்கு வியட்நாம் கடலில் மூழ்கி தத்தளித்த "கனடாக்கப்பல்" போல;*

*இன்னும் பல கப்பல்கள் சர்வதேசக்கடலில் தத்தளிக்கத்தான் போகின்றன. இது தொடர்கதைதான். இதற்கு முடிவே இல்லை.*

*வெளிநாட்டு கனவுகளோடு ஊரில் இருக்கும் பலர் தங்கள் கனவுகளை நியாயமான வழிகளில் நிறைவேற்ற முயற்சிக்கவேண்டும்.*

*அல்லது "கனடாக்கப்பல்" "அவுஸ்திரேலியாக்கப்பல்" என்ற நாடகங்கள் தொடர்ந்தும் ஊரில் மேடையேறிக் கொண்டேயிருக்கும்.*

★★★

*அடுத்த வருச சிறிலங்கா சுதந்திர தினத்துக்கு முன்னம் வடக்கு - கிழக்கில் வாழும் தமிழர்களுக்கு தீர்வு எண்டு அறிவிச்சிருக்கிறார் ரணில் சேர்.*

*சம்பந்தர்தான் வழமையாக தீபாவளிக்கு முன்னம் அல்லது பொங்கலுக்கு முன்னம் தீர்வு எண்ட நகைச்சுவை வசனங்களுக்கு சொந்தக்காரர்.*

*சம்பந்தருக்கு போட்டியாக ரணில் இந்த நகைச்சுவை வசனங்களை பேசுவது அந்தளவுக்கு எடுபட வாய்ப்பில்லை.*

*"தீபாவளிக்கு தீர்வு" என்ற நகைச்சுவை வசனம் ஜனநாயகப்பொன் சம்பந்தர் அண்ணருக்கு மட்டுமே சொந்தமான வசனம்.*

*அதை ரணில் திருடி பாவிப்பதை வன்மையாக கண்டிக்கிறோம்.*

*வடக்கு - கிழக்கு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களை ரணில் சந்திக்கப்போவதாக செய்திகள் வெளியாகியுள்ளன.*

*தாராளமாக சந்தியுங்கோ. ஆனால், அதுக்கு முன்னம் ரணில் சேர் செய்யவேண்டிய "கருமங்கள்" கொஞ்சம் கிடக்கு.*

*அந்தக்கருமங்களை ரணில் செய்யத்தவறும் பட்சத்தில் ரணிலைச் சந்திப்பது என்பது மிகத்தவறான நடவடிக்கை.*

*சொந்தப்புத்தியில் சிந்தியுங்கள்.*
*மக்களின் பக்கம் இருந்து சிந்தியுங்கள்.*
*நியாயத்தின் பக்கம் நின்று சிந்தியுங்கள்.*

*அந்தளாந்தான் சொல்லேலும்.*

# பாலியல் குற்றங்கள்: தனுஷ்க குணதிலக்க

# அவுஸ்திரேலிய சட்டம் என்ன சொல்கிறது?



அவுஸ்திரேலியாவிலிருந்து
டாக்டர் சந்திரிகா சுப்ரமணியன்





நியூ சவுத் வேல் மாநில அரசின் சட்டங்களில் பரந்த அளவிலான பாலியல் குற்றங்கள் பட்டியலிடப்பட்டுள்ளன. இவை சிறிய குற்றங்கள் முதல் பாலியல் தாக்குதல்கள் வரை அடங்கும்.
இவற்றுக்கான
தண்டனை அதிகபட்சம் 20 ஆண்டுகள் சிறைத்தண்டனையாக சட்டங்கள். இந்த பக்கம் நியூ சவுத் வேல்ஸில் உள்ள முக்கிய பாலியல் குற்றங்களை கோடிட்டுக் காட்டுகின்றன. பெரும்பாலான பாலியல் குற்றங்கள் குற்றவியல் சட்டம் 1900ஆல் நிர்வகிக்கப்படுகின்றன.

பாதிக்கப்பட்டவரின் ஒப்புதல் பாலியல் நடவடிக்கையில் இருக்கிறதா இல்லையா என்ற அடிப்படையில் தீர்மானிக்கப்படுபவை.

### பாலியல் செயல் என்பது என்ன?

பிரிவு 61KE இன் கீழ், நபர் ஒருவர் மற்ற நபரின் ஒப்புதல் இல்லாமல் பாலியல் செயலை மேற்கொண்டால் அவர் ஒரு குற்றத்தைச் செய்கிறார். ஒரு பாலியல் செயலால் பாதிக்கப்பட்டவர் அல்லது மூன்றாம் நபருடன் அல்லது நோக்கி மேற்கொள்ளலாம். இக்குற்றத்திற்கான அதிகபட்ச தண்டனை 18 மாதங்கள் சிறைத்தண்டனையாகும்.

இவை தவிர வெவ்வேறு குற்றங்களும் உள்ளன.

### பாலியல் தொடுதல்

நபர் ஒருவர் ஒரு நபரின் அனுமதியின்றி பாலியல் ரீதியாக தொடும்போது பாலியல் தொடுதல் குற்றம் செய்யப்படுகிறது. தொடுதல் பாலியல் தானா என்பது தொடும் உடலின் பகுதி மற்றும் தொடுதலின் தன்மையைப் பொறுத்தது. பாலியல் தொடுதல் என்பது அநாகரிகமான தாக்குதல் என்று வகைப்படுத்தப்பட்டது மற்றும் இது மிகவும் பொதுவான பாலியல் குற்றங்களில் ஒன்றாகும். இக்குற்றத்திற்கு அதிகபட்சம் ஐந்து ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்படும்.

### அநாகரீகமான சேட்டைகள்

நபர் ஒருவர் அநாகரீகமான சேட்டைகள் என்ற குற்றத்தைச் செய்கிறார். அதாவது அவர்கள் பொது இடத்தில் நபர் ஒருவரைப் பார்க்கும்போது அநாகரீகமாக தங்களை வெளிப்படுத்திக் கொள்ளும் குற்றத்திற்கு அதிகபட்சம் ஒரு வருடம் சிறைத்தண்டனை விதிக்கப்படும்.

### பாலியல் நடவடிக்கை

குற்றம் சாட்டப்பட்டவர் மற்றொரு நபரின் ஒப்புதல் இல்லாமல் பாலியல் செயலில் ஈடுபட்டால், அவர் பாலியல் நடவடிக்கையில் ஈடுபட்ட குற்றத்தைச் செய்கிறார். இக்குற்றத்திற்கு அதிகபட்சம் 18 மாதங்கள் சிறைத்தண்டனை விதிக்கப்படும்.

அநாகரீகச் செயல் குற்றம் சாட்டப்பட்டவர் 16 வயதிற்குட்பட்ட சிறுமியுடன் பாலியல் செயலில் ஈடுபட்டால், அது உடல் ரீதியான தொடர்பு இல்லாத ஒரு அநாகரீகமான செயல் என்ற குற்றத்தை நபர் செய்கிறார். இது சிறுமியின் முன்னிலையில் அநாகரீகமான நடத்தை அல்லது ஒரு குழந்தைக்கு ஆபாசமாக காட்டுவது ஆகியவற்றைக் கொண்டிருக்கலாம்.

### பாலியல் தாக்குதல்

நபர் ஒருவர் மற்றொரு நபரின் ஒப்புதல் இல்லாமல் அவருடன் உடலுறவு கொண்டால் அவர் பாலியல் வன்கொடுமை செய்கிறார். பாலியல் தாக்குதல் என்பது மிகவும் கடுமையான பாலியல் குற்றங்களில் ஒன்றாகும். மேலும் பாலியல் தாக்குதல் தீவிரமடையும்போது அதிகபட்சம் 14 ஆண்டுகள் அல்லது 20 ஆண்டுகள் தண்டனை விதிக்கப்படும். குற்றவாளி மற்றொரு நபருடன் சேர்ந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டு இருந்தால் பாலியல் தாக்குதல் மோசமாகக் கருதப்படும்.

### விலங்கு நடத்தை

நபர் ஒருவர் விலங்கோடு உடலுறவு கொண்டால் மிருகத்தனம் கொண்ட குற்றத்தைச் செய்கிறார்.

### பாலியல் தொழிலுக்காக கொள்வனவு செய்தல்

நியூ சவுத் வேல்ஸில், பாலியல் தொழிலுக்காக நபரொருவரை வாங்குவது ஒரு கிரிமினல் குற்றமாகும். பாலியல் தொழிலில் ஈடுபட பாலியல் தொழிலில் இல்லாத நபரொருவரை அவர்கள் கவர்ந்திழுத்தால் அல்லது ஊக்குவித்தால், நபரொருவர் பாலியல் தொழிலுக்காக நபரொருவரை வாங்குகிறார் என்று குற்றம் சாட்டப்படுவார்.

### நபர் ஒருவரின் அந்தரங்க உடலுறுப்புக்களை படமாக்குதல்

நியூ சவுத் வேல்ஸில், நபர் ஒருவரின் அந்தரங்கப் பகுதிகளைப் படம் பிடிப்பது குற்றமாகும். குறிப்பாக, அந்த நபர் உடை மாற்று அறை அல்லது பொது கழிப்பறை போன்ற தனியுரிமையை நியாயமாக எதிர்பார்க்கக்கூடிய இடத்தில் இருக்கிறார் என்றால், அல்லது படம்பிடிக்கப்பட்ட நபர் 16 வயதிற்குட்பட்ட சிறுமியாக இருந்தால் குற்றம் மோசமான அளவில் பெரியதாகும்.

### ஆபாச நோக்கங்களுக்காக பணியமர்த்தப்பட்ட குழந்தைகள்

நியூ சவுத் வேல்ஸில், ஆபாச நோக்கங் களுக்காக குழந்தைகளை பணியமர்த்துவது குற்றமாகும்.

### பாலியல் தொழிலில் சிறுவர் மூலம் பயன் பெற்றுக்கொள்ளல்

நியூ சவுத் வேல்ஸில் பாலியல் தொழிலில் சிறுவர் மூலம் பயன் பெற்றுக்கொள்வது குற்றமாகும். பாலியல் தொழிலில் சிறுவரை ஈடுபடுத்தல் விளைவாக நபர் ஒருவர் தெரிந்தே பணத்தைப் பெறும்போது இந்த குற்றம் நிகழ்கிறது. இந்தக் குற்றத்திற்குப் பொருந்தும் அதிகபட்ச தண்டனை சம்பந்தப்பட்ட குழந்தையின் வயதைப் பொறுத்தது.

### சிறுவர் துஷ்பிரயோகப் பொருட்களை வைத்திருத்தல்

குழந்தை துஷ்பிரயோகப் பொருள் (குழந்தை ஆபாசப் படைப்புகள்) வைத்திருப்பது குற்றமாகும். இக்குற்றத் திற்கு அதிகபட்சம் 10 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்படும்.

குழந்தை பாலியல் தொழிலுக்காக வளாகங்களைப் பயன்படுத்தும் குற்றம், நபர் ஒருவர் அவர் கட்டுப்படுத்தும் வளாகங்களை (ஒரு உரிமையாளராக இருந்தாலும், குறைவாகவோ அல்லது ஆக்கிரமிப்பாளராகவோ) குழந்தை பாலியல் தொழிலுக்காக பயன்படுத்த அனுமதிக்கும் போது ஏற்படுகிறது.

### அச்சுறுத்தல் மற்றும் பின்தொடர்தல்

பின்தொடர்வதை அச்சுறுத்தும் குற்றம் என்பது துன்புறுத்தல் மற்றும் மானபங்கப்படுத்துதல் மற்றும் நபர் ஒருவரை அவரின் பாதுகாப்பு குறித்து பயப்பட வைக்கும் வகையில் அணுகுவது உள்ளிட்ட பல்வேறு நடத்தைகளை உள்ளடக்கியது.

### உடலுறவு கொள்ளும் நோக்கத்துடன் தாக்குதல்

பிரிவு 61K இன் கீழ், நபர் ஒருவர் வேண்டுமென்றே அல்லது பொறுப்பற்ற முறையில் பாலியல் உடலுறவு கொள்ளும் நோக்கத்துடன் ஒருவருக்கு உண்மையான உடல் ரீதியான தீங்கை ஏற்படுத்துவதாக அச்சுறுத்தினால் அல்லது குற்றம் செய்தால், குற்றம் செய்கிறார். இந்த குற்றத்திற்கான அதிகபட்ச தண்டனை 20 ஆண்டுகள் சிறைத்தண்டனை ஆகும்.

### முறைதகா உடலுறவு

பிரிவு 78A இன் கீழ், நபர் ஒருவர் பெற்றோர், குழந்தை, உடன்பிறப்பு, தாத்தா பாட்டி அல்லது பேரக்குழந்தை உட்பட நெருங்கிய குடும்ப உறுப்பினருடன் உடலுறவு கொள்வது குற்றமாகும். இந்த குற்றத்திற்கான அதிகபட்ச தண்டனை, குற்றவாளி 16 வயதிற்கு மேற்பட்டவராக இருக்கும்போது, எட்டு ஆண்டுகள் சிறைத்தண்டனை ஆகும்.

மற்ற நபர் நெருங்கிய குடும்ப உறுப்பினர் என்பது குற்றவாளிக்குத் தெரியாவிட்டால், அது தகாத உறவு குற்றச்சாட்டுக்கு ஒரு தற்காப்பு ஆகும். இருப்பினும், மற்ற நபர் ஒப்புக்கொண்டால் அது ஒரு தற்காப்பு அல்ல. ஒப்புதல் பொருத்தமற்றதாக இருக்கும். பெரியவர்களுக்கு எதிரான அனைத்து பாலியல் குற்றங்களில் இன்செஸ்ட் மட்டுமே ஒன்றாகும்.

### பாலியல் தாக்குதல் எப்போது ஏற்படுகிறது?

**பின்வரும் கூறுகள் நிரூபிக்கப்படவேண்டும்**

★ நபர் ஒருவர் மற்றொரு நபருடன் உடலுறவு கொள்கிறார்.
★ அதற்கு மற்ற நபரின் ஒப்புதல் இல்லை.
★ மற்ற நபர் சம்மதிக்கவில்லை என்று தெரிந்தும் இந்த உடலுறவு நடத்தப்படுகின்றது.

நபர் குற்றவாளியாகக் கண்டறியப்படு வதற்கு இந்த மூன்று அம்சங்களையும் நியாயமான சந்தேகத்திற்கு இடமின்றி அரசுத் தரப்பு நிரூபிக்க வேண்டும்.

**முதல் அம்சம்:**

### உடலுறவு என்றால் என்ன?

பெரும்பாலான மக்கள் பாலியல் உடலுறவை 'ஆண் பெண் உறுப்புகளிடையேயான ஊடுருவல்', என்று நினைத்தாலும், சட்டத்தில் பாலியல் உடலுறவு மிகவும் பரந்துபட்டதாக உள்ளது.

பாலியல் உடலுறவு என்பது குற்றங்கள் சட்டம் 1900 (NSW) இன் பிரிவு 61HA இல் பின்வருமாறு வரையறுக்கப்பட்டுள்ளது:

உடலின் எந்தப் பகுதியையும் அல்லது ஒரு நபரால் கட்டுப்படுத்தப்படும் எந்தவொரு பொருளையும் பயன்படுத்தி பெண் உறுப்பில் எந்த ஊடுருவலும் (இது ஒரு உண்மையான அல்லது கட்டமைக்கப்பட்ட பயன்படுத்தி பெண் உறுப்பு என்றாலும் இல்லாவிட்டாலும்) உடலின் எந்தப் பகுதியையும் அல்லது ஒரு நபரால் கட்டுப்படுத்தப்படும் எந்தவொரு பொருளையும் பயன்படுத்தி ஆசனவாய் பகுதியில் நடத்தப்படும் எந்த ஊடுருவலும் (அது ஒரு சரியான மருத்துவ நோக்கத்திற்காக இல்லாவிட்டால்)

★ ஒரு நபரின் வாய்க்குள் ஆண் உறுப்பின் எந்தப் பகுதியின் இணைப்பு;
★ ஒரு நபரின் வாயுடன் பெண் உறுப்பின் எந்தப் பகுதியின் இணைப்பு;

இவற்றில் எதுவானாலும் கேள்விக்குரிய குற்றச்சாட்டு மேலே உள்ள பிரிவுகளில் ஏதேனும் ஒன்றிற்குள் வந்தால், குற்றச்சாட்டு "பாலியல் உடலுறவுக்கு" சமம் எனக் கொள்ளப்படும் .

- **பாலியல் தாக்குதலின் அடுத்த அம்சம் 'சம்மதம்'**
- **பாலியல் பலாத்காரத்தில் ஒப்புதல் என்றால் என்ன?**
- **பாலியல் தாக்குதல் வழக்குகளில் இது மிகவும் சர்ச்சைக்குரிய அம்சமாகும் - குற்றம் சாட்டப்பட்ட நபர் பாலியல் உடலுறவு கொள்ள ஒப்புக்கொண்டாரா?**

நபர் ஒருவர் பாலியல் பலாத்காரத்தில் குற்றவாளியாக இருப்பதற்கு, குற்றம் சாட்டும் நபர் பாலியல் உடலுறவுக்கு சம்மதிக்கவில்லை என்பதை நியாயமான சந்தேகத்திற்கு இடமின்றி அரசுத் தரப்பு நிரூபிக்க வேண்டும்.

ஒப்புதல் என்பது குற்றங்கள் சட்டம் 1900 (NSW) இன் பிரிவு 61HE இல் வரையறுக்கப்பட்டுள்ளது. நபர் ஒருவர் பாலியல் உடலுறவுக்கு ஒப்புக்கொள்கிறார் என்றால்:

"சுதந்திரமாகவும் தானாக முன்வந்தும் பாலியல் நடவடிக்கைகளுக்கு ஒப்புக்கொள்கிறார்".

ஒப்புதல் தொடர்பான மிகவும் பொதுவான சில கேள்விகளை நாங்கள் கீழே கருதுகிறோம்:

உடலுறவுக்கான சம்மதம் வாய்மொழியாக இருக்க வேண்டுமா அல்லது அது செயல்கள் மூலம் குறிக்கப்பட முடியுமா?

ஒப்புதல் வாய்மொழியாக மட்டும் கொடுக்கப்பட வேண்டியதில்லை, அது உடல் ரீதியான செயல்களாலும் வெளிப்படுத்தப்படலாம்.

உடல் சார்ந்து இரு தரப்பினரும் சம்மதிக்கிறார்கள் என்பது மிகவும் தெளிவாக இருந்தால், பாதியிலேயே நிறுத்தி ஒரு வாய்மொழி ஒப்பந்தத்தை மேற்கொள்ள வேண்டிய அவசியமில்லை.

இந்த சட்டத்தின் நோக்கம் 'இணக்கமான பாலியல் உடலுறவில் ஈடுபடும் நபர்களுக்கு இடையில் பிணைப்பு ஒப்பந்தத்தை உருவாக்குவது' இல்லை.

### சமாதானப்படுத்தல் அல்லது கெஞ்சுதல் மூலம் ஒப்புதல் பெறப்பட்டால் என்ன செய்வது?

சமாதானப்படுத்தல் அல்லது கெஞ்சுதலுக்கு பிறகு பெறப்படும் ஒப்புதல் இறுதியில், அது சுதந்திரமாகவும் தானாக முன்வந்தும் வழங்கப்பட்டால், அது இன்னும் ஒப்புதலாகவே உள்ளது.

### உடலுறவின்போது நிறுத்துமாறு நபர் கேட்டால் என்ன செய்வது?

நபர் ஒருவர் தங்கள் சம்மதத்தை நிறுத்துங்கள் மற்றும் திரும்பப் பெறுகிறார்கள் என்று கூறும் கணம், அந்த புள்ளியில் இருந்து எந்தவொரு பாலியல் உடலுறவும் பாலியல் தாக்குதல் என்றே கருதப்படும் .

எடுத்துக்காட்டாக, இரண்டு பேர் முழு மணி நேரத்திற்கும் உடலுறவில் ஈடுபடலாம். இருப்பினும், நபர் ஒருவர் தங்கள் மனதை மாற்றிக் கொண்டு நிறுத்துங்கள் என்று சொல்லும் கணம், அந்த புள்ளியில் இருந்து தொடரும் எதுவும் பாலியல் தாக்குதலுக்கு சமமாகும்.

### நபர் உடலுறவை உடல் ரீதியாக எதிர்க்கவில்லை என்றால் என்ன செய்வது?

பாலியல் தாக்குதல் சட்டம் என்னவென்றால், நபர் ஒருவர் உடல் ரீதியாக எதிர்க்கவில்லை அல்லது நபர் ஒருவர் எதிர்த்துப் போராட முயற்சிக்கவில்லை என்பதால், அந்த நபர் உடலுறவுக்கு ஒப்புக்கொள்கிறார் என்று அர்த்தமல்ல. இருப்பினும், உடல் ரீதியான எதிர்ப்பு இல்லாதது, சில சந்தர்ப்பங்களில், அந்த நபர் உடலுறவுக்கு சம்மதிக்கிறார் அல்லது குற்றம் சாட்டப்பட்டவர் மற்றவர் சம்மதிக்கவில்லை என்று தெரியாது என்பதற்கான சான்றாக பயன்படுத்தப்படலாம்.

### நபர் ஒருவர் போதையில் இருந்தால் உடலுறவுக்கு சம்மதிக்க முடியுமா?

மது அல்லது மருந்துகளுடன் போதை நபர் ஒருவர் உடலுறவுக்கு ஒப்புக்கொண்டாரா என்பதைத் தீர்மானிப்பதில் முக்கிய கருத்தாக இருக்கலாம். மது அல்லது எந்தவொரு போதைப்பொருளாலும் "கணிசமாக போதையில்" இருந்தால் நபர் ஒருவர் உடலுறவுக்கு சம்மதிக்க முடியாது.

கணிசமாக போதை, அந்த நபர் உட்கொள்ளும் மது அல்லது மருந்துகளின் அளவு அவர்களை சுதந்திரமாகவும் தானாக முன்வந்தும் உடலுறவு கொள்ள ஒப்புக்கொள்ள முடியாதபடி செய்யும்.

### தவறான அடையாளத்தின் அடிப்படையில் நபர் ஒப்புக்கொண்டால் என்ன செய்வது?

ஆச்சரியப்படத்தக்க வகையில், ஒப்புதல் பெறப்பட்டால் அது செல்லுபடியாகாது: மற்ற நபரின் அடையாளத்தைப் பற்றிய தவறான நம்பிக்கை. உதாரணமாக, ஒரு இரட்டை சகோதரர் தனது சகோதரனின் மனைவியுடன் படுக்கையில் இருந்தால், அவள், தவறான நம்பிக்கையின் கீழ், அவருடன் உடலுறவு கொள்ள ஒப்புக்கொண்டாள். அவள் அத்தகைய தவறான நம்பிக்கையின் கீழ் இருக்கிறாள் என்பதை சகோதரர் அறிந்து, தொடர்ந்தால், அவர் பாலியல் வன்கொடுமைக்கு குற்றவாளியாக இருப்பார்.

(11ஆம் பக்கம் பார்க்க)

# மோடியை வெளியேற்றுவாரா கெஜ்ரிவால்?



ரமணி

குஜராத் சட்ட மன்றத்தேர்தல் அடுத்தமாதம் நடைபெறவுள்ளது. இதுவரை காலமும் பாரதீய ஜனதாவுக்கும், காங்கிரஸுக்கும் இடையேதான் குஜராத்தில் போட்டி இருந்தது. இப்போது கெஜ்ரிவால் ஆம் ஆத்மியும் களத்தில் இறங்கியுள்ளது. புதிய திட்டங்களுடன் கெஜ்ரிவால் களமிறங்கியுள்ளதால், குஜராத் தேர்தல்களம் சூடு பிடித்துள்ளது.

குஜராத்தில் ஆட்சிக்கு எதிரான மனநிலை இருப்பதாக செய்திகள் கூறிவரும் நிலையில், முன்னாள் முதல்வர் விஜய் ரூபானி, முன்னாள் அமைச்சர்கள், முன்னாள் எம்.எல்.ஏக்கள் எனப் பலரும் தேர்தலில் போட்டியிடவில்லை.

குஜராத் சட்டமன்றத் தேர்தல் வரும் டிசம்பர் 1, 5 ஆகிய திகதிகளில் இரண்டு கட்டங்களாக நடைபெறவிருக்கிறது. அடுத்த ஒன்றரை ஆண்டுகளில் நாடாளுமன்ற பொதுத்தேர்தல் நடைபெறவிருக்கும் சூழலில், குஜராத் சட்டமன்றத் தேர்தல் பா.ஜ.கவுக்கு மிக முக்கியமான தேர்தலாகப் பார்க்கப்படுகிறது. பா.ஜ.க மீண்டும் ஆட்சியைப் பிடிக்க வாய்ப்பு இருப்பதாக கணிப்புகள் வந்தாலும், கால் நூற்றாண்டு காலத்துக்கு மேலாக பா.ஜ.கவுக்கு ஆட்சி நடைபெற்றுவரும் நிலையில், அங்கு ஆட்சிக்கு எதிரான மனநிலை இருப்பதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

குஜராத்தில் 1995ஆம் ஆண்டிலிருந்து பா.ஜ.க ஆட்சி நடைபெற்றுவருகிறது. 2014இல் பிரதமர் வேட்பாளராக அறிவிக்கப்பட்ட பிறகு, அங்கு ஆனந்தி பென் முதல்வரானார். இரண்டே ஆண்டுகளில், முதல்வர் பதவியை ஆனந்தி பென் இராஜினாமா செய்தார். பிறகு, விஜய் ரூபானி முதல்வரானார். இவரும் கடந்த ஆண்டு முதல்வர் பதவியிலிருந்து விலகினார். இவரைத் தொடர்ந்து, பூபேந்திர படேல் முதல்வரானார்.

2001ஆம் ஆண்டிலிருந்து 2014ஆம் ஆண்டுவரை குஜராத் முதல்வராக நரேந்திர மோடி தொடர்ச்சியாக ஆட்சி செய்தார். அவர் முதல்வராக இருந்தபோது, 'வளர்ச்சி' என்ற சொல்லே மாநிலம் முழுவதும் சொல்லப்பட்டது. ஆனால் மோடி பிரதமரான பிறகு, அடுத்த முதல்வர்களின் ஆட்சியில் பல்வேறு சிக்கல்களை பா.ஜ.க. அரசு சந்தித்ததாக சொல்லப்பட்டது. அடுத்தடுத்து, முதல்வர்கள் பதவி விலகியதற்கு அதுதான் முக்கியக் காரணம். தற்போது, பல சவால்களை குஜராத் பா.ஜ.க அரசு எதிர்கொண்டுவருகிறது.

சிறு குறு தொழில்கள் கடும் பாதிப்புக்கு ஆளாகியிருக்கின்றன. அந்த மாநிலத்தின் பொருளாதாரத்துக்கு முக்கிய ஆதாரமாக விளங்கும் நெசவுத்தொழில் கடுமையாக பாதிக்கப்பட்டிருக்கிறது. வர்த்தகர்கள், தொழிலாளர்கள், விவசாயிகள், அரசு ஊழியர்கள் உட்பட பல்வேறு தரப்பினரின் கோரிக்கைகளை பா.ஜ.க அரசு கண்டுகொள்ளாமல் இருந்ததன் காரணமாக, அரசுக்கு எதிரான மனநிலையை அதிகரித்திருக்கிறது என்கிறார்கள் அரசியல் பார்வையாளர்கள்.

ஆம் ஆத்மியின் தலைமை ஒருங்கிணைப்பாளரும் டெல்லி முதல்வருமான அரவிந்த் கெஜ்ரிவால் தீவிரப் பிரசாரம் மேற்கொண்டுவருகிறார். மாதம் 300 யூனிட் இலவச மின்சாரம், வேலையில்லா இளைஞர்களுக்கு மாதம் 3,000 உதவித்தொகை, பெண்களுக்கு மாதம் 1000 உதவித்தொகை, அயோத்திக்கு இலவச ரயில் பயணம் உட்பட கெஜ்ரிவால் அறிவித்திருக்கும் வாக்குறுதிகள் வாக்காளர்களிடம் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் என்ற அச்சம் பா.ஜ.கவுக்கு இருக்கிறது. மொத்தம் 182 சட்டமன்றத் தொகுதிகளைக் கொண்டிருக்கும் குஜராத்தில், சட்டமன்றத் தேர்தலில் பா.ஜ.கவும் காங்கிரஸும் பெற்ற வாக்குகளின் சதவிகித இடைவெளி மிகவும் குறைவுதான்.

ஆகவே, பல வகைகளில் இந்த சட்டமன்றத் தேர்தலில், பா.ஜ.க பல சவால்களைச் சந்தித்துவருகிறது. இந்த நிலையில்தான், குஜராத்தில் மோர்பி தொங்கு பாலம் அறுந்து விழுந்து விபத்து ஏற்பட்டதில் 140க்கும் மேற்பட்டோர் மரணமடைந்திருக்கிறார்கள். இதுவும், ஆளும் பா.ஜ.கவுக்கு பெரும் சோதனையாக அமைந்திருக்கிறது. இந்தத் துயரச் சம்பவம், வரும் சட்டமன்றத் தேர்தலில் தாக்கத்தை ஏற்படுத்தலாம் என்றும் அரசியல் பார்வையாளர்கள் சொல்கிறார்கள்.

இப்படியான சூழலில்தான், வரும் தேர்தலில் 150 தொகுதிகளைப் பிடித்துவிடுவோம் என சில மாதங்களுக்கு முன்புவரை சொல்லிவந்த பா.ஜ.க தலைவர்கள், தற்போது 120 தொகுதிகளுக்கு மேல் பிடிப்போம் என்று கூறுகிறார்கள். இதிலிருந்தே அவர்களின் நிலைமை புரிகிறது. குஜராத்தில் பிரசாரம் மேற்கொள்ளும் பிரதமர் மோடி, 'வளர்ச்சி' பற்றியெல்லாம் பெரிதாகப் பேசவில்லை.



மாறாக, பல்லாயிரம் கோடி ரூபா மதிப்பிலான திட்டங்களை சமீபகாலத்தில் அவர் தொடங்கிவைத்திருக்கிறார். அதாவது, இனிமேல் தொடங்கப்படவிருக்கும் திட்டங்கள் பற்றிய அறிவிப்புகள் அவை. அங்கு, பா.ஜ.க ஆட்சியில் நிறைவேற்றப்பட்ட சில திட்டங்கள் பற்றி மோடி குறிப்பிட்டுப் பேசினாலும்கூட, முன்பு சொல்லப்பட்ட 'குஜராத் மாடல்' என்ற பிரசாரத்துக்கு கிடைத்த வரவேற்பு இந்த முறை கிடைத்ததாகத் தெரியவில்லை.

இத்தகைய சூழலில்தான், முன்னாள் முதல்வர் விஜய் ரூபானி, முன்னாள் அமைச்சர்கள் எனப் பலரும் இந்தத் தேர்தலில் போட்டியிடவில்லை என்ற செய்திகள் வெளியாகியிருக்கின்றன. பா.ஜ.கவின் வேட்பாளர்களைத் தேர்வு செய்வதற்கான கூட்டம் நவம்பர் 9ஆம் திகதி நடைபெற்றது. இந்த நேரத்தில்தான், தேர்தலில் போட்டியிடப்போவதில்லை என்ற முடிவை விஜய் ரூபானி அறிவித்தார். முன்னாள் அமைச்சர்கள் கௌசிக் படேல், சௌரவ் படேல், ஆர்.சி.ஃபல்டு, பூபேந்திரசின் சுடஸ்சமா, பிரதிப்சின் ஜடேஜா உள்ளிட்ட முன்னாள் அமைச்சர்களும் தேர்தலில் போட்டியிடப்போவதில்லை என்று அறிவித்திருக்கிறார்கள்.

தேர்தலில் புதிய முகங்களை களமிறக்குவது என்று பா.ஜ.க முடிவுசெய்திருக்கிறது. எனவே, விஜய் ரூபானிக்கும் பல முன்னாள் அமைச்சர்களுக்கும் தேர்தலில் போட்டியிட சீட் வழங்கப்படாது என்பது எதிர்பார்க்கப்பட்ட ஒன்றுதான். மேலும், வேட்பாளர் பட்டியலில் அவர்களின் பெயர்கள் ஏற்கெனவே நீக்கப்பட்டுவிட்டதாக பா.ஜ.க வட்டாரங்களில் பேசப்பட்டது. தற்போது சட்டமன்ற உறுப்பினர்களாக இருக்கும் 40க்கும் மேற்பட்டவர்களுக்கு மீண்டும் போட்டியிட வாய்ப்பு வழங்கப்பட மாட்டாது என்றுதான் செய்திகள் தெரிவிக்கின்றன.

புதிய முகங்களை அறிமுகப்படுத்துவதால், பா.ஜ.க மீதான அதிருப்தியும் ஆட்சிக்கு எதிரான மனநிலையும் மாறிவிடுமா? சௌரவ் படேல் மீண்டும் போட்டியிடப்போவதில்லை என்ற காரணத்தால், பல ஆண்டுகளாக மின்துறை அமைச்சராக இருந்த அவர் மீது சொல்லப்பட்ட ஊழல் குற்றச்சாட்டுகளை மக்கள் மறந்துவிடுவார்களா என்பது போன்ற கேள்விகளை எதிர்க்கட்சிகள் எழுப்புகின்றன. மக்கள் முடிவு என்ன என்பது வாக்கு எண்ணிக்கையில் தெரிந்துவிடும்!

## பாலியல் குற்றங்கள்:...

**நபர் ஒருவர் தூங்கினால் உடலுறவுக்கு சம்மதிக்க முடியுமா?**

நபர் ஒருவர் தூங்கினால் அல்லது சுயநினைவின்றி இருந்தால், உடலுறவுக்கு சம்மதிக்க முடியாது.

கணவன் அல்லது மனைவி மற்ற நபர் தூங்கும் போது உடலுறவில் ஈடுபடும்போது இது சுவாரஸ்யமாக மாறும். இது பாலியல் தாக்குதலா என்பது, பாலியல் உடலுறவின் உண்மையான காட்சி மற்றும் திருமணத்தின் தன்மையைப் பொறுத்தது.

**திருமணம் என்பது கணவன் மனைவிக்கு இடையிலான அனைத்து உடலுறவுக்கும் சம்மதம் உள்ளது என்று அர்த்தமா?**

சில மக்கள் நம்புவதற்கு மாறாக, திருமண உறவில் உள்ள இருவர் பாலியல் உடலுறவுக்கு சம்மதிக்கிறார்கள் என்று அர்த்தம் இல்லை.

திருமணமானவர்கள் தங்கள் வாழ்க்கைத் துணையினால் பாலியல் வன்கொடுமைக்கு ஆளான பல சூழ்நிலைகள் உள்ளன.

**நபர் ஒருவருக்கு மனநலக் குறைபாடு இருந்தால், அவர் உடலுறவுக்கு சம்மதிக்க முடியுமா?**

அறிவாற்றல் திறன் (புரிந்துகொள்ளும் மற்றும் பகுத்தறிவு முடிவுகளை எடுக்கும் திறன்) இல்லாத நபர் உடலுறவுக்கு ஒப்புதல் அளிக்க முடியாது.

**ஒரு வகை உடலுறவுக்கு நபர் ஒப்புக்கொண்டால், ஆனால் மற்றொன்று விதமான உடலுறவு நிகழ்த்தப்பட்டால் என்ன செய்வது?**

ஒப்புதல் அளிக்கப்பட்ட செயலை விட வேறுபட்ட ஒரு செயலை நபர் ஒருவர் செய்யும் போது ஒப்புதல் செல்லுபடியாகாது.

நபர் ஒருவர் வாய்வழி உடலுறவுக்கு ஒப்புக்கொண்டார் என்று சொல்லலாம், ஆனால், அவர் தனது பெண் உறுப்பு ஊடுருவப்படுவதை விரும்பவில்லை என்பதை தெளிவுபடுத்தினார் என்றால் மீறி செய்யும்போது அந்த ஊடுருவல் பாலியல் தாக்குதல் ஆகும்.

**நபர் ஒருவர் மற்ற நபரிடம் சொல்லாமல் உடலுறவின் போது ஆணுறையை கழற்றினால் என்ன செய்வது?**

பொதுவாக "ஸ்டெல்திங்" Stealthing என்று குறிப்பிடப்படுகிறது, அங்கு நபர் ஒருவர் ஆணுறையைப் பயன்படுத்தி உடலுறவு கொள்ள ஒப்புக்கொள்கிறார் மற்றும் மற்ற நபர் மூலம் ஒரு பகுதி வழியாக ஆணுறையை புத்திசாலித்தனமாக அகற்றுகிறார்.

ஆணுறை அகற்றப்பட்டதைப் பற்றி மற்ற நபருக்குத் தெரிவிக்கப்படாவிட்டால், அந்த இடத்திலிருந்து ஒப்புதல் செல்லுபடியாகாது, அது பாலியல் தாக்குதலுக்கு சமமாகும்.

**16 வயதிற்குட்பட்ட** நபர் **ஒருவர் உடலுறவுக்கு சம்மதிக்க முடியுமா?**

16 வயதிற்குட்பட்ட ஒருவர் உடலுறவுக்கு சம்மதிக்க முடியாது.

எனவே, 16 வயதிற்குட்பட்ட நபர் உடலுறவு கொள்ள ஒப்புக்கொண்டாலும், அவர்களின் வயதின் அடிப்படையில், ஒப்புதல் இல்லை என்று கருதப்படும்.

வயது வந்த ஒருவர் 16 வயதிற்குட்பட்ட நபர் ஒருவருடன் உடலுறவில் ஈடுபட்டால், குழந்தையின் வயதைப் பொறுத்து குற்றங்கள் சட்டம் 1900 (NSW) இன் பிரிவு 66 ஏ அல்லது பிரிவு 66 சி இன் கீழ் அவர்கள் குற்றம் சாட்டப்படுவார்கள்.

**உடலுறவு என்பது ஆரோக்கியம் அல்லது சுகாதார நோக்கங்களுக்காக என்று நபர் தவறான நம்பிக்கையின் கீழ் இருந்தால் என்ன செய்வது?**

நபர் ஒருவர் அது உடல்நலம் அல்லது சுகாதார நோக்கங்களுக்காக என்று தவறான நம்பிக்கையின் கீழ் உடலுறவு கொள்ள ஒப்புக்கொண்டால், அவர்கள் சம்மதிக்கவில்லை என்று கருதப்படுகிறது.

வெளிப்படையாக குற்றம் சாட்டப்பட்ட நபர் இந்த தவறான நம்பிக்கையைப் பற்றி அறிந்திருக்க வேண்டும்.

எடுத்துக்காட்டாக, திரு எக்ஸ் உடன் உடலுறவு கொள்வது அவர்களை கொரோனா வைரஸிலிருந்து நோய் எதிர்ப்பு சக்தியை ஏற்படுத்தும் என்ற தவறான நம்பிக்கையின் கீழ் நபர் ஒருவர் இருந்தால், அவர்கள் அத்தகைய தவறான நம்பிக்கையின் கீழ் இருப்பதை திரு எக்ஸ் அறிந்திருந்தால், ஒப்புதல் செல்லுபடியாகாது.

**அச்சுறுத்தல்கள் அல்லது பலாத்காரங்கள் அல்லது பயங்கரவாதம் மூலம் ஒப்புதல் பெறப்பட்டால் என்ன செய்வது?**

அச்சுறுத்தல், பலவந்தம் அல்லது பயங்கரவாதத்தால் பெறப்படும் ஒப்புதல் செல்லுபடியாகாது.

மேலும் ஒரு சுவாரஸ்யமான உண்மை என்னவென்றால், நபர் ஒருவர் சட்டவிரோதமாக தடுத்து வைக்கப்பட்டால் பாலியல் உடலுறவுக்கு சம்மதிக்க முடியாது. உதாரணமாக ஒரு நபர் கடத்தப்பட்டால்.

எவ்வாறாயினும், பாலியல் பலாத்காரத்தில் சம்மதம் தொடர்பான மேற்குறிப்பிட்ட விடயங்கள் அனைத்தும் இறுதிக் கூறுக்கு உட்பட்டவையாகும். அதாவது - குற்றம் சாட்டப்பட்ட நபருக்கு ஒப்புதல் இல்லாதது குறித்து அறிவு இருந்ததா?

**ஒப்புதல் பற்றிய அறிவு**

ஒப்புதல் இல்லாமையை நிறுவுவதோடு, குற்றம் சாட்டப்பட்ட நபருக்கு பாதிக்கப்பட்டவர் சம்மதிக்கவில்லை என்பதை அறிந்திருப்பதையும் அரசுத் தரப்பு நிரூபிக்க வேண்டும்.

பாலியல் தாக்குதலின் நோக்கங்களுக்கான அறிவும் மிகவும் பரந்த அளவில் வரையறுக்கப்படுகிறது.

பின்வரும் சூழ்நிலைகளில் அறிவு தொடர்பான தெளிவு நிரூபிக்கப்படும் :

குற்றம் சாட்டப்பட்டவர் உண்மையில் பாதிக்கப்பட்டவர் சம்மதிக்கவில்லை என்பதை அறிந்திருந்தார் என்றால்,

இது மிகவும் நேரடியானது. பாதிக்கப்பட்டவர் சம்மதிக்கவில்லை என்பதை குற்றம் சாட்டப்பட்டவர் உண்மையில் அறிந்திருந்த சூழ்நிலைகளை இது உள்ளடக்குகிறது. எடுத்துக்காட்டாக, பாதிக்கப்பட்டவர் அவர்களை நிறுத்தச் சொன்னால்,

பாதிக்கப்பட்டவர் சம்மதிக்கவில்லை என்ற சாத்தியத்திற்கு குற்றம் சாட்டப்பட்டவர் பொறுப்பற்றவராக இருந்தார்.

பாதிக்கப்பட்டவர் சம்மதிக்கவில்லை என்பது ஒரு சாத்தியம் என்று குற்றம் சாட்டப்பட்ட நபர் அறிந்திருந்த சூழ்நிலைகளில் இது நிகழ்கிறது, ஆனால் பொருட்படுத்தாமல் பாலியல் உடலுறவுடன் தொடர்ந்தார்.

எடுத்துக்காட்டாக, போதையில் இருந்த ஒருவருடன் உடலுறவு ஏற்பட்டால், குற்றம் சாட்டப்பட்டவர்கள் தங்கள் போதை காரணமாக அந்த நபரால் ஒப்புக்கொள்ள முடியாமல் போகலாம் என்பது ஒரு சாத்தியம் என்று தெரிந்திருந்தால்,

பாதிக்கப்பட்டவர் சம்மதிக்கிறார் என்று நம்புவதற்கு குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு நியாயமான காரணங்கள் எதுவும் இல்லை.

பாதிக்கப்பட்டவர் பாலியல் உடலுறவுக்கு சம்மதித்தார் என்று குற்றம் சாட்டப்பட்டவர் நம்புவதற்கு நியாயமான காரணங்கள் எதுவும் இல்லை என்பதை நிரூபிக்க முடிந்தால், அரசுத் தரப்பு அறிவின் அம்சத்தை நிரூபிக்க முடியும்.

உதாரணமாக, யாராவது தூக்கத்தில் இருந்தால், குற்றம் சாட்டப்பட்டவர்கள் விழித்திருந்தால் தூக்கத்தில் இருந்தவர் ஒப்புதல் தந்து விட்டார்கள் என்று நம்புவதற்கு எந்த காரணமும் இல்லை.

**குற்றம் சாட்டப்பட்டவர் ஒப்புதல் பற்றி தவறான நம்பிக்கையின் கீழ் இருந்தால் என்ன செய்வது?**

குற்றம் சாட்டப்பட்டவர் பாதிக்கப்பட்டவர் சம்மதிக்கிறார் என்று உண்மையான (ஆனால் தவறான) நம்பிக்கையைக் கொண்டிருந்தால், அவர்கள் பாலியல் வன்கொடுமை குற்றத்துக்கு ஆளாக முடியாது. பாலியல் தாக்குதலின் முக்கிய அம்சமாக அறிவு உள்ளது.

பாதிக்கப்பட்டவர் சம்மதிக்கிறாரா என்பது குறித்த அறிவு குற்றம் சாட்டப்பட்ட நபருக்கு இருக்கிறதா என்பதைத் தீர்மானிப்பதில், தீர்மானிக்க குற்றம் சாட்டப்பட்டவர் என்ன செயலூக்கமான நடவடிக்கைகளை எடுத்தார் என்பதை நடுவர்கள் பரிசீலிக்க வேண்டும்.

முக்கியமாக, குற்றம் சாட்டப்பட்டவர் தாமாக முன்வந்து பொருட்களை உட்கொள்ளாத வரை குற்றம் சாட்டப்பட்டவர்கள் மது மற்றும் பிற போதைப்பொருட்களை உட்கொள்வதை கணக்கில் எடுத்துக் கொள்ள முடியாது (எடுத்துக்காட்டாக, குடிப்பழக்கம் அதிகரிக்கும் நிகழ்வுகளில்).

**பாலியல் வன்கொடுமைக்கான அதிகபட்ச தண்டனை என்ன?**

பாலியல் வன்கொடுமைக்கு அதிகபட்சம் 14 ஆண்டுகள் சிறைத்தண்டனையும், 7 ஆண்டுகள் பரோல் அல்லாத நிலையான காலமும் விதிக்கப்படும்.

**பாலியல் வன்கொடுமை வழக்குகளை எந்த நீதிமன்றம் தீர்மானிக்கிறது?**

பாலியல் தாக்குதல் என்பது NSW இன் மாவட்ட நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டு உறுதி செய்யப்பட வேண்டும் .

டி20 உலக கோப்பை தொடருக்காக அவுஸ்திரேலியா சென்றிருந்த இலங்கை கிரிக்கெட் அணி வீரர் தனுஷ்க குணதிலக்க, அவுஸ்திரேலிய பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

டேட்டிங் செயலி மூலம் அறிமுகமான தன்னிடம் முதலாவது சந்திப்பில் தன்னிடம் அத்துமீறி பாலியல் வல்லுறவில் தனுஷ்க ஈடுபட்டதாக அந்தப் பெண் கொடுத்த புகாரின் பேரில் அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவுஸ்திரேலிய பாலியல் குற்றப்பிரிவு அதிகாரி, துணை கண்காணிப்பாளர் ஜேன் டோஹெர்டி அளித்த அறிக்கையின்படி, தனுஷ்க டிண்டர் டேட்டிங் செயலி மூலம் பாதிக்கப்பட்ட பெண்ணுடன் பழகி வந்துள்ளார். சிட்னியில் உள்ள ஓபேரா பாரில் கடந்த புதன்கிழமையன்று முதன்முதலில் இருவரும் சந்தித்து பேசியுள்ளனர். பின்னர் ரோஸ்பே பகுதியில் உள்ள அப்பெண்ணின் வீட்டுக்கு செல்ல இருவரும் முடிவு செய்து சென்றுள்ளனர். உடலுறவுக்கு அப்பெண்ணும் தயாராகவே இருந்தபோதிலும் ஆணுறை அணிந்து உடலுறவு கொள்ளவேண்டும் என்று தனுஷ்க குணதிலக்கவிடம் அவர் கூறியுள்ளார். இதற்கு தனுஷ்க மறுத்துள்ளார். இது தொடர்பாக அவர்களிடையே விவாதம் எழுந்தபோது, தனுஷ்க அப்பெண்ணை தாக்கியதோடு கட்டாயப்படுத்தி பாலியல் உறவில் ஈடுபட்டார் என்று குற்றம் சாட்டப்பட்டுள்ளது. தவிர புகார்தாரர் குற்றம் சாட்டப்பட்டவரின் மணிக்கட்டைப் பிடித்து அவரது கையை அகற்ற முயன்றார், ஆனால் குற்றம் சாட்டப்பட்டவர் அவரது கழுத்தை இறுக்கமாக அழுத்தினார் எனப்படுகின்றது.

மேலும் "புகார்தாரர் தனது உயிருக்கு பயந்து, குற்றம் சாட்டப்பட்டவர்களிடமிருந்து தப்பிக்க முடியவில்லை."

வாய்வழி உடலுறவில் ஈடுபடும் முயற்சியின் போது அவர் மூச்சுத் திணறினார் மற்றும் சுவாசிக்க முடியவில்லை என்று நீதிமன்ற ஆவணங்கள் கூறுகின்றன.

"குற்றம் சாட்டப்பட்டவர்களிடமிருந்து அவள் தொடர்ந்து விலகிச் செல்ல முயன்றாள், இது அவள் சம்மதிக்கவில்லை" என்பதற்கான தெளிவான அறிகுறியாகும்.

கைது செய்யப்பட்ட பின்னர் பொலிஸ் விசாரணையில், குணதிலக்க பாதிக்கப்பட்டதாக சொன்ன கதையை உறுதிப்படுத்தினார். ஆனால் அவர் வன்முறையில் ஈடுபட்டதாகவோ அல்லது ஒப்புதல் இல்லாமல் உடலுறவு கொண்டதையோ அவர் மறுத்தார்.

மாஜிஸ்திரேட் ராபர்ட் வில்லியம்ஸ் குணதிலகாவின் ஜாமீனை மறுத்துவிட்டார். அதாவது இந்த விவகாரம் ஜனவரி மாதம் நீதிமன்றத்தில் முன்வரும் வரை அவர் அடுத்த இரண்டு மாதங்களுக்கு விளக்கமறியலில் இருப்பார்.

**இதில்**

★ கட்டாய உடலுறவு
★ அவள் விலக முயன்ற போது விடவில்லை - சம்மதம் மறுக்கப்பட்டுள்ளது
★ தாக்குதல் - அந்தப் பெண்ணை மூன்று முறை மூச்சுத் திணறச் செய்தது
★ ஆணுறை அணிய மறுத்தது ஆகியவை குற்றங்களாகும்.








# மு. கா. பேராளர் மாநாடு 2022: ‘நடுவல கொஞ்சம் பக்கத்தைக் காணோம்’







**நூருல் ஹுதா உமர்**

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், கிழக்கு மாகாணத்தின் காத்தான்குடி நகரில் முன்னாள் அமைச்சர் சட்டமுதுமாணி எம்.எச்.எம்.அஷ்ரப் தலைமையில் இலங்கை முஸ்லிம்களைப் பிரதிநித்துவப்படுத்துவதற்காக 1981ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. 2004ஆம் ஆண்டு இடம்பெற்ற நாடாளுமன்றத் தேர்தல்களில் 2% வாக்குகளைப் பெற்று தனது நாடாளுமன்ற அங்கத்துவத்தை உறுதிப்படுத்திக்கொண்டது. அஷ்ரபின் மரணத்தின் பின்னர் ஏற்பட்ட தலைமைத்துவ வெற்றிடத்திற்கு கிழக்கு மாகாணத்தில் இப்போதைய தலைவர் சட்டமுதுமாணி ரவூப் ஹக்கீமை மு.கா. தலைவராக மக்கள் பிரகடனம் செய்துகொண்டார்கள். இன்றுவரை சுமார் 22 ஆண்டுகள் ரவூப் ஹக்கீமின் தலைமையில் இயங்கிவரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், தனியார் கம்பெனி போன்ற நிலையில் இயங்குவதாக பரவலான குற்றச்சாட்டுகளுக்கு மத்தியில் கடந்த 07ஆம் திகதி தன்னுடைய 30ஆவது பேராளர் மாநாட்டை புத்தளத்தில் நடத்தியது.

புத்தளத்தில் இந்த மாநாடு நடத்தப்பட முடிவெடுக்கப்பட்ட தினத்திலிருந்து பிரச்சினை தோற்றம் பெற ஆரம்பித்தது. சுமார் ஒன்றரை தசாப்தங்களாக முஸ்லிம் காங்கிரஸின் பேராளர் மாநாட்டை வடக்கு கிழக்கில் நடத்துவதற்கு தலைவர் ஹக்கீம் மறுப்பது ஏன்? இதனை கேட்பதற்கு அதிஉயர்பீட உறுப்பினர்களுக்கு திராணி இல்லையா? என்ற அடிப்படை போராளிகளின் (ஆதரவாளர்கள்) கேள்வியுடன் பல்வேறு வாதப்பிரதிவாதங்களுக்கிடையிலேயே இந்த மாநாடு புத்தளத்தில் இம்மாதம் ஏழாம் திகதி இடம்பெற்றது. கிழக்கில் பேராளர் மாநாடு இடம்பெற்றால் ஹக்கீமின் தலைமை கதிரை வேறு யாருக்காவது சென்றுவிடும் என்ற அச்சம் அவர் மனதில் இருப்பதும் அதற்கான சாத்தியப்பாடுகளும், கணித சமன்பாடுகளும் சரியாக உள்ளதும் அரசியல் “சாணக்கியனான” ஹக்கீம் அறியாமலில்லை என்கின்றனர் தாருஸ்ஸலாம் ரகசியம் அறிந்தவர்கள்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸானது அடக்கி ஒடுக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மாகாண முஸ்லிம்களின் அரசியல் உரிமைகளை அடைவதை முதன்மையாகவும், நாட்டின் அனைத்து முஸ்லிம்களையும் ஒற்றுமைப்படுத்தும் நோக்கிலும் உருவாக்கப்பட்டது. ஆனால், இன்று முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் என்ற ஒரு தனிநபரின் “இலங்கை முஸ்லிம்களின் தேசிய தலைவர்” என்ற சுயநல அந்தஸ்துக்காகவே வடக்கு, கிழக்கு முஸ்லிம்கள் கறிவேப்பிலையாக பாவிக்கப்பட்டு வருகின்றனர். இந்த உண்மையைப் புரிந்தவர்கள் துரோகிகளாகவும், புரியாதவர்கள் போராளிகளாகவும் சித்திரிக்கப்படுகின்றனர். கிழக்கு மாகாணத்திலேயே முஸ்லிம்கள் அதிக செறிவாக வாழ்கின்றனர். முஸ்லிம் காங்கிரஸுக்கு அதிக வாக்கு செல்வாக்குகளும், உள்ளூராட்சிமன்ற சபைகள், அதன் தலைவர்கள், அதிகாரங்கள், மாகாண சபை உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் என அனைத்து மக்கள் பிரதிநிதிகளும் கிழக்கிலிருந்தே 85 சதவீதமளவில் தெரிவுசெய்யப்பட்டு வருகின்றனர்.

அதாவது, கிழக்கு மக்களின் செல்வாக்கு இல்லையென்றால் முஸ்லிம் காங்கிரஸே இல்லை. ஆனால், இத்தனை இருந்தும், முஸ்லிம் காங்கிரஸின் பேராளர் மாநாட்டை கிழக்கு மாகாணத்தின் எந்தவொரு மூலையிலாவது நடத்துவதற்கு இன்றைய தலைவர் விரும்புவதில்லை என்பதுதான் புரியாத புதிராக உள்ளது. வடக்கு, கிழக்கை புறந்தள்ளிவிட்டு, அதிகமாக கண்டி, கொழும்பு ஆகிய மாவட்டங்களிலேயே பேராளர் மாநாட்டை தொடர்ந்து மாறி மாறி நடத்திவருகின்ற தலைவரின் சூழ்ச்சிகளை உணர்ந்துகொள்கின்ற ஆற்றல் கட்சியின் எந்தவொரு மட்டத்தினருக்கும் இல்லை. அவ்வாறு தலைவரின் சூழ்ச்சிகளை உணர்ந்தாலும், அதனை வெளிப்படுத்தும் தைரியம் அல்லது முதுகெலும்பு எந்த உறுப்பினர்களிடமும் இல்லை. பேராளர் மாநாடு என்ற அறிவித்தல் வெளியானதும், அதில் ஒரு பதவியை அல்லது அடுத்த உயர் பதவியை எவ்வாறு பெற்றுக்கொள்ளலாம், அதற்காக தலைவரை எவ்வாறு வால்பிடிக்கலாம் என்பதில் கட்சியிலுள்ள அனைவரது கவனமும் செல்வதனால், அதனை தனக்கு சாதகமாக பயன்படுத்திக்கொண்டு வடக்கு, கிழக்குக்கு வெளியே மாநாட்டுக்கான இடம் தலைவர் அன்ட் சகோதரர்களாலேயே தந்திரோபாயமாக தீர்மானிக்கப்படுகின்றது. கிழக்கு மக்கள் மூலமாக அனைத்து நன்மைகளையும் அடைந்துவிட்டு, அதே மக்களுக்கு துரோகம் செய்து வருகின்ற தலைவரின் நடிப்பும், நாடகமும் எவ்வளவு காலத்துக்கு நிலைக்கும்? இறைவனின் தீர்ப்பு வரும்வரைக்கும் பொறுமையோடு காத்துக்கொண்டிருக்கிறோம் என்கிறார் மூத்த போராளி இக்பால்.

முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் அனைத்து பொறுப்புகளிலிருந்து நீக்கப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு கட்சியின் பேராளர் மாநாட்டிற்கு அழைப்பு விடுக்கப்பட்டது ஆதரவாளர்கள் மத்தியில் அதிருப்தியை உண்டாக்கியிருந்தது. கட்சியின் செயலாளரினால் அழைப்பிதழ் கடிதம் எல்லோருக்கும் அனுப்பப்பட்ட நிலையில், குறிப்பிட்ட மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஏற்கனவே வகித்த பதவிகளை வழங்குவதற்கும் கட்சி தலைமை தீர்மானித்திருந்ததுடன், தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும் நோக்கில் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரீஸுக்கு இந்த சூழ்நிலையைப் பயன்படுத்தி ஆப்பு சீவும் நிபந்தனைகளையும் ஹக்கீம் முன் வைத்திருந்தார். அவற்றுக்கு உடன்பட்டு அந்நிபந்தனையை ஏற்றுக்கொண்டால் அவருக்கு உயரிய பதவியொன்றையும் அவர் முன்மொழிந்திருந்த நிலையில் அந்த நிபந்தனையை ஏற்க அவர் பின்வாங்கியதாக அறியமுடிகிறது.

கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அழைப்பு விடுக்கக்கூடாது என்று சில முக்கியஸ்தர்கள் கூறிவந்த நிலையில், இவற்றையெல்லாம் புறந்தள்ளிவிட்டு கட்சியின் தலைமையால் எம்.பிக்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டது அவர்களுக்கு பெரும் ஏமாற்றமாக அமைந்துள்ளது. இந்த பரபரப்பான நிலையில், முஸ்லிம் காங்கிரஸின் கட்டாய உயர்பீட கூட்டம் கடந்த 06ஆம் திகதி தலைமையகமான தாருஸ்ஸலாமில் கூடி, மிக நீண்ட இழுபறிக்கு மத்தியிலும், பலத்த வாதப்பிரதிவாதங்களுக்கு மத்தியிலும் புதிய நிர்வாகிகள் தெரிவு இடம்பெற்றது.

இந்த உயர்பீட கூட்டத்தில் குறிப்பாக, கட்சியை விட்டு இடைநிறுத்தப்பட்ட பைசல் காசிம், தௌபீக் ஆகிய இரு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு மன்னிப்பு வழங்கப்பட்டமை சலசலப்பை உண்டாக்கியது. குறிப்பாக, கட்சியைவிட்டு இடைநிறுத்தப்பட்டவர்களுக்கு பதவிகள் வழங்கக்கூடாது என உயர்பீட உறுப்பினர்களுக்கு மத்தியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. இருந்தபோதும் கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு பதவிகள் வழங்க வேண்டும் என்று விடாப்பிடியாக இருந்து, தான் இந்த நிறுவனத்தின் பிரதம நிறைவேற்றதிகாரி என்பதை நிரூபித்தார்.

இதன் தொடர்ச்சியாக கட்சியின் தேசிய அமைப்பாளராக நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தௌபீக்கும் கட்சியின் பொருளாளராக நாடாளுமன்ற உறுப்பினர் பைசல் காசிமும் தெரிவுசெய்யப்பட்டனர். ஆனால், ஹரீஸுக்கு பாவமன்னிப்பு வழங்க தன்னுடைய மேலதிகாரிகள் அனுமதி வழங்காமையினால் அவருக்கு மறுப்புத் தெரிவிக்கப்பட்ட்டது.

6ஆம் திகதி காலை ஹக்கீமை சந்தித்துக் கலந்துரையாடிய ஹரீஸ் தனது பக்க நிலைப்பாட்டையும், நியாயப்பாடுகளையும் சபைக்கு விளக்கியிருந்தார். அப்போது கட்சியின் உயர்நிலை நிர்வாகிகளும் தலைவருடன் உடனிருந்தனர். சில நிபந்தனைகளை உடன் ஏற்றுக்கொள்வதாகவும், ஒப்பமிடுவதாகவும் தெரிவித்திருந்தும் அவர் உடன்பட்ட நிபந்தனைகளை 7ஆம் திகதி காலை 10 மணிக்கு முன்னர் அமுல்படுத்துமாறு ஹக்கீம் கோரியிருந்தமை ஹரீஸுக்கு மட்டுமல்ல, அங்கிருந்த நிர்வாகிகளுக்கும் வேடிக்கையாக அமைந்திருந்தது. இதன்மூலம் ஹரீஸை நோக்கி வேன்றுமென்றே கத்தியை நீட்டிய ஹக்கீம், முழுமையாக ஹரீஸை பலிகொடுக்க விளைந்திருக்கிறார். இதனிடையில் ஆறாம் திகதி இடம்பெற்ற உச்சபீட கூட்டத்தில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஐ.எம்.மன்சூர், ஹரீஸ் இருந்த பிரதித் தலைவர் பதவிக்கு தெரிவு செய்யப்பட்டதுடன், கட்சியை விட்டு விலகிச்சென்ற அலிசாஹீர் மௌலானா பல எதிர்ப்புகளுக்கு மத்தியில் பிரதித் தலைவராக ஹாபிஸின் இடத்தை நிரப்ப நியமிக்கப்பட்டார். இதன்மூலம் மீண்டும் தனது உச்சகட்ட அதிகார துஷ்பிரயோகத்தை அல்லது வலிமையை தலைவர் உயர்சபைக்கு காட்டியிருந்தார். அதாவுல்லாவின் குதிரையிலிருந்து இறங்கிச்சென்ற முன்னாள் மாகாண அமைச்சர் எம்.எஸ்.உதுமாலெப்பை பிரதி தேசிய அமைப்பாளராக நியமிக்கப்பட்டார். ஏனைய பதவிகள் பெரும்பாலும் பழையவர்களுக்கே. இதில் முக்கிய சில உறுப்பினர்கள் பதவிகளை வெறுத்தும் உள்ளனர்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதி தவிசாளராக இருந்த தலைவரின் நெருங்கிய உறவினரான நயீமுல்லாஹ், கட்சியின் அனைத்து பதவிகளிலிருந்தும் தன்னை விடுவித்துக்கொண்டார். இதனால் தான் பதவியேற்றால் சமூக வலைத்தளங்களில் தான் தெரிவித்த கருத்துகளினால் மிக உச்ச அவமானத்தை சந்திக்க நேரிடும் என்று புரிந்துகொண்ட கட்சியின் இளைஞர் விவகார இணைப்பாளர் பதவியிலிருந்த தவமும் பதவிகளை பெறாமல் விலகிக் கொண்டார். பின்னணியிலிருந்த ஹாசீர் தனது வேலையை அழகாக திறன்பட செய்து முடித்தார். இருந்தாலும் சில உயர்பீட உறுப்பினர்களின் குரல்களுக்கு முன்னால் அவர்களின் சில திட்டங்கள் தோல்வியடைந்திருந்தன.

இடைநிறுத்தப்பட்ட மூவருள் இருவரை யாப்பின் பிரகாரம் தனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தைப் பாவித்து மீண்டும் கட்சியில் இணைத்துக்கொண்டதாக ரவூப் ஹக்கீம் அறிவித்ததைத் தொடர்ந்து தலைவரின் முடிவுக்கு எதிராக கடும் ஆட்சேபனையை தெரிவித்த நயீமுல்லாஹ், தவம், மன்சூர் போன்றவர்கள் கட்சியின் நலன் மற்றும் சமூகத்தில் தலைவர் மீதான நம்பகத்தன்மை ஆகியவற்றுக்கு குந்தகம் ஏற்படுத்தும் விதத்திலான தலைவரது முடிவு வாபஸ் வாங்கப்பட வேண்டும் என்ற பிரேரணை ஒன்றையும் முன்மொழிந்தார்கள். இது கடும் வாதப்பிரதிவாதங்களை உண்டாக்கியது. இருந்தாலும் அவ்விரு நாடாளுமன்ற உறுப்பினர்களையும் மீண்டும் கட்சியில் இணைத்துக்கொள்ளும் தனது தீர்மானத்தை தலைவர் அறிவித்தார். அதனைத் தொடர்ந்து இடம்பெற்ற நிர்வாக உத்தியோகத்தர் தெரிவின்போதே நயீமுல்லாஹ், தவம் ஆகியோர் பதவிகளை பொறுப்பேற்க மறுப்புத் தெரிவித்தனர்.

கட்சித் தலைவர் ரவூப் ஹக்கீமின் நீண்டகால பிரத்தியேக செயலாளராக கடமையாற்றிய நயீமுல்லாஹ் முஸ்லிம் காங்கிரஸில் சுமார் முப்பத்து நான்கு வருடங்கள் மூத்த உறுப்பினராகவும் இருபத்தைந்து ஆண்டுகள் தொடர்ச்சியாக அரசியல் அதியுயர் பீட உறுப்பினராகவும் இருந்தவர் என்பதும் தவம் தலைவர் ஹக்கீமின் உச்சகட்ட விசுவாசி என்பதும் இங்கு கவனிக்கப்பட வேண்டியது. இவர்கள் இருவரும் இன்னும் சிலரும் பேராளர் மாநாட்டையும் பகிஷ்கரித்திருந்தனர்.

தலைவர் ஹக்கீமின் வாதப்படி ஏனைய இரண்டு எம்.பிக்கள் செய்த அதே தவறைத்தான் ஹரீஸும் செய்தார். ஆனால், அவர்கள் இருவரையும் மன்னித்து உள்வாங்க முடிந்த தலைவர் ஹக்கீமுக்கு ஹரீஸை உள்வாங்க முடியாமல் போனமைக்குக் காரணம் விரிவாக அலசப்படவேண்டியது. இருந்தாலும் சுருங்கப் பார்த்தால் தலைவர் ஹக்கீமை கடுப்பாக்கிய விடயங்களில் பிரதானமாக அமைந்தது இந்தியப் பிரதமர் மோடிக்கு தமிழ்த் தேசியக் கட்சிகளுடன் இணைந்து 13ஐ வலியுறுத்தியும், வடக்கு - கிழக்கு இணைப்புக்கு பச்சை சமிக்ஞை காட்டியும் மு.கா. கடிதம் அனுப்ப முன்னெடுத்த செயற்பாட்டை கிழக்கின் கேடயம் கடுமையாக எதிர்த்தது. கிழக்கின் கேடயத்துடன் ஹரீஸ் இணைந்துதான் இதனை செய்கிறார் என்ற சந்தேகமும், கல்குடாவில் இடம்பெற்ற அம்பாறை மாவட்ட உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களின் சந்திப்பில் ஹரீஸ் சார்பான உறுப்பினர்களின் உடும்புப்பிடி நிலைப்பாடும் தான் என்பதை மறுப்பதற்கில்லை. இதனால்தானோ என்னவோ இந்த பேராளர் மாநாட்டுக்கு ஹரீஸுக்கு ஆதரவானவர்களை அழைக்கவேண்டாம் என்ற கண்டிப்பு உத்தரவு பேராளர்களுக்கான அழைப்பை மேற்கொண்டவர்களுக்கு மு.கா. தலைமைத்துவத்தினால் பிறப்பிக்கப்பட்டிருந்தது.

மு.கா. தலைவர் ஹக்கீமுக்கும், தமிழ் தேசிய கட்சிகளுக்கும், நாடுகடந்த புலம்பெயர் அமைப்புகளுக்கும், இந்திய தேசத்திற்கும் இருக்கும் உறவை சீரழிப்பதிலும், முட்டுக்கட்டை போடுவதிலும் இடைஞ்சல் செய்வதிலும் ஹரீஸ் எப்போதும் துருத்திக்கொண்டு முன்நிற்பவர். அதுமட்டுமல்ல, தமிழ்க் கூட்டமைப்பு - மு.கா. உறவில் விரிசலை உண்டாக்கியுள்ள கல்முனை உப பிரதேச செயலக விவகாரத்தில் விட்டுக்கொடுப்பு எதுவுமில்லாதவர். இவரை ஓரங்கட்டி பலவீன தலைமைத்துவத்தை கல்முனைக்கு உருவாக்க தக்கநேரம் காத்திருந்தவருக்கு இந்நேரம் கைகொடுத்திருக்கிறது. அதனால் இப்போது அவரது அறுவை கத்திக்கு ஹரீஸை பலி கொடுத்திருக்கிறார்.

இருந்தபோதிலும் 20இற்கு ஆதரவளித்து, வரவு- செலவுக்கு ஆதரவளித்து ஹக்கீமின் மன்னிப்பைப் பெற்று பேராளர் மாநாட்டுக்கு வருகை தந்து கட்சியின் பொறுப்புகளை ஏற்றுக்கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான பைசல் காசிம், தௌபீக் ஆகியோர் விழா மேடையில் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டனர். ஹக்கீம் அந்த மேடையில் ஹரீஸ் தொடர்பில் நிகழ்த்திய உரையிலேயே அவரது கசட்டு எண்ணங்கள் வெளிச்சமாயின. புத்தளம் கே.ஏ.பாயிஸ் மண்டபத்தில் பேராளர் மாநாடு நடைபெறுவதற்கு முன்னதாக அமைச்சர் ஹாபீஸ் நஸீரின் ஊரைச் சேர்ந்த மு.கா. ஆதரவாளர்கள் மண்டபத்துக்குள் நுழைய முற்பட்டபோது பெரும் குழப்பம் ஏற்பட்டது. அவர்களை அகற்றும் விதமாக பேராளர்களையும் இனங்காணும் படலம் ஆரம்பிக்கப்பட்டது. கட்சியின் முக்கிய போராளிகள் கூட பரிசோதிக்கப்பட்டே உள்ளே அனுமதிக்கப்பட்டனர். இந்தச் செயற்பாடுகள் ஹக்கீமின் பயத்தை மட்டுமல்ல, இன்னோரன்ன பல செய்திகளையும் அப்பட்டமாக வெளிச்சம் போட்டுள்ளதுமட்டுமன்றி, ஹரீஸின் வெளியேற்றம் அம்பாறை மாவட்ட - அதிலும் குறிப்பாக, கல்முனை தொகுதியைச் சேர்ந்த பிரமுகர்கள் பலரின் முகத்தில் பிரகாசத்தை உருவாக்கியிருந்தது.

முதலில் குற்றம் செய்ய தூண்டியவர் மன்னிப்பு கேட்பதா அல்லது தூண்டப்பட்டவர் மன்னிப்பு கேட்பதா..?

ஹரீஸ் கொண்ட கொள்கையில் உறுதியாக இருந்ததை பாராட்டியே ஆகவேண்டும். மன்னிப்புக் கடிதத்தில் கையொப்பம் இட்டால் பதவி தருவேன் என்ற ஆசைவார்த்தைக்கு ஹரீஸ் பணிந்து செல்லாதது அவரது உறுதியான கொள்கையை பறைசாற்றி நிற்கிறது. 20இற்கு கைதூக்குங்கள் மற்றதை நான் பார்த்துக்கொள்கின்றேன் என்று சொன்ன தலைவன் பின்நாட்களில் அத்தனை பழிகளையும் 20இற்கு ஆதரவாக வாக்களித்த எம்.பிமாரின் மீது சாட்டிவிட்டு நான் புனிதமானவன் என்று தலைவர் நடிக்க முற்பட்டபோதுதான் ஹரீஸ் மக்களுக்கு உண்மையை பகிரங்கப்படுத்தினார். சரி நடந்தது நடந்துவிட்டது. மன்னிப்பு கடிதத்தை சாட்டுக்காவது தா உங்களை கட்சிக்குள் வைத்துக்கொள்கிறேன், என்னை நல்லவன் என்று நம்பியிருக்கும் சில போராளிகளை திருப்திப்படுத்தத்தான் இதனைக் கேட்கிறேன் கடிதத்தை தாருங்கள் என்று தலைவன் மன்றாடியபோதும் ஹரீஸ் அந்தக் கடிதத்தை வழங்கவுமில்லை அ போராளர் மாநாட்டுக்கு செல்லவுமில்லை. இதில் ஹரீஸின் நிலைப்பாடு சரியானதே. 20இற்கு நாங்கள் வாக்களிப்பதற்கு முன் கோட்டாவோடும் பசிலோடும் தலைவராகிய நீங்கள் இரகசிய டீல் அடித்ததன் பின்தான் எங்களை வாக்களிக்க சொன்னீர்கள் என்ற உண்மையை நீங்களும் நாங்களும் அறிந்திருக்கின்ற நிலையில், மக்களிடம் மன்னிப்பு கேட்கவேண்டியவர் நீங்களா நாங்களா? என்ற ஹரீஸ் தரப்பின் கேள்வி நியாயமானது. இந்த நாடகம் அனைத்தையும் அறிந்தவனாக இறைவன் இருக்கிறான். நிச்சயமாக இதற்கு தீர்ப்பு சொல்வான் என்ற அசைக்கமுடியாத நம்பிக்கை ஹரீஸுக்கு இருப்பதன் காரணமாகவே ஹரீஸ் மன்னிப்புக் கடிதத்தை வழங்க முன்வரவில்லையென்பது தெளிவாகின்றது. தலைவனின் நாடகம் இனியும் பழிக்குமா என்பது சந்தேகமே என்கின்றனர் விடயம் அறிந்த அரசியல் அலசுனர்கள்.

2000த்தில் முஸ்லிம் காங்கிரஸின் இணைத்தலைவரான ரவூப் ஹக்கீமை அம்பாறை மாவட்டம், அதிலும் பெருந்தலைவர் அஷ்ரபின் தொகுதியான கல்முனைத் தொகுதி அங்கீகரிக்காவிட்டால் ஹக்கீமால் முஸ்லிம் காங்கிரஸின் ஏக தலைமையாக வரமுடியாது. ஹக்கீமுக்கு ஏக தலைவர் பதவியினை பெற்றுக்கொடுப்பதற்கான அங்கீகாரத்தினை கல்முனை மக்களிடமிருந்து பெறும் இராஜதந்திர ரீதியான கூட்டம் வெற்றியளித்த தனாலேயே ரவூப் ஹக்கீம் தலைநிமிர்ந்து தனக்கு பிடித்திருந்த அன்னை பேரியல் தொடர்பான அச்சத்தில் இருந்து விடுபட்டார். இதன்பின்னரே ரவூப் ஹக்கீம் முஸ்லிம் காங்கிரஸின் தேசியத் தலைவர் ஆகுவதற்கான ஆதரவுத்தளம் கிழக்கு முழுவதும் வியாபித்தது. அம்பாறை மாவட்டத்தில் ஹக்கீமின் செல்வாக்கை வேரூன்றச் செய்வதற்காக ஹரீஸ் தலைமையிலான மெஸ்றோ ஆற்றிய பங்களிப்பு மகத்தானது. ஹரீஸ் தலைமையிலான மெஸ்றோ இல்லை என்றிருந்தால் ரவூப் ஹக்கீம் விலாசமில்லாமல் போயிருப்பார் என்ற சிரேஷ்ட ஊடகர் அப்துல் ஜப்பார் சமீமின் குறிப்பு இங்கு கவனிக்கப்பட வேண்டியது.

ஹரீஸுக்கு அரசியல் செய்ய தெரியும் என்பதும் ஹரீஸ் எப்படிப்பட்டவர் என்பதும் ஹக்கீமுக்குத் தெரியும். ஹக்கீமுக்கு அரசியல் தெரியும் என்பதும் ஹக்கீமின் பின்னணி என்ன என்பதும் ஹரீஸுக்கு தெரியும். இவர்களில் யார் சமூக நலன்கொண்டவர் என்பது மக்களுக்குத் தெரியும். இன்னும் குறைந்தது 15 மாதங்களாவது பொதுத் தேர்தலுக்கு இருக்கிறது. அரசியலில் எந்நேரமும் எதுவும் நடக்கலாம். ஹரீஸ் கட்சியிலிருக்கும் போதே கல்முனை நகரில் வைத்து அவமானப்படுத்தப்பட்டு வெளியேற்றப்பட்ட ஹக்கீம் மீண்டும் அம்பாறைக்கு தைரியமாக அரசியல் செய்ய வர வேண்டும். காலம் இடங்கொடுக்க வேண்டும்.

# சிறுபான்மையினரைத் துரத்தும் இனவாதம்

இலங்கை சுதந்திரமடைந்து எதிர்வரும் 2023 பெப்ரவரி 04ஆம் திகதி 75ஆவது ஆண்டை எட்டவுள்ள நிலையில், இந்நாட்டில் பல ஆண்டுகள் வரலாற்றைக் கொண்டவர்களாக காணப்படும் தமிழ், முஸ்லிம் மக்களின் துயரமும் அவலமும் 75 ஆண்டுகளாகியும் நிறைவுறாது தொடர்ந்தவண்ணமே உள்ளன. இந்நாட்டின் சுதந்திரத்துக்காக சிங்களத் தலைவர்களோடு தமிழ், முஸ்லிம் தலைவர்கள் தோளோடு தோள் நின்று சொட்டும் இரத்தம் சிந்தாது சுதந்திரத்தைப் பெற்றுக்கொடுத்தனர். அத்தோடு, சோல்பரி அரசியலமைப்பின் முதலாவது நாடாளுமன்றத் தேர்தல் 1947இல் இடம்பெறலாகின. அதனடிப்படையில் இலங்கையில் முதல் பிரதமராக ஐ.தே.கட்சியின் தலைவராக விளங்கிய தேசபிதா டீ.எஸ்.சேனநாயக்க பிரதமரானார்.

அவர் பிரதமரான கையோடு 1948 டிசம்பர் 10இல் பிரஜாவுரிமைச் சட்டத்தைக் கொண்டுவந்ததுடன், மலையக மக்களின் வாக்குரிமையை இல்லாமல் செய்தார். இதற்கு அன்று நாடாளுமன்றத்தை அலங்கரித்துக்கொண்டிருந்த ஜீ.ஜீ.பொன்னம்பலம் போன்றவர்கள் அன்றைய டீ.எஸ்.சேனநாயக்கவின் அமைச்சரவையில் அமைச்சர்களாக விளங்கியதுடன், ஆரம்பத்தில் தமிழ் மக்களுக்கு எதிராக நாடாளுமன்றில் கொண்டுவரப்பட்ட சட்டங்களை எதிர்த்து பின்னாடி சிங்கள அரசில் இணைந்து செயற்பட்டதன் காரணமாக தமிழ் மக்களுக்கு எதிராக சிங்கள ஆட்சியாளர்களினால் முன்னெடுக்கப்பட்ட இனத்துவேஷத்தை பொன்னம்பலம் மட்டுமன்றி அன்றைய ஆட்சியாளர்களோடு இணைந்து ஆதரவளித்த பல தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களும் நாடாளுமன்றில் நிறைவேற்றப்பட்ட மசோதாக்களுக்கு ஆதரவாக கையை உயர்த்தியதுடன், கண்டும் காணாததுபோலும் ஏனோதானோ என்ற நிலையில் இருந்ததன் காரணமாகவே அன்றுதொட்டு இன்றுவரைக்கும் இனவாதம் எனும் விஷக்கொடியானது தமிழ், முஸ்லிம் சமூகத்தை சுற்றிச் சுற்றித் துரத்திக்கொண்டிருக்கின்றது.

ஆனால், 1915இல் சிங்கள, முஸ்லிம் மக்கள் மத்தியில் கலவரத்தைத் தூண்டினார்கள் என குற்றஞ்சாட்டப்பட்டு அன்றைய பிரித்தானிய ஆட்சியாளர்களினால் கைதுசெய்யப்பட்டு சிறையிலடைக்கப்பட்ட டீ.எஸ்.சேனநாயக்க போன்ற சிங்களத் தலைவர்களை சேர். பொன். இராமநாதன் மிகவும் துணிச்சலோடு லண்டனுக்குச் சென்று விடுவித்து வந்தார். ஆனால், அந்த நன்றியைக்கூட கவனத்திற்கொள்ளாத சிங்களப் பேரினவாத ஆட்சியாளர்கள் தமிழ் மக்களின் விவகாரத்தில் கடும்போக்கைக் கடைப்பிடித்ததுடன், பிரஜாவுரிமைச் சட்டத்தினூடாக நாடாளுமன்றில் அங்கம் வகித்த 7 மலையக மக்களின் நாடாளுமன்ற உறுப்பினர்களை இல்லாமலாக்கினர். அதனைத் தொடர்ந்து தமிழ் மக்களுக்கெதிரான இனவாத முன்னெடுப்புகள் சிங்கள ஆட்சியாளர்களினால் படிப்படியாக முன்னெடுக்கப்பட்டன.

*1940களில் தமிழ்ப் பிரதேசங்களில் சிங்களக் குடியேற்றங்கள்*

தமிழ் மக்களின் நாடாளுமன்ற மற்றும் அரசியல் பிரதிநிதித்துவத்தைக் குறைக்கும் முகமாக சிங்களக் குடியேற்றங்கள் தமிழ் மக்கள் வசித்த பிரதேசங்களில் அரசாங்கத்தினால் ஊக்குவிக்கப்பட்டன. மட்டக்களப்பு மாவட்டத்தின் தெற்குப் பகுதியில் (இன்றைய அம்பாறை மாவட்டம்) கல்லோயாத் திட்டம் என்கின்ற நீர்ப்பாசனத் திட்டம் உருவாக்கப்பட்டு மாத்தறை, ஹம்பாந்தோட்டை பகுதிகளிலிருந்து சிங்கள மக்கள் அரசாங்கத்தினால் அங்கு குடியேற்றப்பட்டனர். இதன்கீழ் 44 குடியேற்றக் கிராமங்கள் உருவாக்கப்பட்டன. அவற்றுள் 38 கிராமங்கள் சிங்கள மக்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டன. 06 கிராமங்கள் மட்டும் தமிழ் கிராமங்களாக தமிழ் பேசும் மக்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டன. தமிழ்க் கிராமங்கள் நீர்வசதி குறைந்த அல்லது நீரோட்டத்தின் எல்லையில் இருந்த கிராமங்களாகவே இருந்தன. 1959இல் பின்பு இக்குடியேற்றங்களை மையமாக வைத்து அம்பாறை மாவட்டம் உருவாக்கப்பட்டது.

*திருகோணமலை மாவட்டம்*

இதைப்போல் திருகோணமலை மாவட்டத்தில் மீனவர் குடியேற்றங்கள், வியாபாரக் குடியேற்றங்கள், கைத்தொழில் குடியேற்றங்கள், புனித பிரதேசக் குடியேற்றங்கள், முப்படைகளுக்கான குடியேற்றங்கள் ஆகியன ஆரம்பிக்கப்பட்டன. குடியேற்றங்களின் முக்கிய நோக்கங்கள் முன்பு குறிப்பிட்டதுபோல் தமிழ்ப் பிரதேசங்களில் தமிழ் மக்களின் எண்ணிக்கையின் விகிதாசாரத்தை மாற்றி அவர்களின் அரசியல் பிரதிநிதித்துவத்தைக் குறைப்பதும் தமிழ் மக்களின் தாயகக் கோரிக்கையை நிராகரிக்கும் முகமாக வடக்கு, கிழக்கைத் துண்டாடுவதுமாகும். இதன்படி திருகோணமலை பிரதேசத்தை வளைத்து ஒரு வில் வடிவத்தில் குடியேற்றங்கள் மேற்கொள்ளப்பட்டன. மேலே குறிப்பிட்ட இந்த வில் திருகோணமலையை வடக்கிலிருந்து துண்டாடியது. இதேபோல் திருகோணமலை மாவட்டத்திற்கும் மட்டக்களப்பு மாவட்டத்திற்கும் இடையேயுள்ள நிலத் தொடர்ச்சியும் துண்டாடப்பட்டது. மேலும், இக்குடியேற்றப் பிரதேசங்களை மையமாக வைத்து புதிய தேர்தல் தொகுதிகளும் சிங்களப் பெரும்பான்மை பிரதேச சபைகளும் உருவாக்கப்பட்டன.

1956இல் பண்டாரநாயக்கவினால் கொண்டுவரப்பட்ட தனிச்சிங்கள சட்டமே இனங்களுக்கிடையிலான ஒற்றுமையை சீர்குலைத்தது. ஐக்கிய தேசியக் கட்சியை தோற்கடித்து ஆட்சியில் அமர்வதற்காக 24 மணிநேரத்தில் தனிச்சிங்களம் என்கிற வாக்குறுதியுடன் எஸ்.டபிள்யூ.ஆர்.டீ.பண்டாரநாயக்கா இலங்கையின் நான்காவது பிரதமராக பதவியேற்றதுடன், சட்டத்தையும் கொண்டுவருகின்றார். ஆனால், இதனை எதிர்த்து தமிழ்க் கட்சிகள் சத்தியாக்கிரகப் போராட்டத்தை முன்னெடுத்தபோதும் சிங்களக் காடையர்களினால் மிகவும் மோசமாகத் தாக்கப்பட்டனர். அத்துடன், அப்போராட்டம் ஆயுதமுனையில் கலைக்கப்பட்டது. இதன் தொடர்ச்சியாக முதன்முதலாக தமிழ் மக்கள் மீதான இனக்கலவரம் கல்லோயா பிரதேசத்தில் ஆரம்பித்தது. இதனைத் தொடர்ந்து தமிழ்க் கட்சிகளின் மாநாடுகள், யாத்திரைகள் என்று போராட்டங்கள் முடுக்கிவிடப்பட்டன. அத்துடன், 1957இல் ஸ்ரீ எதிர்ப்புப் போராட்டங்களும் இடம்பெறலாயின.

*1957 இல் பண்டா – செல்வா ஒப்பந்தம்*

தமிழ் மக்களின் போராட்டங்களைக் கண்டு பண்டாரநாயக்கா சமரசத்துக்கு வர முயற்சித்ததுடன், பல இரவுகள் தமிழரசுக் கட்சியுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தியதன் பின்னர் ஜூலை 26ஆம் திகதி பண்டா – செல்வா ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. ஆனால், மகாசங்கத்தினர்களின் கடும் எதிர்ப்புக் காரணமாக இறுதியில் கிழித்தெறியப்பட்டது. இதனைத் தொடர்ந்து 1958இல் சிங்கள – தமிழ்க் கலவரம் ஏற்பட்டது. தமிழ் எழுத்துகளை தார்பூசி அழித்ததுடன், நாடெங்கிலும் சிங்கள – தமிழ்க் கலவரம் ஏற்பட்டது. தமிழ் எழுத்துகளை தார்பூசி அழித்ததுடன், நாடெங்கிலும் சிங்கள – தமிழ் இனக்கலவரம் மூண்டது. ஆனால், தமிழ் மக்களுக்கு உயிர்ச்சேதமும் உடமைச் சேதமும் ஏற்பட்ட பின்னரே காலம் கடந்து அரசாங்கம் அவசரகாலச் சட்டத்தைப் பிரகடனம் செய்து இராணுவத்தை அழைத்து கலவரங்களை நிறுத்தியது. போராட்டத்தில் ஈடுபட்ட பல தமிழ்த் தலைவர்களை அரசாங்கம் பல மாதங்களாக வீட்டுக்காவலில் வைத்திருந்தது. இந்நிலையில், 1959இல் பண்டாரநாயக்கா கொலை செய்யப்படுகின்றார். இதனைத் தொடர்ந்து 1960 மார்ச் மாதம் ஒரு தேர்தலும் 1960 ஜூலையில் ஒரு பொதுத் தேர்தலும் இடம்பெற்றன. அந்தத் தேர்தலில் சிறிமாவோ பண்டாரநாயக்கா தலைமையிலான ஸ்ரீல.சு.கட்சி வெற்றிபெற்று ஆட்சிபீடமேறியது. ஆனால், தமிழரசுக் கட்சித் தலைவர்களினால் முன்வைக்கப்பட்ட கோரிக்கையை ஏற்றுக்கொண்டிருந்தபோதும் அதிகாரத்துக்கு வந்ததும் அந்தக் கோரிக்கையை நிராகரித்ததுடன், தமிழ் மக்கள் மீது அடக்குமுறையை திணிக்கலாகியது. இதன் காரணமாக எஸ்.ஜே.வி.செல்வநாயகம் தலைமையின் கீழ் தமிழ்ப் பிரதேசங்களில் நாடளாவிய ரீதியில் அரசுக்கெதிரான ஒத்துழையாமைப் போராட்டத்தை நடத்தியதுடன், 1961இல் சத்தியாக்கிரகத்தை ஆரம்பித்தனர். அத்துடன், 1961இல் தமிழ் அரசின் தபால்சேவை ஆரம்பிக்கப்பட்டதுடன், வடக்கு, கிழக்கில் அரசாங்க நிர்வாகத்தை ஸ்தம்பிதமடையச் செய்தனர். ஆனாலும், மேற்படி போராட்டம் அனைத்தையும் அரசாங்கம் ஆயுதமுனையில் தோற்கடித்தது. இதன்பின்னர் எல்லாம் தமிழ் இயக்கம் உருவாதல், 1964இல் பாதயாத்திரை, 1964இல் சிறிமா – சாஸ்திரி ஒப்பந்தம் இடம்பெற்றதுடன், 1965இல் டட்லி – செல்வா ஒப்பந்தமும் கைச்சாத்திடப்பட்டது. மேற்படி ஒப்பந்தத்தின் அடிப்படையில் தமிழரசுக் கட்சி தனது போராட்டங்களை முடிவுக்குக் கொண்டுவந்து அரசாங்கத்தில் இணைந்துகொண்டது. தமிழரசுக் கட்சி அரசில் சேர்ந்ததனால் பழைய தமிழ் அரச ஊழியர்களுக்கு சிங்கள தேர்ச்சியின்றி சம்பள உயர்வு, பதவி உயர்வு வழங்கப்படுகின்றது. புதிய ஊழியரின் சிங்களத் தேர்ச்சி எட்டாம் தரமாக்கப்பட்டது. ஆனால், திறைசேரி அதிகாரிகள் ஒன்பதாம் தர சிங்கள சோதனையை எட்டாம் தரம் எனக் கூறி தமிழ் அதிகாரிகளுக்கு நடத்தினார்கள். இந்த நடவடிக்கை கொடுக்கப்பட்ட சலுகைகளை முறியடித்தது.

*1966இல் தமிழ்மொழி உபயோக சட்டவிதிகள் மசோதா*

1958இல் பண்டாரநாயக்கவினால் கொண்டுவரப்பட்ட தமிழ்மொழி உபயோக சட்டத்தின்கீழ் அதன் இயங்குவிதிகள் தொடர்பான முன்னேற்ற சட்டமூலம் தமிழரசுக் கட்சியின் நிர்ப்பந்தத்தின்பேரில் நாடாளுமன்றுக்கு கொண்டுவரப்பட்டது. இதன்படி வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழையும் நிர்வாக மொழியாகவும் நாடு முழுவதிலும் தமிழ் பேசும் மக்கள் தமிழ் மொழியில் அரசாங்கத்தோடு கருமமாற்றவும் ஒழுங்குசெய்யப்பட்டது. இதனை ஸ்ரீல.சு.க., இடதுசாரி கட்சிகள் உட்பட சிங்களக் கட்சிகள் யாவும் காரசாரமாக எதிர்க்கின்றன. இச்சட்டவிதிகள் மூலச்சட்டத்தின் எல்லையை மீறியுள்ளன என அவை வலியுறுத்தின. இது தொடர்பாக அரச தொழிற்சங்கங்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டதோடு, எதிர்க்கட்சிகள் விகாரமாதேவி பூங்காவிலிருந்து ஆர்ப்பாட்ட ஊர்வலத்தை நடத்தின. ஊர்வலம் கட்டுக்கடங்காமல் சென்றதால் பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததன் விளைவாக இரத்தினசார தேரர் என்ற பௌத்த பிக்கு சுடப்பட்டு மரணமடைந்தார். இருப்பினும், அரசாங்கம் சட்டத்தை நிறைவேற்றியது. ஆனால், இது நடைமுறையில் பெரிதாக செயற்படவில்லை.

*தனிநாட்டுக்கான ஆயுதப் போராட்டத்தின் வித்துகள் தமிழ் மக்கள் மத்தியில் ஊன்றிய காலம்*

1965இல் ஐக்கிய தேசியக் கட்சியுடன் கூட்டு சேர்ந்து அரசாங்கத்தில் தமிழரசுக் கட்சி அங்கம் பெற்றதைத் தொடர்ந்து அதன் போராட்ட அரசியல், வீழ்ச்சிப் போக்கை நோக்கிச் சென்றது. இவ்வீழ்ச்சிப் போக்கினால் கட்சியிலிருந்த தீவிர தேசியவாத சக்திகள் குறிப்பாக, இளைஞர்கள் அதிருப்தியடைய ஆரம்பித்தார்கள். 1968இல் முத்துக்குமாரசாமி சிவகுமாரன் மகா உத்தமன் போன்றோர் ஈழத்தமிழர் விடுதலை இயக்கம் என்ற அமைப்பை உருவாக்கினர். இவ்வமைப்பின் தோற்றத்துடன் தமிழ் அரசியலில் தமிழரசுக் கட்சி, அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ், இளைஞர் இயக்கங்கள் என மூன்று வகையான சக்திகள் தொழிற்படத் தொடங்கின.

*1968இல் கித்துள் ஊற்று குடியேற்றம் (திருமலை)*

திருமலை மாவட்டத்தில் கித்துள் ஊற்று என்ற இடத்தில் ஒரு சிறு குளம் கட்டப்பட்டு அதில் சிங்களக் குடியேற்றத்துக்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. தமிழரசுக் கட்சி பல்லாயிரம் ரூபா செலவில் தமிழரசு வாலிப முன்னணியைச் சேர்ந்தவர்களை அங்கு அத்துமீறிக் குடியேற வைத்தது. அப்பகுதியின் சிங்கள உதவி அரசாங்க அதிபர் அந்த இளைஞர்களின் வீடுகளுக்குத் தீ வைத்ததோடு, அவர்களைக் கைதுசெய்தார். பின்னர் காணி அமைச்சருடன் செய்த உடன்பாட்டின்படி அத்துமீறிக் குடியேறிய இளைஞர் உட்பட பெரும்பான்மையான தமிழ் பேசும் மக்கள் அங்கு குடியேற்றப்பட்டனர்.

*1969இல் மாவட்ட சபைகள் பிரேரணைகள்*

த.அ.க. உடன் ஐ.தே.க. செய்துகொண்ட ஒப்பந்தத்தில் மாவட்ட சபைகளை உருவாக்கி அதிகாரத்தைப் பரவலாக்குதல் பிரதானமாக இருந்தது. இது தொடர்பான சட்டமூலம் மு.திருச்செல்வத்தினால் தயாரிக்கப்பட்டு பல மாதங்கள் ஐ.தே.கட்சியினாலும் தமிழரசுக் கட்சியினாலும் ஆராயப்பட்டது. இறுதியில் இது தொடர்பான வெள்ளையறிக்கை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. ஆனால், அரச ஆதரவு ஊடகவியலாளர்கள், அரசாங்கக் கட்சி உறுப்பினர்கள், பௌத்த அமைப்பைச் சேர்ந்தவர்கள் என்போர் தீவிர எதிர்ப்புப் பிரசாரத்தில் ஈடுபட்டனர். சிங்கள மக்களின் எதிர்ப்புக்கு அஞ்சிய பிரதமர் டட்லி, மாவட்ட சபை மசோதாவை நாடாளுமன்றில் கொண்டுவர முடியாதெனக் கூறுகின்றார். மீண்டும் ஒரு தடவை தமிழ்த் தலைமைகள் ஏமாறுகின்றன. இந்நிலையிலும் த.அ.க., தமிழ்ப் பல்கலைக்கழகம் ஒன்றை திருமலையில் நிறுவ நடவடிக்கை எடுத்தது. கோணேஸ்வரப் பகுதியை புனிதப் பிரதேசமாக்கும் தீர்மானமும் எடுக்கப்படுகின்றது. இலங்கையின் வரலாற்றின்படி இது சிங்களவர்களினதும் பௌத்தர்களினதும் நாடு என்று தாம் கருதுவதால் பௌத்த பிக்குகள் இதனை எதிர்க்கின்றனர். பிரதமர் டட்லி புனித பிரதேசத் திட்டத்தினை நிராகரிக்கின்றார். த.அ.க. அரசிலிருந்து வெளியேறுகின்றது.

*தமிழ்ப் பிரதேசத்தை பௌத்த மயமாக்கும் போக்குகள்*

திருகோணமலையை பௌத்த பிரதேசமாக்க முயற்சி செய்து சேருவலையை அரசு உருவாக்குகின்றது. யாழ்ப்பாணத்தில் தாழ்த்தப்பட்ட சிறுபான்மைத் தமிழ் மக்கள் மத்தியில் பௌத்த – சிங்களப் பாடசாலைகளை அமைக்கும் முயற்சியில் 4 பாடசாலைகள் புத்தூர், அச்சுவேலி, அல்வாய், கரவெட்டி ஆகிய பகுதிகளில் ஆரம்பிக்கப்படுகின்றன. த.அ.கட்சி அரசாங்கத்திலிருந்து வெளியேறிய பின் இவை பௌத்த – சிங்களப் பாடசாலைகளாக கல்வி அமைச்சினால் அங்கீகரிக்கப்படுகின்றன. த.அ.கயின் எதிர்ப்பினால் அங்கு வேறு வழியில்லாமல் தமிழ் மொழியே போதனா மொழியாக இருந்தது. இறுதியில் டட்லி – செல்வா ஒப்பந்தமும் கிடப்பில் போடப்பட்டது.

1970இல் பொதுத் தேர்தல். 1971இல் பல்கலைக்கழக அனுமதிக்கான தரப்படுத்தல் முறை அறிமுகம். 1972 இல் குடியரசு அரசியல் யாப்பு. 1970இல் ஐக்கிய முன்னணி பெற்ற 2/3 பெரும்பான்மையும் 1972இல் கொண்டுவரப்பட்ட அரசியலமைப்பும் தேசிய நல்லிணக்கத்தைப் பாழடித்தன. 1972இல் தமிழர் கூட்டணியின் தோற்றம். 1973இல் தமிழர் இளைஞர் பேரவை தோற்றம். 1974இல் நான்காவது தமிழாராய்ச்சி மாநாடு. 1974இல் தமிழ் புதிய புலிகள் தோற்றம். 1975இல் தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் தோற்றம். 1976இல் தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் தோற்றம். 1976இல் வட்டுக்கோட்டை மாநாடு. 1977இல் பொதுத்தேர்தல். 1977இல் இனக்கலவரம். 1978இல் புலிகள் இயக்கத்தையும் (புலிகள் போன்ற) ஏனைய ஆயுத அமைப்புகளையும் தடைசெய்யும் சட்டம். 1978இல் புதிய அரசியல் யாப்பு. 1981இல் மாவட்ட அபிவிருத்தி சபை அறிமுகமும் தோற்றமும். 1982இல் சர்வஜன வாக்கெடுப்பும் மக்கள் தீர்ப்பும். 1983 – 1990இல் ஆயுதப் போராட்டம் கெரில்லாப் போராட்டமாக வளர்ச்சியடைந்த காலம். 1983இல் இனக் கலவரம் 1983-87இல் ஈழ விடுதலை இயக்கங்களுக்கு இந்தியா ஆதரவு. 1984இல் இந்திரா காந்தி மரணம். ராஜீவ் காந்தி பிரதமராகின்றார். 1985இல் திம்பு மாநாடு. 198 இல் பெங்களூர் சார்க் மாநாடு. 1986இல் புலிகள் ஏனைய இயக்கங்களைத் தடைசெய்தல். 1987இல் வடமராட்சிப் போர். 1987இல் இலங்கை – இந்திய ஒப்பந்தம். 1988இல் வடக்கு, கிழக்கிற்கான மாகாண சபைத் தேர்தல். 1988 டிசம்பரில் ஜனாதிபதித் தேர்தல். 1990இல் ஈழப் பிரகடனம், இரண்டாவது ஈழப்போர், வடக்கிலுள்ள முஸ்லிம்கள் வெளியேற்றம் என மேற்கூறப்பட்ட அனைத்தும் இடம்பெற்றும் எந்தவொரு பலனையும் அடைய முடியாத நிலையில், சிலரின் காட்டிக்கொடுப்போடு 30 ஆயிரம் தமிழ்ப் போராளிகளைப் பறிகொடுத்த நிலையில், 2009இல் 30 வருடகால ஈழப்போர் முடிவுற்றது. ஆனால், யுத்தம் முடிந்த நிலையில், தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு சிங்கள அரசுகளால் சுமுகமாக தீர்வு காணப்படும் என எதிர்பார்த்தனர். ஆனால், மாறாக தமிழர்களின் கொட்டத்தை அடக்கிவிட்டோம். இனி முஸ்லிம்களின் மூக்கை உடைத்துவிட்டால் இந்நாட்டை முற்றுமுழுதாக பௌத்த நாடாக ஆக்கிவிடலாம் என்ற அகங்காரத்தோடு இத்தனைகாலமும் இலைமறையாகத் தப்பிப் பிழைத்துக்கொண்ட முஸ்லிம் சமூகத்தை 2010 தம்புள்ளை பள்ளிவாசலை மையப்படுத்தி சீண்டி இழுக்கப்பட்டதுடன், தொடர்ச்சியாக ஹபாய், ஹலால் போன்றவற்றைத் தொடர்புபடுத்தி முஸ்லிம்கள் அளுத்கமமுதல் அம்பாறைவரை தாக்கப்பட்டார்கள். முஸ்லிம்களின் பல கோடி ரூபா சொத்துகளும் உடமைகளும் அழிக்கப்பட்டன. ஆனால், சிங்கள ஆட்சியாளர்கள் இந்நாட்டில் வாழும் தமிழ், முஸ்லிம் மக்களை நம்பவைத்து ஏமாற்றி தங்களின் ஆட்சியதிகாரத்தைத் தக்கவைத்துக்கொள்ளவே கடந்த 73 வருட காலமாக நாடகமாடிக் கொண்டிருக்கின்றனர். இந்நாட்டில் ஏதோ ஒரு வழியில் சிறுபான்மை மக்களின் மீது வீண்பழிகளையும் பொய்க்குற்றச்சாட்டுகளையும் சுமத்தி அவர்கள் மீது பயங்கரவாத முத்திரை குத்தி இனவாதத்தைப் பரப்பி ஆட்சியைக் கைப்பற்றும் நடவடிக்கையைத்தான் ராஜபக்ஷ குழுவினர் செய்துவருகின்றனர்.

கடந்த 2019 ஜனாதிபதித் தேர்தலில் ஈஸ்டர் தாக்குதலை மையமாக வைத்து முஸ்லிம்களை இனவாதிகளாக போலி பிரசாரத்தை சிங்கள மக்களின் மத்தியில் பரப்பியே கோட்டாபய ராஜபக்ஷ 69 இலட்சம் வாக்குளைப் பெற்று ஜனாதிபதியானார். ஆனால், அவரது அதிகாரத்தின் கீழ் நல்ல தீர்வுகள் சிறுபான்மையினர்கட்கு கிடைக்கும் என்று எதிர்பார்த்த தமிழ், முஸ்லிம்களுக்கு இலங்கையில் எந்தவொரு ஆட்சியாளரினாலும் நடக்காத அராஜக ஆட்சியை ராஜபக்ஷவினர் நடத்திக்கொண்டிருக்கின்றனர். அத்துடன், சிறுபான்மை மக்களின் அனைத்து உரிமைகளையும் புறக்கணித்து சிங்கள மேலாதிக்கத்தை நிலைநிறுத்தி இனவாதத்திற்கு தலைவணங்கி ஆட்சியைத் தக்கவைத்துக் கொள்ளவே போராடுகின்றனர். உண்மையாகவே இந்த நாட்டை யார் ஆட்சி செய்தாலும் ஐ.தே.க. என்றால் என்ன, ஸ்ரீல.சு.க. என்றால் என்ன, மொட்டுக் கட்சி என்றால் என்ன, எல்லாம் ஒரே புற்றில் வளர்ந்த பாம்புகள்தான் என்பதில் எந்த மாற்றுக்கருத்துக்கும் இடமில்லை என்பதனை கடந்த 73 ஆண்டுகளாக சிங்களப் பேரினவாத ஆட்சியாளர்கள் நிரூபித்துக் காட்டியுள்ளனர். ஆனால், உண்மையை சொல்லப்போனால் இன்னும் 50 வருடங்கள் சென்றாலும், யார் ஆட்சியில் அமர்ந்தாலும் இந்நாட்டில் வாழும் சிறுபான்மை மக்களை தொடர்ந்தும் இனவாதம் எனும் விஷம் துரத்திக்கொண்டேயிருக்கும் என்பதுதான் யதார்த்தமாகும். எத்தனை காலம்தான் ஏமாற்றுவார் இந்த நாட்டிலே.



யூ.எல்.ஏ.மஜீட்
சாய்ந்தமருது





# எப்போது சீர்செய்யப்படும் மலையக தோட்டப்புற வீதிகள்?








**தங்கராஜா யுவராஜ்**

ஒரு நாடு முன்னேறுவதற்கு காணப்படும் காரணிகளுள் மிக முக்கியமானது வீதிகளாகும். பொருளாதார ரீதியில் ஒரு நாடு வளர்ச்சியடைய இந்த வீதிகள் இன்றியமையாதவை எனலாம். ஏனென்றால், எமது நாடு பெரும்பாலும், உள்ளூர் உற்பத்திகளை நம்பியுள்ளது. எனவே, அவற்றை சரியான நேரத்திற்குள் கொண்டு செல்வதற்கும், அடுத்த உற்பத்திக்கான பொருட்களை கொண்டு வருவதற்கும், சிறந்த வீதிகள் காணப்படுமாயின் விரைவாக ஏற்றுமதி, இறக்குமதி செயற்பாடுகளை மேற்கொள்ள முடியும். இவற்றின் காரணமாக பொருளாதார மற்றும் உள்ளூர் உற்பத்திகளின் மூலம் சிறந்த முன்னேற்றத்தைப் பெறமுடியும்.

ஆனால், எமது நாட்டில் அவ்வாறு காணப்படுகின்றதா என்றால் அது கேள்விக்குறியே. ஏனென்றால், எமது நாட்டின் பிரதான நகரங்களைப் பொறுத்தவரை வீதிகள் சிறந்த முறையில் செப்பனிடப்பட்டுக் காணப்பட்டாலும், அந்த நகரங்களைக் கடந்து கிராமங்களுக்குள் நுழையும்போது வீதிகள் குறுகிக் குறுகி குண்டும் குழியுமாகவே உள்ளன.

இவ்வாறான பாதைகளை பெரும்பாலும் கொண்டிருப்பது இலங்கையின் மலையகப் பகுதிகளாகும். குறிப்பாக தோட்டப் பகுதிகளுக்குள் நுழையும்போது பாதைகள் வெறும் கற்களால் மாத்திரம் நிறைந்து காணப்படுகின்றன. மலையக மக்கள் எதிர்பார்ப்பது செப்பனிடப்பட்ட கார்பட் வீதிகளை அல்ல. நோயாளிகளையும், கர்ப்பிணித் தாய்மாரையும் பத்திரமாக வைத்தியசாலைகளுக்கு கொண்டு செல்லக்கூடிய பாதுகாப்பான கற்குழிகளற்ற வீதிகளையே.

பெரும்பாலான தோட்டப்பகுதிகளில் இருந்து நோயாளிகளையும், கர்ப்பிணித் தாய்மாரையும் வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லும்போது நோயாளிகளில் பலர் பாதி வழியிலேயே இறந்து போகக்கூடிய நிலைமைகளே அதிகம் காணப்படுகின்றன. அதேபோலவே கர்ப்பிணித் தாய்மாரை அழைத்துச்செல்லும் இடையிலேயே குழந்தையை பிரசுவிக்கும் சம்பவங்களே அதிகம். இவ்வாறு கேட்பாரற்றுக் கிடக்கும் வீதிகளுக்கு பொறுப்புக் கூறப்போது யார் என்பதே மலையக மக்களின் பிரதான கேள்வியாக உள்ளது.

இது போலவே மலையகப் பகுதிகளில் பாதிக்கப்பட்ட வீதிகளில் மஸ்கெலியாவின் லெச்சுமித் தோட்டத்தில் இருந்து பிரவுன்ஸ்விக் செல்லும் வீதியும் ஒன்றாகும். பிரவுன்ஸ்விக் பிரிவுக்குட்பட்ட ஏழு தோட்டங்களில் நான்கு தோட்டங்களைச் சேர்ந்த மக்கள் இந்த வீதியை பயன்படுத்தி வருகின்றனர்.

பிரவுன்ஸ்விக் பிரிவிலுள்ள வைத்தியசாலைக்கும் புளும்பீல்ட் பாடசாலைக்கும் பிரதான தேயிலை தொழிற்சாலைக்கும் இந்த வீதி ஊடாகவே மக்கள் சென்று வருகின்றனர். சுமார் நான்கு கிலோ மீற்றர் தூரம் கொண்ட இந்த வீதியை ஒரு நாளைக்கு பாடசாலை மாணவர்கள், தொழிலுக்கு செல்வோர், அரசாங்க சேவையை பெற்றுக்கொள்ள செல்வோர் என 200 க்கும் மேற்பட்ட மக்கள் பயன்படுத்தி வருகின்றனர்.

இவ்வாறான சூழ்நிலையில், இந்த வீதி ஆங்கிலேயர்களால் அமைக்கப்பட்டு, இதுவரை செப்பனிடப்படாமல், வெறும் பாறைகளை மாத்திரம் கொண்டு காணப்படுகின்றது. வெயில் காலத்தைவிட மழைக் காலங்களில்போது பாடசாலை மாணவர்கள் பெரும்பாலான நேரங்களில் வெண்ணிற ஆடைகளுடன் சென்று மஞ்சள் நிற ஆடையுடன் வீடு திரும்பும் நிலை காணப்படுகிறது. காரணம் குறித்த பாதையில் அங்குள்ள மக்கள் மண்வெட்டிக் கொட்டுவதால் ஏற்படும் சேறாகும்.

இது குறித்து மஸ்கெலியா பிரதேசபை உறுப்பினர் சிவனு சுப்ரமணியம் தெரிவிக்கையில்,

"கடந்த 2019 ஜனாதிபதி தேர்தலுக்கு பின்னர் இந்த வீதியை சீரமைப்பதற்கு நிதி ஒதுக்கப்பட்டது. அதன்பிறகு அடிக்கல் நாட்டுவதற்கான வேலைகள் இடம்பெற்றுக்கொண்டிருந்தபோது கொரோனா தொற்றால் நாடு முடங்கியது. இதன் காரணமாக இந்த திட்டம் கைவிடப்பட்டது. அதன் பிறகு முன்னாள் மத்திய மாகாண ஆளுநர் மைத்ரி குணரத்னவிடம் கதைத்து குறித்த வீதிக்கான வேலைகளை மீண்டும் ஆரம்பிக்கத் திட்டமிட்டோம். ஆனால், அதன் பிறகு நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி காரணமாக மீண்டும் இந்த திட்டம் கைவிடப்பட்டு, தற்போது கிடப்பில் உள்ளது என குறிப்பிட்டார்.

இது குறித்து மஸ்கெலியா பிரதேச சபைத் தலைவர் செண்பகவள்ளி தெரிவிக்கையில்,

இந்த வீதியை சீர்செய்வதற்கு மிக நீண்டகாலமாகவே நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இருப்பினும் நாட்டில் தொடர்ச்சியாக ஏற்பட்டுள்ள கொரோனா தொற்று, பொருளாதார நெருக்கடி காரணமாக இந்த வேலைத்திட்டம் தள்ளிக்கொண்டே செல்கிறது. இருப்பினும் எம்மால் முடிந்த அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றோம், இந்த பொருளாதார நெருக்கடி சீராகும் பட்சத்தில் இந்த வீதியை சீர்செய்யும் நடவடிக்கையை மேற்கொள்வோம்,

நாம் ஒரு தோட்டத்தில் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ள செல்லும்போது தோட்ட நிர்வாகம் அதற்கு எந்தவித ஒத்துழைப்புகளையும் வழங்குவதில்லை. மாறாக அரசியல்வாதிகளை கைகாட்டி செல்கின்றனர்.

அவர்கள் இவ்வாறு நடந்துகொள்ளக் கூடாது. அவர்கள் எம்முடன் இணைந்து செயற்படுவதன் மூலமே அந்தத் தோட்டத்திற்கான அபிவிருத்தித் திட்டங்களை சிறந்த முறையில் மேற்கொள்ள முடியும்" என்றார்.

முச்சக்கரவண்டி சாரதியான ஏ.தயானந்தன் தெரிவிக்கையில்,

"நா இந்தப் பாதையில ஒரு ஏழு வருசமா ஆட்டோ ஓட்டிகிட்டு இருக்கே. ரொம்பவும் கஷ்டமா இருக்கு. இந்த ரோட்டுல சுகமில்லாதவங்கல கூட்டிட்டு போறதுக்கு ரொம்பவும் கஷ்டம், இந்த ரோடு நல்லா இருந்துச்சினா பிரவுன்ஸ்விக்ல இருக்க ஹொஸ்பிடலுக்கு 10 நிமுசத்துல பொய்டலாம். ஆனா, இப்போ இருக்க நெலமைக்கு கொறஞ்சது ஒன்னற அவர் ஆகுது.

அதோட இப்போ இருக்க பெற்றோல் தட்டுப்பாடுநால இந்த பக்கம் அயர் வாரதுக்கு யோசிக்கவேண்டியது இருக்கு. ஏனா ரோட் நல்லா இருந்தா பெற்றோல் கொறவா வேல செய்யும். அதே ரோடு மோசமா இருக்கும்போது பெற்றோல் அதிகமாக வேல செய்யும். இதுநால அயர் காசும் அதிகமாக வாங்கனும். ஆனா, நம்ம ஆக்கள் கிட்ட அவளோ காசு இல்ல. அதனால சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இந்த ரோட செய்றதுக்கு நடவடிக்கை எடுக்கனும். இதனால இந்தப் பகுதில இருக்க எல்லோரும் ரொம்ப சந்தோசப்படுவாங்க" என்றார்.

மேலும், எமலினா தோட்டத்தைச் சேர்ந்த ஆர். சிவதர்சன் என்பவர் தெரிவிக்கையில்,

"நா இந்த பாதைய தினமும் பயன்படுத்துறே. இதுல போய்ட்டு வாறது ரொம்ப கஷ்டமா இருக்கு. நா மோட்டார் சைக்கிள்ள வேலைக்கு போய்ட்டு வாறே. ஆனா மோட்டார் சைக்கிள இந்த ரோட்டுல ஓட்டிகிட்டு ரொம்பவும் கஷ்டம். இந்தப் பாதை ரொம்பவும் குண்டும் குழியுமா இருக்கு. இதுநால நாங்க பயன்படுத்துற வாகனங்கள் சீக்கிரமா ஒடைஞ்சி போகுது. அத செய்றதுக்கு ரொம்பவும் செலவாகுது. ஆகவே இந்த பாதைய சீக்கிரமா சீர்செஞ்சி தந்தா நல்லம்" என்றார்.

ஒரு பகுதிக்குரிய வீதி நேர்த்தியாக காணப்பட்டால் அந்தப் பகுதி (தோட்டம்) எல்லா துறைகளிலும் வளர்ச்சியடைய உதவியாக இருக்கும். ஆனால், மலையகத்தின் பெரும்பாலான பகுதிகளில் காணப்படும் வீதிகள் அவ்வாறில்லை. இவ்வாறான வீதிகளை சீர்செய்வதற்கு அந்த மக்கள் யாரிடம் கேட்பார்கள் என்ற கேள்வியும் எல்லோரிடமும் உள்ளது. இந்த கேள்விக்கு பதில் கூறப்போவது யார்?

---





## கங்காணியும் கலையரசியும்..

(பெரட்டுக்களம்)

**கங்காணி:** என்ன புள்ள கலையரசி... காலையிலயே பொளம்பிக்கிட்டுதா வருவ என்னா?

**கலையரசி:** ஆமாங்கையா... ராத்திரி தூங்கி காலையில எழும்புரதே பெரிய பொளம்பல்தானே? கண்ண மூடி தூங்குறதுக்குள்ள என்னன்னமோ நடக்குதுங்கையா ஒலகத்துல,

**கங்காணி:** ஆமா ஆமா... காலையிலேயே ஆரம்பிச்சிட்டியா? நேத்து பாத்தியா புள்ள... ராசாத்தி மகே கிரிகட்டு வெளாட பொய்ட்டு சண்ட போட்டுகிட்டு கை கால கிழிச்சிக்கிட்டு வந்துருக்கான். இன்னைக்கி அந்த புள்ள வேலைக்கு வல்லதானே?

**கலையரசி:** ஆமாயா, அத ஏயா சொல்றிங்க. கிரிகட் பெரச்சனதா பெரிய பெரச்சனையா போகுதே... நம்ம பயளுங்களுக்கு இதுதா வேல. நாட்டுக்காக வெளாட போரவங்களுக்கு போர இடத்துள சும்மா இருக்க முடியாம பொம்பள சோக்கு கேக்குது. இன்னைக்கி பாத்திங்களா எங்க கொண்டுவந்து நிப்பாட்டி இருக்குனு...

**கங்காணி:** ஆமா புள்ள.. இருந்தாளு பெரியெடுத்து வெவகாரம் நம்மளுக்கு என்னா புள்ள. நாம நம்ப வேலையோட இருப்போ. எப்புடியு காச குடுத்து முடிச்சிருவானுங்க பாருவே..

**கலையரசி:** ஆமா ஆமா... பொம்பள புள்ளைக்கிட்ட பொய்ட்டு நாய் புத்திய காட்டிருக்கா? என்னாயா பெரியெடத்து விசயோ? எது எப்புடினாலு பொம்பள புள்ள அதுக்குனு என்னாவேனாலு காச காட்டி செஞ்சிர ஏழுமா? சீ தூ..!
நம்கு வெக்கமா இருக்கு.

**கங்காணி:** ஆமா, அங்க நீ போய் பாத்த... அந்த புள்ளயு என்னா செஞ்சி மயக்குனுச்சோ யாரு கண்டா?

**கலையரசி:** ஆமா ஆமா... நீங்க நெனச்சிகிட்டிங்களோ அது நம்ம இஷாலினி புள்ளவுட்டு கேஸ் மாதினு? எலி ஏ அம்மணமா போகுனு தெரியாது? ஒரு புள்ளையே பொய்ட்டு எனக்கு இவ்ளோ கேவளமான விசயமலா நடந்துச்சினு வாய்தொரந்து சொல்லுதுனா
அந்த புள்ளைக்கி எவ்வளோ சீ பட்டு பொய்ருக்கு? நம்ப நாட்டு பொலிஸ் மாதி காச வாங்கிட்டு மூடி மறைக்கிறவங்க இல்ல ஐயா... எதையு சோதன செஞ்சி
நல்லா விசாரிக்காம சொல்ல மாட்டாங்க.

**கங்காணி:** அடேங்கப்பா..! அப்புடியே நேர்ல பாத்த மாதியே சொல்ர.
பொம்பள புள்ளங்க ஆயிரோ சொல்லு. அதலா நம்பி கெட்ட கதயெல்ல நல்லாவே தெரியு. அதலா பெரியெடத்து விசயோ. கொழுந்து எடுக்குற சின்னவ நீ
வாய வச்சிகிட்டு சும்மா இரு.

**கலையரசி:** எல்லாதயு மூடி மறச்சிக்கிட்டே இருக்கோ ஐயா... ஆனா ஒன்னுங்கயா... எல்லாதயு ஒருத்தே பாத்துகிட்டு இருக்கான். என்னைக்காவது எல்லாத்துக்கு விடிவு வரு...

**கங்காணி:** ஆமா ஆமா... என்னா இப்ப கொரச்ச? மகாராணிக்கு மூனு வேள சோறு, தங்குரதுக்கு வீடு இருக்குதானே? ஓ வாய அடக்குனினா எல்லத்தையு அடக்கிறலா.

**கலையரசி:** ஆமாயா, நீங்க சொல்ர மாதி அந்த வெளிநாட்டு புள்ளையு இருந்திருந்துச்சினா இன்னைக்கி எல்லாமே மூடி மறைஞ்சி எல்லா ராசவையு நல்லவங்களாவே நம்பிக்கிட்டு இருந்திருப்போ.

**கங்காணி:** நீ என்னமோ எல்லாத்துளயு சரிங்கிறமாதியு மத்தவங்கங்களா பிழங்குறமாதியு சொல்லாத. யாரு இங்க உத்தமனுங்களு இல்ல. சுத்தமனுங்களு இல்ல.

**கலையரசி:** நீங்க சொன்னா எல்லா சரிங்கையா. இப்புடியே பேசி பேசி கடைசிவரைக்கு கண்டவனுங்க கால கழுவிக்கிட்டு கைய கட்டிக்கிட்டு இருந்த சரிங்கயா.

**கங்காணி:** பெரியெடத்து விசயத்துளயே மூக்க நொழைச்சிக்கிட்டு கடைசில திங்கிரதுக்கு சிங்கி அடிக்கையில தெரியு. இப்புடியே பேசிகிட்டு இரு பாருவே...

**கலையரசி:** வாய தொறந்து பேசுரதுக்கு இங்க உரிம இல்லங்கையா... பேசிடாலு கடசில வயித்துள அடிச்சிறுவிங்க. அதுநாலதாங்கயா ஏதோ பொளம்பிக்கிட்டே இருக்கோ. முதலாளிமார்களா தப்பே செஞ்சாலு தாங்கிகிட்டு மூடிகிட்டு இருக்கோயா. ஒப்பாரிகோச்சி பத்தி தெரியாதவேலா பார்ளிமன்ட்ல பாஞ்சி பாஞ்சி பேசுரானுங்க. இதுல தமிழன்னு சொலனுமா தலநிமுந்து நிக்கனுமா... இந்த நாடகத்தலா எங்க போயி சொல்ல..?

**கங்காணி:** ஏ புள்ள ஒனக்குனா ஓ புருசங்கிட்ட சொல்லிதா வாய கட்ட சொல்லனு. அவனையு நீ அடக்கிறுவ. அவன பாரு ஆம்பளாளு வேலகாட்டுள அமைதியான ஆளு,

**கலையரசி:** இந்த பாருங்கையா சொல்லையிலயே வாராரு தேத்தனி கொண்டுகிட்டு..

**கங்காணி:** ஆ... தங்கவேளு வாடா வா..

**தங்கவேளு:** ஐயா...

**ம.அகிலேஸ்**

# காதல் சொல்ல வந்தேன்

விழியே மனதின்
கதவாக

திறந்தாய் நுழைந்தேன்
உணர்வாய்
கலந்தேன்
உன் உறவாக

கனவே தினமும்
நீயாக

நேரம் காலம்
மறந்தே
உறங்கும் நீளும்
இரவாய்
வரம் கேட்டேன்

காற்று நிரம்பிய
வான்வெளியில்
உன் நினைவை
சுமந்து இறகாய்
மிதந்தேன்

அழகாக
சுடரும் ஒளியே
நீயாக
கரைந்தேன் உன்
நினைவில்
மெழுகாக..!

*-மருதூர் மௌஜுன்-*
*மருதமுனை*

தூறல்கள்

# நாடிவரும் இறைநீதி

பண்டங்கள் பதுக்கிவைத்து
விலையைக் கூட்டி
பகற்கொள்ளை யடிப்பதுவும் நியாய
மாமோ
உண்பதற்கும் உணவின்றி வாடும்
மக்கள்
உணர்வுகளைக் காலடியில் மிதிக்க
லாமோ
திண்டாடும் மக்களது துயரத்
துள்ளே
தினம் மகிழ்ந்து குளிர்காயும் தீயோர்
நோக்கி
அண்டிவரு மிறைகோபம் சேர்த்த
தெல்லாம்
அழிவுதனைக் கண்டுவிடும் நீதி
தானே
கடத்தலினால் நாட்டுக்குத் துரோகம்
செய்வார்
கலப்படங்கள் செய்துபொரு ளீட்டிக்
கொள்வார்
அடுத்தவரின் சொத்தைக் கையாடல்

செய்வார்
அமானிதங்க ளேய்த்துத்தம்
வசமாய்க் கொள்வார்
அடுக்கடுக்காய் மோசடியைக்
காவி நிற்போர்
அடைகின்ற
பொருளென்றும் நிலைக்கு
மாமோ
திடுக்கமுறும் நாளினிலே
அநீதிக் கெல்லாம்
தீர்ப்புவரும் முடிவிறையின்
நீதி தானே
மதிமயக்கும் வாழ்வழிக்கும்
போதை வஸ்து

வாணிபத்தால்
பொருளீட்டல் நிலைக்கு
மாமோ
கதியற்ற இளையோரைக்
கவர்ந்தி முத்துக்
கருவறுக்கும்
கோரமது நியாய மாமோ
கொதிக்கின்ற
பெற்றோரின் கண்ணீ
ரென்றோ
கொந்தளித்துச் சதிகாரர்
விதியை மாற்றும்
குதிகொள்ளச் செய்கின்ற தீய
செல்வம்
கொண்டுவரும் நாசமதை
நீதி தானே..!

*-கவிச்சுடர்*
*மு.மீ.அமீர் அலி-*

# அவளுக்குள் நான்!

மேக முக்காட்டுக்குள்
எழில் முகம் மறைக்கும்
எனது பௌர்ணமியே..!
உனது குளிர்
தரிசனத்திற்காகவே
என் இதய மலர்
இதழ் விரிக்கிறது

என் உயிரில் கலந்த
சுவாசக் காற்றே..!
உனது நினைவுகளின்
உரசல்களுக்காகவே
நீண்ட இரவுகளை
யாசிக்கிறேன்

என் கண்ணுக்குள்
மின்னி மறையும்
மின்மினியே..!
உனது
தழுவல்களுக்காகவே
என் இதயச் சுவர்களில்
அன்புக் குளிரை
தடவி வைத்திருக்கிறேன்

அன்பு நந்தவனமே..!
உன் வாசத்தை
வசீகரம் செய்ய
வாசலில் பூக்கிறேன்
உனது மூச்சை
சலவை செய்ய
தென்றலாகி
தெருக்களில்
அலைகிறேன்

உன் வதனத்தின்
வெளிச்சத்தில்
வாழ்க்கைப் புத்தகம்
வாசிக்கிறேன்
உன் பனிப்பார்வையின்
ஈரத்தில்
என் இதயத்தை
நனைக்கிறேன்
பக்கத்தில்
நீ இருந்தால்

என் நினைவுகள்
எழுந்து நடக்கும்

தள்ளித் தள்ளி
நீ இருந்தால்
தலையணையும்
என்னைத் தண்டிக்கும்
நிலைக் கண்ணாடியும்
என்னை நிர்மூலமாக்கும்

உனது உரசல்கள்
எனது உளறல்களைக்
கூட
கவிதைகளாக்கும்
மௌனங்களைக் கூட
பாஷைகளாக்கும்

உனது
தழுவல்கள் பட்டால்
ஏசி அறைக்குள்ளும்

எனக்கு வியர்த்துக்
கொட்டும்
அப்போது
என் தடுமாற்றங்கள்
கூட
தத்துவங்களாகும்

தென்றலின்
இதம் மேவிய
எழில் முகமே..!
என் வைராக்கிய
வானத்தில்
வந்து விழுந்த
வைர நட்சத்திரமே..!
உனக்குள் நான்
எனக்குள் நீ
இதில் யார் பிரிந்தாலும்
மரணம்
இருவருக்கும்தான்..!

*-வரக்காமுறையூர் ராசிக்-*

# இரவு விடிய வேண்டும்

அல்லலும் ஆதங்கமும்
அகத்திலே குடியிருக்க
இன்னலும் இடுக்கண்ணும்
இதயத்தைப் பிழிந்தெடுக்க

நிந்தனையின்
நெருக்கலினால்
வந்தனங்கள் வலுவிழக்க
நந்தவன வாழ்க்கையின்று
நொந்து நூலாய் போயிருக்க

உதயகாலம் உதிர்ந்து
ஊமையாய் உருவெடுக்க
இதயவாசலில் இன்பமும்
இயல்பாய் அடைத்திருக்க

வேதனையின் விளிம்பினிலே
வேட்கைகள் தொலைந்திருக்க
போதனைபோல்
பொக்கிஷங்கள்

பொசுங்கித்தான் ஆயிருக்க
வலிகளின் விஸ்வரூபத்தால்
வாழ்க்கை வலுவிழக்க
கிலிகளின் ஆக்கிரமிப்பால்
கிழிந்து வாழ்வு
தொங்கியிருக்க

பெருமூச்சு பெரிதாகி
விழிநீர் பெருக்கெடுக்க
மறுவாழ்வு மலர்ந்திங்கு
மகிழ்ச்சி நிறைந்திருக்க

காசினியைக் காப்பவனை
கையேந்திக் கேட்கிறேன்
போஷித்து அருளிடவே
யாசித்து மீளுகிறேன்..!

*-உசனார் எம்.பஷீர்-*
*ஏறாவூர்*

# தமிழன் தர்பார்

f இது எங்க ஏரியா



ஒருவர் போதையில்
தள்ளாடியபடி கரண்ட்
கம்பத்து அடியில
நின்னுகிட்டு, கம்பத்த தட்டி,
“ஏய்... கதவ தொறடி... உன்
புருஷன் வந்திருக்கேன்!
ஏய்... கதவ தொறடி... உன்
புருஷன் வந்திருக்கேன்..!”
என்றான்.
பக்கத்துல படுத்திருந்த மற்றொரு
குடிகாரன்,
“ஏம்பா... வீட்டுல யாரும்
இல்லபோல இருக்கு..!”
என்றான்.
அதற்கு இவன் “இல்ல பிரதர்.
வீட்டுலதான் இருக்கா. மாடில
லைட் எரியுது பாருங்க..!”
என்றான்.

# வாட்ஸ் அப்பில் படித்துச் சிரித்தது



ஆங்கிலத்தில்
ஏன் ‘M’ நேராகவும்
‘W’ தலைகீழாக
இருக்கிறது என்ற
காரணத்தை
நேற்றுப் படித்துத்
தெரிந்து
கொண்டேன்..!

ஏனென்றால்,
ஆண்கள் (Men)
எப்போதும், எந்த விடயத்தையும் நேராகப் பார்ப்பார்கள். ஆனால், பெண்கள் (Woman) எப்போதும் எந்த விடயத்தையும் தலைகீழாகத்தான் யோசிப்பார்கள் என்று படித்திருக்கிறேன்..!

அதனை நேற்று சரியென்று உணர்ந்து விட்டேன்..!

நேற்று மாலை எனது நண்பனை சந்திக்க அவனின் அபார்ட்மெண்டிற்கு சென்று 4 ஆவது மாடிக்கு செல்ல லிஃப்ட்டில் ஏறினேன்.

அப்போது குழந்தையுடன் ஒரு பெண்மணி லிஃப்ட்டின் உள்ளே வர, அவரிடம் 2ஆவதா இல்லை 3ஆவதா என்று கேட்டேன். அந்தப் பெண்மணி கோபத்துடன்

‘‘எனக்கு இன்னும் கல்யாணம் ஆகவில்லை. இது என் அக்காவின் குழந்தை’’

என்று முகத்தை திருப்பிக்கொண்டார்..!

நான் மனதுக்குள் சிரித்துக் கொண்டேன்.

2 ஆவது மாடிக்கு அல்லது 3ஆவது மாடிக்குப் போக லிஃப்ட் பட்டனை அழுத்த வேண்டுமா என்பதற்காகவே அவ்வாறு கேட்டேன்.

அந்தப் பெண்மணியோ என்னைத் திட்டிவிட்டு சென்றுவிட்டார்..!

இப்ப சொல்லுங்க... ‘W’ கீழாக இருப்பது சரிதானே..?!

# மனைக்கு உரியவள் மனைவி

ஒருவர் எதற்கெடுத்தாலும் மனைவியுடன் சண்டை போடுவார்.

"ஒருநாள் ஒபிஸ் போய் வேலை செய்து பார்... சம்பாதிப்பது எவ்வளவு கஷ்டம் என்று புரியும்" என்று அடிக்கடி சவால் விடுவார்.

அவள் ஒரு நாள் பொறுமையிழந்து, "ஒரு நாள் நீங்க வீட்ல இருந்து பிள்ளைகளை பார்த்துக்கோங்க. காலையில் குளிப்பாட்டி, சாப்பிட வச்சு, வீட்டுப் பாடங்கள் சொல்லிக்கொடுத்து, சீருடை அணிவித்து பள்ளிக்கு அனுப்புங்க...

அத்தோடு சமைப்பது, துவைப்பது எல்லாத்தையும் செஞ்சுதான் பாருங்களேன்..." என எதிர் சவால்விட்டாள். கணவனும் அதை ஏற்றுக் கொண்டான்.

அவன் வீட்டிலிருக்க இவள் ஒபீஸ் போனாள். ஒரே குப்பை, கூளமாகக் கிடந்தது ஒபீஸ். முதலாளி மனைவி என்பதை மனதில் கொள்ளாமல் கூட்டிப் பெருக்கி சுத்தம் செய்தாள்.

வருகைப் பதிவேட்டை சரிபார்த்து தாமதமாக வருபவர்களைக் கண்டித்தாள். கணக்கு வழக்குகளைப் பார்த்தாள். மாலை 5 மணி ஆனதும் வீட்டுக்குப் புறப்பட நினைத்தபோது, ஓர் அலுவலரின் மகள் திருமண வரவேற்பு குறித்து உதவியாளர் சொல்ல, பரிசுப் பொருள் வாங்கிக்கொண்டு கல்யாண மண்டபத்திற்கு சென்றாள்.



கணவர் வராததற்கு பொய்யான காரணம் ஒன்றை சொல்லிவிட்டு, மணமக்களின் கட்டாயத்தால் சாப்பிட சென்றாள். பந்தியில் உட்கார்ந்தவளுக்கு சிந்தனையெல்லாம் வீட்டைப் பற்றியே! இலையில் வைத்த ‘ஜாங்கிரியை’ மூத்தவனுக்கு பிடிக்கும் என்று கைப்பையில் எடுத்து வைத்தாள். முறுக்கு கணவனுக்குப் பிடிக்குமே என்று அதையும் கைப்பைக்குள் வைத்துக் கொண்டாள். அவள் சாப்பிட்டதை விட, பிள்ளைகளுக்கும் கணவனுக்கும் என பைக்குள் பதுக்கியதே அதிகம்.

ஒரு வழியாக வீடு வந்து இறங்கியவள், கணவன் கையில் பிரம்போடு கோபத்துடன் அங்குமிங்குமாக நடந்து கொண்டிருந்ததைப் பார்த்தாள். இவளை பார்த்ததும், "பிள்ளையா பெத்து வச்சிருக்க..? எல்லாம் கியா முயா என்று கத்தித் தொலையுதுங்க. அத்தனையும் குரங்குகள்..! சொல்றதை கேட்க மாட்டேங்குதுங்க. படின்னா படிக்க மாட்டேங்குதுங்க. சாப்பிடுன்னா சாப்பிட மாட்டேங்குதுங்க. அத்தனை பேரையும் அடிச்சு அந்த ரூம்ல படுக்க வச்சிருக்கேன்.

பாசம் காட்டுறேன்னு பிள்ளைகளை கெடுத்து வச்சிருக்கே" என்று பாய..

அவளோ, "ஐயய்யோ..! பிள்ளைகளை அடிச்சீங்களா?" என்றவாறே உள்ளே ஓடி கதவை திறந்து பார்த்தாள். உள்ளே ஒரே அழுகையும் பொருமலுமாகப் பிள்ளைகள் இருந்தனர்.

விளக்கைப் போட்டவள் அதிர்ச்சியுடன், "ஏங்க... இவனை ஏன் அடிச்சுப் படுக்க வச்சீங்க..? இவன் எதிர்வீட்டு பையனாச்சே" என்று அலற, "ஓஹோ..! அதான் ஓடப் பார்த்தானா..?" என கணவன் திகைக்க

அந்த நிலையில் இருவருக்கும் ஒன்று புரிந்தது. இல்லாள் என்றும், மனைக்கு உரியவள் மனைவி என்றும் சங்க காலம் தொடங்கி நம் மூதாதையர்கள் சொல்வது சும்மா இல்லை.

இல்லத்தைப் பராமரிப்பதிலும் பிள்ளைகளுக்கு வளமான வாழ்க்கையை அமைத்துக் கொடுப்பதிலும் ஒரு பெண்ணின் பங்கு தலையாயது. அதுபோல், பொருளீட்டி வரக்கூடிய ஆண்களின் பங்கும் அளப்பரியது.

ஆனால், இருவரும் வேலைக்கு செல்லும் இந்தக் காலத்தில் இது ஆணுக்கு, இது பெண்ணுக்கு என்று குடும்பப் பொறுப்புகளை இனம்பிரிக்க இயலாதபடி வாழ்க்கை சமத்துவம் ஆகிவிட்டது.

இந்தச் சூழ்நிலையில் ஒரு குடும்பம் மகிழ்ச்சியாக இருக்க வேண்டுமென்றால் கணவன் மீது மனைவியோ, மனைவி மீது கணவனோ ஆதிக்கம் செலுத்தாமல் அன்பால் சாதிக்கும் மனநிலையைக் கொண்டிருந்தால்தான் எல்லா வளமும் பெற்று பல்லாண்டு வாழ முடியும்.

# விருந்துக்கு வந்தவர்கள்



தந்தை ஒருவர் ஒரு பெரிய ஆட்டை வெட்டி நெருப்பில் வதக்கி, தன் மகளிடம் சொன்னார்.

“மகளே... நம்முடன் சாப்பிட என் நண்பர்களையும் அண்டை வீட்டாரையும் கூப்பிடு. எல்லோரும் சாப்பிடுவோம்” என்றார்.

அவருடைய மகள் தெருவுக்கு வந்து கத்த ஆரம்பித்தாள்.

“தயவுசெய்து எங்கள் அப்பாவின் வீட்டில் எரியும் தீயை அணைக்க எங்களுக்கு உதவுங்கள்..!”

சில நிமிடங்களுக்குப் பிறகு ஒரு சிலர் வெளியே வந்தனர். மீதமுள்ளவர்கள் உதவிக்கான கூக்குரலைக் கேட்காதது போல் செயல்பட்டனர்.

வந்தவர்கள் நள்ளிரவு வரை நன்றாக சாப்பிட்டுக் குடித்து கொண்டாட்டமாக கழித்தனர்.

திகைத்த தந்தை தன் மகளிடம் திரும்பி, அவளிடம் கேட்டார்.

“வந்த மக்களை எனக்குத் தெரியாது. இதுவரை அவர்களை நான் பார்த்ததில்லை. என்னுடைய நண்பர்கள் மற்றும் உறவினர்கள் எங்கே?”

மகள் சொன்னாள்.

“தங்கள் வீடுகளிலிருந்து வெளியே வந்தவர்கள் நம் வீட்டில் எரிவதாக நினைத்த தீயை அணைப்பதற்கு வந்தவர்களேயன்றி, விருந்துண்ண அல்ல. இவர்களே எமது தாராள மனப்பான்மைக்கும் விருந்தோம்பலுக்கும் தகுதியானவர்கள்” என்று சொன்னாள்.

நீங்கள், வாழ்க்கையில் துன்பப்படுகிறீர்கள் என்று தெரிந்தும் உங்களுக்கு உதவாதவர்கள் ஒருநாள் நீங்கள் வெற்றியடையும்போது அந்த மகிழ்ச்சியில் பங்குகொள்ள எவ்வாறு தகுதியானவர்களாக இருக்கக்கூடும்?

# சேகர் செத்திருப்பான்...



**மனைவி** - கஜினி பட ஹீரோயின் யாரு?

**கணவன்** - அசின்டா.

**மனைவி** - நயன்தாராவோட முதல் படம் என்ன?

**கணவன்** - ‘ஐயா’டா செல்லம்.

**மனைவி** - தமன்னாவோட ஃபுல் நேம் தெரியுமா?

**கணவன்** - தமன்னா பாட்டியா. குஜராத் பொண்ணு.


**மனைவி** - எதிர்த்த ஃப்ளாட் ரேகா எப்ப காலி பண்ணி வேற ஏரியா போனா..?

**கணவன்** - போன வெள்ளியோட கரெக்ட்டா 3 வாரம். இதெல்லாம் ராத்திரி 2 மணிக்கு என்கிட்ட ஏன் கேக்குற செல்லக்குட்டி..?

**மனைவி** - இல்ல... நேத்து என் பர்த் டே..!

“ஏண்டா ஸ்கூலுக்கு லேட்டு?”
“வழியில் ஒருத்தர் 500 ரூபாவைத் தொலைச்சுட்டார்.”
“அதைத் தேடிக் கொடுத்துட்டு வந்தியா?”
“இல்லை. அவர் போற வரைக்கும் அது மேலே நின்னுகிட்டு இருந்தேன் சேர்..!”




காரைக்கவி



# சீத்துவக்கேடு 213

சடையற்றை மோளின்ரை கடைக்குப் போன அப்பு வாயை புறங்கையால தடவிக்கொண்டு வந்தார். எப்பிடியும் தேத்தண்ணி ஒண்டு குடிச்சு சுருட்டு ஒண்டும் பத்தியிருப்பார். அப்புவை மாதிரிக் கனபேர் இஞ்சை இருக்கினம். கோயில் விரதம் அது இது எண்டு தின்னாமக் குடியாம இருப்பினம். ஆனா, அவையாலை உந்த போயிலையையும் வெத்திலையையும் கடைசிவரையும் விட்டுப்போட்டு இருக்கேலாது.

கோயில் வீதிவழியை இருக்கிற தேத்தண்ணிக் கடையளிலை தேத்தண்ணி விக்கிற அளவுக்கு வெத்திலை, போயிலை, சுருட்டு, பீடி, சிகரட் எல்லாம் விலைப்படும். உவை தேத்தண்ணிக் கடைக்காரர் புகைக்கிறவைக்கு எண்டே புறம்பா கடைக்குப் பின்னால ஒரு வாங்கும் போட்டு அதை மறைச்சு ஒரு தட்டியும் வைச்சிருப்பினம். அவை புகைக்கிறவை கண்காணாம புகைக்கிறதுக்கு எண்டு உந்த ஏற்பாடு செத்திருப்பினம்.

கோயிலுக்கை வெத்திலை, போயிலை பாவிக்கக் கூடாது எண்டுவினம். ஆனா, உங்க எங்கடை கோயில் வழியை மேளகாறரும் சில ஐயர்மாரும் சில மணியகாரரும் அங்கை வேலை செய்யிறவையும் வாய் நிறைய வெத்திலை போட்டுக்கொண்டுதான் நிப்பினம்.

சில நேரம் கோயில் வீதியிலையே எச்சிலும் துப்புவினம். அதிலையும் சில ஐயர்மார் மந்திரம் சொல்லேக்கை பாக்குச் சிதறலும் எச்சிலும் முன்னால நிக்கிற பக்த அடியாரின்ரை முகத்திலை பன்னீர் மாதிரி வந்துவிழும். உவையெல்லாம் உப்பிடி நடந்தா உப்பத்தே இளம் பெடியள் பெட்டையளுக்கு என்னண்டு எங்கட கடவுளில்லை சமயத்தில நம்பிக்கை வரும் எண்டு ஆச்சி நெடுகவும் சொல்லுவா.

உந்த எங்கடை சடையற்றை மோளின்ரை கடை வலு விலாசம் எண்டுதான் சொல்லவேணும். வாரிவளவுப் பிள்ளையார் கோயில் தேர்முட்டிப் பெடியளுக்கு கோயிலுக்கு வாறவைக்கு நல்லியக்கச் சபைக்கு வாறவைக்கு தெருவால போறவை வாறவைக்கு அந்தக் கடை ஒரு சரணாலயம் எண்டுதான் சொல்ல வேணும்.



அவவின்ரை கடையில எல்லாவிதமான பலகாரங்களும் இருந்தாலும் அங்கை இருக்கிற கறுத்த தொதல் துண்டுகளுக்குத்தான் கடும் கிராக்கி எண்டு சொல்லவேணும். கிழவி என்னண்டுதான் அந்தத் தொதலை அப்பிடி உருசையாக் கிண்டிறது எண்டு ஆருக்கும் தெரியாது. தொதலை கீலம் கீலமா வெட்டி வைச்சிருக்கும். ஒரு கீலம் அஞ்சாம் எண்டு வித்தவ.

சடையற்றை மோளைப்பாத்தா ஔவையாரைப் பாத்தமாதிரி இருக்கும். குனிஞ்ச நல்ல வெள்ளைக் கிழவி. வெள்ளைத்தலை வெள்ளைச்சீலை கட்டியிருப்பா. ரவிக்கை போடுறது எல்லாத்திலையும் அவவுக்கு நம்பிக்கை கிடையாது. சீலத்தலைப்பை இழுத்து நெஞ்சுக்கு குறுக்கால மூடிக் கட்டியிருப்பா. அவ குனிஞ்சு குனிஞ்சு நடக்கேக்கை உப்பத்தே சில ரவிக்கையளுக்காலை எட்டிப் பாக்கிற மாதிரி ஒண்டும் தெரியாது.


கிழவி குடுக்கல் வாங்கல் வலு கறார். அஞ்சாம் தன்ரை காசையும் விடாது. அஞ்சாம் மற்றவையின்ரை காசையும் எடுக்காது. கொப்பி இருக்காது. கல்குலேற்றர் இருக்காது. ஆனா, கணக்கு வழக்கு கணக்கா இருக்கும். ஆரார் எவ்வளவு கடன் குடுக்க வேணும் எண்டும் ஞாபகத்தில வைச்சு வாங்கிப்போடுவா. கடன் வாங்கினவையும் ஆக்களுக்கை வைச்சு கிலிசுகெடுத்துப் போடுவா எண்ட பயத்தில கிழவி கேக்காமலே கொண்டு போய் குடுத்துப் போடுவினம்.

சடையற்றை மோளின்ரை கடையால வந்த அப்பு கள் எண்ட சொல் எங்கடை இலக்கியங்களிலை எங்கை எங்கை இருக்குது எண்டு சொல்லிப்போட்டு இடையில விட்டனான் எல்லே எண்டு போட்டு மிச்சத்தையும் சொல்லத் துடங்கினார்.

***கள் உடை தடவில் புள் ஒலித்து ஓவா ( நற் 227/7)***
***பலி கள் ஆர்கை பார் முது குயவன் ( நற் 293/2)***
***ஓங்கி தோன்றும் தீம் கள் பெண்ணை ( நற் 323/1)***
***கள் நாறு நெய்தல் கதிரொடு நயக்கும் (குறு 296/4)***
***கள் நறும் குவளை நாறி ( ஐங் 73/3)***
***கள் கமழ்ந்து ஆனா துறைவற்கு ( ஐங் 151/4)***
***நெய்தல் மரபின் நிரை கள் செறுவின் (பதி 27/10)***
***கள் கொடி நுடங்கும் ஆவணம் புக்கு உடன் ( பதி 68/10)***
***அரும் கள் நொடைமை தீர்ந்த பின் மகிழ் சிறந்து (பதி 68/11)***
***கள் உடை நியமத்து ஒள் விலை கொடுக்கும் ( பதி 75/10)***
***அரிவையது தானை என்கோ கள் உண்ணூஉ (பரி 11/28)***

உப்பிடிச் சொல்லிக்கொண்டு வந்த அப்பு கொஞ்சம் பொறு உதிலை உவன் பத்தி வள்ளி கந்தையா வந்து நிக்கிறான். சுகமில்லை எண்டு இருந்தவன் என்னண்டு ஒரு சொல் கேட்டு போட்டு வாறன் எண்டு அங்கால போனார்.

(இன்னும் ஆடுவம்)


**வித்வ கலாபூஷணம் ஜோதிட திலகம் சிவஸ்ரீ வெங்கட சுப்ரமணிய குருக்கள்**

# இவ்வார இராசி பலன்கள்

**மேஷ ராசி அன்பர்களே!**

குடும்பத்தில் உற்சாகத்துக்குக் குறைவிருக்காது. உறவினர்கள் வருகை மகிழ்ச்சி தரும். பொருளாதார வசதிக்கு குறைவு எதுவும் இருக்காது. புதிய முயற்சிகளை தவிர்ப்பது நல்லது. உடல் ஆரோக்கியம் மேம்படும். கணவன் - மனைவிக்கிடையே மூன்றாவது நபர்களின் தலையீடு காரணமாக மனஸ்தாபம் ஏற்படக்கூடும். அனுசரித்துச் செல்வது நல்லது. பிள்ளைகள் பிடிவாதம் பிடித்தாலும் அவர்களைக் கண்டிக்காமல் விட்டுப்பிடித்துச் செல்வது நல்லது. அலுவலகத்தில் வேலைச்சுமை அதிகரிக்கும். உங்கள் வேலைகளை மற்றவர்களிடம் ஒப்படைக்க வேண்டாம். வியாபாரத்தில் எதிர்பார்த்த அளவுக்கு இலாபம் கிடைக்காது. போட்டிகளைச் சமாளிக்க கடுமையாகப் பாடுபடவேண்டி வரும். புதிய முயற்சிகள் எதுவும் இப்போது வேண்டாம். பெண்களுக்கு மிகவும் மகிழ்ச்சியான வாரம். கணவரின் அன்பும் ஆதரவும் உற்சாகம் தரும்.

**ரிஷப ராசி அன்பர்களே!**

பொருளாதார வசதிக்குக் குறைவில்லை. செலவுகள் ஏற்பட்டாலும் சமாளித்துவிடுவீர்கள். நெருங்கிய உறவினர்கள் மூலம் குடும்பத்தில் ஏற்பட்ட குழப்பங்களை சாமர்த்தியமாக சரிசெய்துவிடுவீர்கள். கணவன் - மனைவிக்கிடையே ஒற்றுமை அதிகரிக்கும். திருமண வயதில் இருப்பவர்களுக்கு நல்ல இடத்தில் திருமணம் நிச்சயமாகும். நீண்டநாட்களாகச் சந்திக்காமல் இருந்த நண்பர்களைச் சந்தித்து மகிழ்வீர்கள். அலுவலகத்தில் எதிர்பார்த்த பதவி உயர்வு மற்றும் சம்பள உயர்வு கிடைக்கும். வியாபாரத்தில் புதிய முதலீடுகள் செய்வதைத் தவிர்க்கவும். கடையை வேறு இடத்துக்கு மாற்றம் செய்வதை சற்று ஒத்திப்போடவும். பங்குதாரர்களின் ஆதரவு மனதுக்கு ஆறுதலாக இருக்கும். பெண்களுக்கு அதிக பொறுப்புகளால் உடல் அசதி உண்டாகும். பணவசதி ஓரளவு திருப்தி தரும்.

**மிதுன ராசி அன்பர்களே!**

நீங்கள் நீண்டநாட்களாக எதிர்பார்த்திருந்த நல்ல தகவல் வந்து சேரும். உடல் ஆரோக்கியம் மேம்படும். பணவரவு அதிகரிக்கும். வாரத் தொடக்கத்தில் எதிர்பாராத செலவுகளும் ஏற்படும். குடும்ப விடயத்தில் மற்றவர்கள் தலையிடுவதை அனுமதிக்காதீர்கள். சிலருக்கு நீண்டநாட்களாக நிறைவேற்றாமல் விடுபட்ட குலதெய்வப் பிரார்த்தனையை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படும். தந்தைவழி உறவினர்களால் செலவுகள் ஏற்படும். அலுவலகத்தில் உங்களின் திறமை வெளிப்படும். உயர்ந்த பதவி தேடி வரும். சம்பள உயர்வும் கிடைக்கும். வியாபாரத்தை விரிவுபடுத்த நினைப்பவர்கள் அதற்கான முயற்சிகளைத் தொடங்கலாம். விற்பனையும் இலாபமும் அதிகரிக்கும். சக வியாபாரிகளுடன் இணக்கமான உறவு ஏற்படும். பெண்களுக்கு செலவுகள் கூடுவதால் சற்று சிரமப்பட்டே சமாளிக்க வேண்டிவரும். உறவினர்கள் அனுசரணையாக இருப்பார்கள்.

**கடக ராசி அன்பர்களே!**

ஓரளவு அனுகூலமான பலன்களை எதிர்பார்க்கலாம். பணவரவைப் பொறுத்தவரை திருப்திகரமான போக்கே காணப்படுகிறது. செலவுகளும் அவசியமான செலவுகளாகவே இருக்கும். சிலருக்கு வெளியூர்ப் பயணமும் அதனால் ஆதாயமும் ஏற்படும். திருமணம் தொடர்பான முயற்சிகளில் குடும்பப் பெரியவர்களின் ஆலோசனையைக் கேட்டுச் செய்யவும். அலுவலகத்தில் உங்கள் பணிகளில் கூடுதல் கவனம் தேவை. இப்போதைக்கு சலுகைகள் எதையும் எதிர்பார்க்கமுடியாது. சிலருக்கு இடமாறுதல் கிடைப்பதற்கும் வாய்ப்புள்ளது. வியாபாரத்தை விரிவுபடுத்தவும், வாடகை இடத்திலிருந்து சொந்த இடத்துக்கு கடையை மாற்றவும் வாய்ப்புண்டாகும். புதிய முதலீடுக்கான பண உதவி கிடைக்கும். பெண்கள் அக்கம்பக்கத்தில் உள்ளவர்களிடம் பக்குவமாக நடந்து கொள்ளவும். வீண் அலைச்சலைத் தவிர்ப்பது நல்லது.

**சிம்ம ராசி அன்பர்களே!**

வருமானம் திருப்திகரமாக இருக்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும். வீண் செலவுகள் இருக்காது. பிள்ளைகள் மூலம் பணவரவுக்கு வாய்ப்புண்டு. அரசாங்கக் காரியங்கள் அனுகூலமாக முடியும். தந்தையுடன் கருத்து வேறுபாடுகள் நீங்கும். தந்தைவழி உறவினர்களால் சுபநிகழ்ச்சிகள் ஏற்பாடாகும். நண்பர்களின் வருகை மகிழ்ச்சி தருவதாக இருக்கும். அதனால் மனதில் உற்சாகம் ஏற்படும். வேலைக்கு முயற்சி செய்பவர்களுக்கு நல்ல பதில் கிடைக்கும். வியாபாரத்தில் இலாபம் எதிர்பார்த்த அளவுக்கு இருக்காது என்றாலும் ஓரளவு திருப்திகரமாக இருக்கும். கடையை புதிய இடத்துக்கு மாற்ற நினைப்பவர்கள் அதற்கான முயற்சிகளில் ஈடுபடலாம். பெண்களுக்கு மனதில் அவ்வப்போது இலேசான சோர்வு ஏற்படும். கணவரிடம் எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும்.

**கன்னி ராசி அன்பர்களே!**

பொருளாதார நிலைமை திருப்திகரமாக இருக்கும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்புண்டு. தாயின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. உறவினர்கள் வருகையால் குடும்பத்தில் சில பிரச்சினைகள் ஏற்பட்டாலும் அதனால் பாதிப்பு எதுவும் இருக்காது. கொடுத்த கடனும் திரும்பக் கிடைக்கும். வாழ்க்கைத்துணையின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். வேலைக்குச் செல்லும் அன்பர்களுக்கு அலுவலகத்தில் பணிச்சுமை அதிகரிக்கும். அதற்கேற்ற ஆதாயமும் கிடைக்கும் என்பதால் உற்சாகமாகப் பணிகளில் ஈடுபடுவீர்கள். வியாபாரத்தில் முக்கிய முடிவுகள் எதையும் இப்போது எடுக்கவேண்டாம். அவசியம் முடிவு எடுக்கவேண்டிய நிலை ஏற்பட்டால், அனுபவம் மிக்கவர்களிடம் ஆலோசனை கேட்டுச் செய்யவும். பெண்களுக்கு சந்தோஷமும் நிம்மதியும் தரும் வாரம். பிறந்த வீட்டில் இருந்து சுப செய்தி ஒன்று கிடைக்கக்கூடும்.

**துலா ராசி அன்பர்களே!**

கணவன் - மனைவிக்கிடையே இருந்து வந்த கருத்து வேறுபாடு நீங்கி ஒற்றுமை ஏற்படும். எதிர்பாராத பயணங்கள் மேற்கொள்ள நேரிட்டு, அதனால் உடல் அசதி உண்டாகக் கூடும். உங்களைப் பற்றித் தவறாகப் புரிந்து கொண்ட நண்பர்கள், தங்கள் தவறை உணர்ந்து மன்னிப்புக் கேட்பார்கள். அவருடன் சுமுகமான உறவு ஏற்படும். செலவுகள் ஏற்பட்டாலும் பணவரவு இருப்பதால் சிரமம் எதுவும் இல்லை. அலுவலகத்தில் சக ஊழியர்கள் உங்கள் பணிகளில் உதவி செய்வார்கள். வியாபாரத்தின் காரணமாக சிலர் தொலைதூர பயணங்களை மேற்கொள்ள நேரும். பணியாளர்கள் நல்லமுறையில் ஒத்துழைப்பு தருவார்கள். சக வியாபாரிகளிடையே இணக்கமான சூழ்நிலை உண்டாகும். பெண்களுக்கு உறவினர்கள் வருகையால் பொறுப்புகள் அதிகரிக்கும்.

**விருச்சிக ராசி அன்பர்களே!**

செலவுகள் அதிகரித்தாலும் கடன் வாங்காமல் சமாளித்துவிட முடியும். கணவன் - மனைவிக்கிடையே ஒற்றுமை அதிகரிக்கும். உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். இதுவரை ஏற்பட்டு வந்த மருத்துவச் செலவுகள் குறையும். பிள்ளைகளால் பெருமை உண்டாகும். மகன் அல்லது மகளின் திருமண முயற்சிகளில் ஈடுபட சாதகமான வாரம். அலுவலகத்தில் நீண்டநாட்களாக எதிர்பார்த்த சலுகை இப்போது கிடைக்கும். சிலருக்கு அவர்கள் விரும்பிய இடத்துக்கு மாற்றல் கிடைக்கும். வியாபாரத்தில் எதிர்பார்க்கும் இலாபம் கிடைக்கும். வாடகை இடத்தில் இருந்து சொந்த இடத் துக்கு கடையை மாற்றி விரிவுபடுத்துவீர்கள். பெண்களுக்கு மிகவும் மகிழ்ச்சியான வாரம். கணவர்வழி உறவினர் வீட்டு சுபநிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொள்ளும் வாய்ப்பு ஏற்படும்.

**தனுசு ராசி அன்பர்களே!**

வருமானம் அதிகரிக்கும். எதிர்பாராத பணவரவுக்கும் இடமுண்டு. சிலருக்கு உடல் ஆரோக்கியம் பாதிக்கப்படக்கூடும் என்றாலும் உரிய சிகிச்சையின் மூலம் உடனே நிவாரணம் கிடைத்துவிடும். வீண்செலவுகள் எதுவும் ஏற்படுவதற்கில்லை. மற்றவர்களின் தலையீடு காரணமாகக் குடும்பத்தில் சில பிரச்சினைகள் ஏற்பட்டு நீங்கும். உறவினர்களுடன் பேசும்போது பொறுமை அவசியம். கணவன் - மனைவி இருவரும் ஒருவரையொருவர் அனுசரித்துச் செல்வது நல்லது. அலுவலகத்தில் உங்களுக்கு மறுக்கப்பட்டு வந்த சம்பள உயர்வு, பதவி உயர்வு போன்ற சலுகைகள் கிடைக்கும். சிலருக்கு வேறு ஊருக்கு இடமாறுதல் கிடைக்கும். வியாபாரத்தில் சற்றுக் கூடுதலாக உழைக்கவேண்டி வரும். பெண்களுக்கு பிரச்சினை இல்லாத வாரம். கணவருடன் ஏற்பட்டிருந்த பிணக்குகள் நீங்கும்.

**மகர ராசி அன்பர்களே!**

பணவரவுக்குக் குறைவிருக்காது. ஆனாலும், எதிர்பாராமல் ஏற்படும் செலவுகளால் கையிருப்பு குறைவதுடன், சிலருக்குக் கடன் வாங்கவும் நேரிடும். சிலருக்கு தெய்வப் பணிகளில் பங்கேற்கும் வாய்ப்பு ஏற்படும். தந்தையுடன் கருத்து வேறுபாடு ஏற்பட வாய்ப்பு உள்ளதால் சற்று பொறுமையுடன் இருப்பது நல்லது. பிள்ளைகள் பிடிவாதமாக இருப்பார்கள். கூடுமானவரை அவர்களைக் கண்டிக்காமல் அனுசரித்துச் செல்வது நல்லது. அலுவலகத்தில் பணிச்சுமை அதிகரிக்கும். அதிகாரிகளின் ஆதரவால் நீண்டநாட்களாக எதிர்பார்த்து காத்திருந்த பதவி உயர்வு கிடைக்கும். அலுவலகச் சூழ்நிலை மகிழ்ச்சி தரும். வியாபாரத்தில் எதிர்பார்த்ததைவிட இலாபம் கூடுதலாகக் கிடைக்கும். பணியாளர்கள் நல்ல முறையில் பணி செய்வார்கள். பெண்களுக்கு புகுந்தவீட்டு உறவினர்களிடையே ஏற்பட்டிருந்த அவப்பெயர் நீங்கும். மதிப்பும் மரியாதையும் அதிகரிக்கும்.

**கும்ப ராசி அன்பர்களே!**

பணப்புழக்கம் அதிகரிக்கும். செலவுகள் குறைவு என்பதால் சிறிது சேமிக்கவும் முடியும். பிள்ளைகள் மூலம் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். தந்தைவழி உறவினர்கள் வருகையால் வீட்டில் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும். குடும்பம் தொடர்பான முக்கிய முடிவு எடுப்பது சாதகமாக முடியும். நீண்டநாட்களாக செலுத்த முடியாமல் இருந்த குலதெய்வப் பிரார்த்தனையை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படும். அலுவலகத்தில் உங்கள் பணிகளில் மட்டுமே கவனமாக இருக்கவும். வியாபாரத்தில் இலாபம் அதிகரிக்கும். சக வியாபாரிகளுடன் சுமுகமான போக்கு ஏற்படும். பங்குதாரர்கள் அனுசரணையாக இருப்பார்கள். விற்பனையைப் பெருக்குவதில் பணியாளர்கள் உற்சாகமாக ஈடுபடுவார்கள். பெண்களுக்கு உற்சாகமான வாரமாக இருக்கும். பிள்ளைகளால் பெருமை உண்டாகும்.

**மீன ராசி அன்பர்களே!**

எதிர்பார்த்ததைவிட வருமானம் கூடுதலாக இருக்கும். கணவன் - மனைவிக்கிடையே ஒற்றுமை அதிகரிக்கும். உங்கள் முயற்சிகளுக்கு வாழ்க்கைத்துணை ஆதரவாக இருப்பார். பிள்ளைகளால் பெருமை உண்டாகும். உறவினர்களால் சிலருக்கு சங்கடங்கள் ஏற்பட்டாலும் பாதிப்பு எதுவும் இருக்காது. சிலருக்கு பிள்ளைகள் வழியில் நீண்டநாட்களாக எதிர்பார்த்த சுப செய்தி கிடைக்கக்கூடும். அலுவலகத்தில் வேலைச் சுமை அதிகரிக்கும். சிலருக்கு விரும்பத்தகாத இடமாற்றம் ஏற்படக்கூடும். அதிகாரிகளிடம் பக்குவமாக நடந்துகொள்ளவும். வியாபாரத்தில் இலாபம் அதிகமாக வரும் என்றாலும் கூடுதலாக உழைக்கவேண்டி வரும். வியாபாரத்தை விரிவுபடுத்தத் தேவையான கடன் கிடைக்கும். பெண்களுக்கு மனநிம்மதி உண்டாகும். தடைப்பட்ட சுபநிகழ்ச்சி ஒன்று புகுந்தவீட்டு உறவினர்கள் உதவியுடன் நடைபெறக்கூடும்.

தமிழன் சிறுகதை

# வர்ணனின் குடியிருப்பு

மலையகம் மழைக்குப் பஞ்சமில்லாத மலைநாடு. அங்கு வாழ்பவர்கள் உழைப்புக்குப் பேர் போனவர்கள். மழையோ, வெயிலோ, பனியோ, எதுவாயினும் அதிகாலையில் எழுந்து காலை உணவைத் தயார் செய்து பகல் உணவுக்கும் சமைத்துவிட்டு வேலைக்கு போவார்கள். பகல் ஒரு மணிநேரம் சாப்பாட்டிற்குத் திரும்பிவிட்டு மாலை 5 மணிவரை கடுமையான உழைப்புத்தான். உழைப்பாளிக் கூட்டம் என்பதற்கான அத்தாட்சி இங்குதான் நிலைநிறுத்தப்படுகின்றது.

பள்ளிக்கூடத்து மாணவர்களும் பெற்றோர்கள் வேலைக்குப் போகும்போதே பாடசாலைக்குப் போய்விடுவார்கள்.

சனிக்கிழமைதான் லீவு கிடைக்கும். அந்த நாளில் மாணவர்கள் தங்களது உடைகளைக் கழுவிப் போடுவதும் பெற்றோர்களுக்கு உதவியாக விறகு கொண்டு வருவதும் மாடுகள் வளர்த்தால் புல்லு கொண்டு வருவதும் சிலர் தந்தையால் கைகாசுக்கு புல்லு வெட்டவோ கவாத்து வெட்டிய காலத்தில் தேயிலை செடியை துப்பரவு பண்ணும் வேலைகளையோ செய்து கொடுப்பார்கள்.



அந்தி நேரங்களில்தான் படிப்பதற்கான வாய்ப்புக் கிடைக்கும். உடம்பும் மூளையும் அசதியில் இருக்கும் போதுதான் பாடங்களில் கவனம் செலுத்துவார்கள். அந்த நிலையில் பாடப் புத்தகங்களை எடுத்துப் படித்தாலும் பாடங்களைப் படித்த மாதிரிதான்.

அப்படியும் படித்து பல்கலைக்கழகத்திற்கு சென்றவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள்.

அன்று சனிக்கிழமை. மழை தொடர்ந்து பெய்தது. கடுமையான காற்றும் மின்னல் இடியும் சேர்ந்து மழை கொட்டோ கொட்டு என்று கொட்டியது. நானும் நண்பர்களும் சேர்ந்து தோட்டப் பக்கத்தில் நின்றோம். சாதாரண ஆற்றில் நேரம் ஆக ஆக வெள்ளம் போல் நீர் பாய்ந்து சென்றது. அந்த வெள்ளத்தோடு சேர்த்து வந்த மரக்கட்டைகளை விறகுக்காக எடுத்து வைத்துக் கொண்டோம்.

எங்கள் தோட்டத்திலிருந்து நாலைந்து பேர் பாடசாலைக்கு 3 கி.மீ. நடந்தே செல்வோம். அம்மா, அப்பா வேலைக்குப் போகும்போதே நாங்களும் புறப்பட்டு விடுவோம். நடந்து போகும்போது நாதன் என்ற நண்பனும் இருந்தான். நாங்கள் பாடங்களைப் பற்றி அவனோடு கதைத்துக்கொண்டே போவோம்.

அவன் திறமை என்பது அவனோடு கூடப் பிறந்த ஒன்று. ஆனால், வறுமையிலும் வறுமை அவனது வீட்டோடு சேர்ந்த ஒன்று. இரு தங்கைகளும் பள்ளிக்கூடம் செல்கின்றார்கள்.

தாயும் தந்தையும் தொடர்ந்து வேலை செய்பவர்கள். இருந்தாலும் அம்மாவின் நோய் காரணமாக தொடர்ந்து மருந்து சாப்பிடவேண்டும். அதற்காக சம்பளத்தில் அதிகமாக செலவு செய்ய நேரிடும். பாடசாலையில் கிடைக்கும் சாப்பாட்டை நம்பியே சாப்பிடாமல் வருவான்.

நாங்கள் போகும் பாடசாலைக்கே தோட்ட கிளாக்கர் மகன் வசீகரனும் வந்தான். நாதன் நன்றாக படிப்பதால் இருவருமே எதிலும் சேர்ந்தே இருப்பார்கள். நாதனின் கஷ்டத்தைத் தெரிந்துகொண்டு உதவிசெய்வான்.

வசீகரனின் பெற்றோர் நாதனோடு சேர்ந்திருப்பதை விரும்புவதில்லை. வசீகரனின் தந்தை தோட்ட உத்தியோகத்தராகவும் அத்துடன் சாதியும் உயர்வானது என்பதால் விரும்புவதில்லை. நாதனின் சாதியை தெரிந்து கொண்டதால்

**கே.நடேசன் துரைராஜ்**

சேர்ந்திருப்பதை விரும்புவதில்லை.

வசீகரன் நாதனை தனியாக அழைத்துச் சென்று “நாதன்... உன்னோடுதான் சேர்ந்திருப்பேன். யார் எதை சொன்னாலும் நீ அதை நம்ப வேண்டாம்” என்றான்.

நாதனோ “என்ன இருந்தாலும் உனக்கு சங்கடத்தை ஏற்படுத்த விரும்பவில்லை. உனது பெற்றோரின் பேச்சின்படி நட” என்றான்.

அதைப் பொருட்படுத்தாது வசீகரன் என்றும் போல் நண்பனாகவே இருந்தான்.

அன்று பெய்த மழை பொல்லாதது என்று டி.வி. செய்திமூலம் அறிந்து கொண்டோம். பள்ளிக்கூடம் விட்டதும் வீடு வந்து சேர்ந்தோம். வசீகரனும் நாதனும் தாமதித்தே வந்தார்கள். நாங்கள் வரும்போது வழியில் சிறிய ஆற்றைக் கடந்தே வரவேண்டும். மழை அதிகமாக இருந்தாலும் நாங்கள் அந்த ஆற்றைக் கடந்து வந்துவிட்டோம்.

அவர்கள் இருவரும் வரும்போது மேற்பகுதியிலிருந்து சூறாவளிக் காற்றும் இடி மின்னலும் இருந்ததால் ஆற்றைக் கடக்கும்போது திடீரென வெள்ளம் போட்டதால் இருவரும் வெள்ளத்தால் அள்ளுண்டு இழுத்து செல்லப்பட்டனர். இருவரின் அலறல் சத்தம் கேட்டு கரையில் நின்றவர்கள் பார்த்து சத்தம் போடத் தொடங்கினார்கள்.

மழையோடு மேகமூட்டம் போட்டு வானத்தை கட்டக்கருமையாக்கி மூடியிருந்தது. 3 மணியாக இருக்கும்போது 6 மணிக்கு காணப்படும் இருட்டு நேரம் போல் காட்சியளித்தது. அந்த மழையிலும் இரண்டு பேர் வெள்ளத்தால் அடித்து செல்வதாக அந்தப் பக்கமே ஒரே பேச்சாகவும் பொலிஸ்காரர்களும் பாதுகாப்பு சுழியோடிக்ளும் காணப்பட்டார்கள். விமானம் ஒன்றும் பறந்து கொண்டிருந்தது.

அடித்துச் சென்ற இருவரும் நல்லவேளையாக மரக்கட்டையால் தடுக்கப்பட்டு கெட்டியாகப் பிடித்துக் கொண்டு சத்தம் போட்டார்கள்.

இருவருமே ஒரே கட்டையை பிடித்துக் கொண்டதால் ஒருவருக்கொருவர் துணையாக அமைந்து விட்டது. இருவருமே முடியுமான அளவுக்கு சத்தம் போட்டுக் கொண்டிருந்தனர்.

எப்படியோ, யாருக்கோ இருவரின் சத்தமும் கேட்டுவிட்டது. அவர்களைக் காப்பாற்ற முயற்சி செய்ததோடு, பொலிஸுக்கும் தெரிவிக்கப் பட்டது. வெள்ள பாதுகாப்பாளர்கள் மூலம் காப்பாற்றப்பட்டார்கள்.

மறுநாள் பத்திரிகைகளில் இரு மாணவர்களும் தெய்வாதீனமாகக் காப்பாற்றப்பட்டார்கள் என்ற தலைப்புடன் செய்திகள் பிரசுரமாகின.

அது மட்டுமல்ல, மறுநாள் உயர்தரப் பரீட்சை முடிவுகளும் வந்தன. இருவருமே பல்கலைக்கழகத்திற்கு தகுதியான அளவில் சித்தி எய்தியிருந்தார்கள்.

அத்தோடு வசீகரனின் பெற்றோர் நாதனின் லயத்திற்கு வந்தனர். நாதனின் பெற்றோரிடம் “இருவருக்கும் நல்ல நேரம். அதனால்தான் நமக்குப் பிள்ளைகள் கிடைத்தார்கள். நாங்கள் எல்லோரும் சமமானவர்கள். நான் கிளாக்கராக இருந்தாலும், அது எனது தொழில். அதுபோல் நீங்கள் தோட்டத்தில் வேலை செய்வதால் அது உங்களுடைய தொழில். நாமிருவருமே தொழில் செய்பவர்கள்தான். உங்கள் மகன் படிப்புக்கு முடியுமான அளவுக்கு உதவி செய்கிறோம்” என்று கூறி விடைபெற்றார்கள்.

(0 1 -080 )

## கோப்பிக்காட்டில்

பழனியாண்டி பணிவான
நல்ல பய
தூத்துக்குடி பக்கத்துல
நல்ல செழிப்பான
ஊரு ஒன்னில்
குடும்பம் குட்டியோட

செழுமையா வாழ்ந்து வந்தா
இந்த பாழாப் போன
பஞ்சத்தால
கல்லில் அடிச்சிவிட்ட
சோளப்பொறி
உருண்டையாட்டம்
குடும்பமே செதஞ்சி போக
இந்த ராகலை மண்ணில்
அவே பாதம் பதிஞ்சிருச்சி...

இந்த பரதேசி சனம் மத்தியில
ஒரு ஒத்தும இருக்குதையா
குடும்பம் குட்டியினு அங்கிருந்து
வந்தாலும் இடைநடுவே
உறவுகள பறிகொடுத்து
அனாதையாகி நின்னாலும்

அனாதைகள் ஒன்றுசேர்ந்து
ஆதரவு தேடிக்கிட்ட
அற்புத வரலாறு இவங்க
அன்புல நெறஞ்சிருக்கு...

இப்படி ஆதிலெட்சிமி
எனும் பொறண்ட அந்த
கப்பலிலும்
சாரா ஆர்மி என்ற கவிழ்ந்த
அந்த கப்பலிலும் தப்பிப்
பொழைச்சி வந்த ஒரு சில
ஆட்களெல்லாம் ஒன்றாக
சேர்ந்து இங்க ஆறுதலா
ஆனாங்க...

ராகலையில் செல்வகந்த
தோட்டத்துல அமைஞ்ச
ஒரு லயத்தினில சொக்கமுத்து
ரெங்கம்மா குப்பாயி எல்லாரும்
பொகப்புடிச்ச கூண்டுக்குள்ள
கரிப்புடிச்சி கெடந்தாங்க...

அந்த நேரம் கடும்
கூதல் காலமது
நிர்வாகம் கொடுத்த அந்த
கம்பளி சாக்கு போர்வ
கூதல ஏத்துக்கல

இதுல குப்பாயிக்கு வயசு
ஒரு முப்பத்தி நாலுருக்கும்
சொக்கமுத்து அவ புருசே...
தாலிகட்டி கைபுடிச்சி
நெடுங்காலம்
ஆகிவிட்டும் வயித்திலொரு
புள்ளயில்ல
சொக்கநாத சாமிகிட்ட

போட்ட அந்த நேர்த்தியால
முழுகாம இருந்தா அவ
அந்த நேரத்தில்தான்
சொந்த ஊரு தூத்துக்குடி
பஞ்சத்தில மூழ்கி நிக்க

நமக்கு பிறக்கும் புள்ள சரி
நல்ல கஞ்சி குடிக்கட்டும்னு
சிலோனுக்கு படகேறி
இங்க வந்து பார்த்தமின்னா
உப்புத்தண்ணி குடிக்கவெச்சி
கடலும் சிரிக்கிதப்போ...

ஒருமாறி கப்பல் கவிழ்ந்து போயி
தப்பிச்ச மக்களில
இவங்களும் இருந்தாங்க...
இப்படி இருக்கையில
கோப்பிக்காட்டில்
கங்காணி மார்களோட
அக்கிரம்பு கொறயவில்ல

புள்ளத்தாச்சிக் காரியின்னு
வீட்டுல நிறுத்தி போனா
கேடுகெட்ட வார்த்தையால
மானத்த வாங்கிவிட்டு
வார்த்தையால கற்பழிக்கும்
நாசமத்த பயதான் அவே...

இந்த பேச்சிக்கு பயந்துக்கிட்டே
புள்ளக்காரி மலையேறி
வேல பாத்தா...
இப்படி இருக்கையில

பழனியாண்டி பய மட்டும்
எப்பவுமே சோகமாக
பித்துப் பிடிச்ச மாதிரி
பொலம்பி போயிருப்பான்

ஒன்னுமண்ணா வந்தபோது
பாழாப்போன அந்தக் கப்பல்
அவ குடும்பத்த கூறுபோட்டு
இப்படி குந்த வெச்சி
பாத்திருச்சி...

இவே பழைய வழி வரனுமின்னா
ஒரு நல்ல வாழ்க்க
அமைய வேண்டும்
நம்ம வாழும் வாழ்க்கையிதே
அர்த்தமற்று போய் கிடக்க...

இவனுக்கு வாழ்க்கையொன்ன
எங்க போயி தேடுவது
என்று எண்ணும் நேரம் நேரம்
பாப்பாத்தி நினைவில் வாரா...

(சொல்ல மறந்த கதை
இன்னும் சொல்லப்படும்)

எம்.ராமதாஸ்
இறம்பொடை

தமிழன் தொடர்கதை

# அசுரன்

மணிகண்டன் அஞ்சனா தன் தாயைப் பற்றி சொல்லப்போகும் விடயத்தில் ஏதாவது துப்புக் கிடைத்தாலே போதும் என்று மனதுக்குள் நினைத்தவாறு அவள் சொல்லப்போகும் விடயத்தைக் கவனமாக செவிமடுத்தான். அவள் சற்று நேரம் எதுவும் பேசவில்லை. கண்களை மூடி நெற்றியைத் தடவிக் கொண்டாள்.

“வந்து, ரயில் சம்பவம் நடக்குறதுக்கு ரெண்டு மாசத்துக்கு முன்னால விடாம ஒரு வாரமா மழை கொட்டித் தீர்த்திடுச்சி. இங்கே தோட்டத்துல நிறைய இடங்கள்ல மண்சரிவும் வெள்ளப்பெருக்குமா இருந்திச்சி. வெளியில தலைகாட்ட முடியாதபடி காற்று வேற. அம்மாவுக்குக் கோயிலுக்குப் போக முடியலைன்னு ரொம்பவும் சோகத்தோட இருந்ததை நானும் பார்த்தேன். அப்புறம் ஒரு மாதிரி மழை நிற்கவும் மாலை நேரம் 6 மணி போல் பண்பரசி சொல்லியும் கேட்காம கோயிலுக்குப் போயிட்டாங்களாம். போய் இருட்டியும் ரொம்ப நேரம் வராததால பண்பரசி குடையோட முனிசாமி கோயிலுக்குப் போனா.
அங்க அம்மா பேயறஞ்ச மாதிரி கோயில் உள்ளுக்கு உட்கார்ந்திருந்தாங்களாம்.
பேசினா பேசலையாம்.
எதையோ கண்டு பயந்த மாதிரி இருந்தாங்களாம். பண்பரசி மேற்கொண்டு எதுவும் பேசாம அவங்களை வீட்டுக்குக் கூட்டிட்டு வந்தாளாம். அவங்க சாப்பாடு வேணாம்னு சொல்லி படுத்துட்டாங்களாம். இரவு 12 மணியிருக்குமாம். நல்ல தூக்கத்துல அம்மா பக்கத்துல படுத்திருந்த பண்பரசி திடீர்னு முழிச்சிட்டாளாம். அப்போ அம்மா கட்டில்ல எழும்பி உட்கார்ந்துக்கிட்டு எதையோ உற்றுப் பார்த்துக்கிட்டிருந்தாங்களாம். பண்பரசி தோளைத் தட்டவும் திடுக்கிட்டுப் போய் பண்பரசியைப் பாத்தாங்களாம்.”

“பண்பரசி மகளே... நாங்க ஏமாந்திட்டோம்டி... நடக்கக் கூடாதது நடந்து இனி என்ன நடக்குமோன்னு பயமா இருக்குடி... நீ கொஞ்சம் கவனமாயிருன்னு உளற ஆரம்பிச்சிட்டாங்களாம். அதுக்கப்புறம் ரெண்டு நாள் கழிச்சி ஸ்கூல் விட்டு வீட்டுக்கு வந்தா அம்மா வீட்ல இல்லையாம். அவளுக்கு பயம் வந்திருச்சாம். அக்கம் பக்கத்துல விசாரிச்சப்ப அவங்க 9 மணிக்கே பயணப்பட்டுப் போயிட்டாங்களாம். பண்பரசி வந்தா கொடுக்க சொல்லி சாவியை முன் வீட்டுல குடுத்திருந்தாங்களாம். பண்பரசிக்கு என்ன செய்யிறதுன்னு தெரியாம கொஞ்சநேரம் காத்திருந்து பார்த்தாளாம். மணி 6 ஆயிடுச்சேன்னு பதறிப்போய் உடனடியா தேடிப் போனாளாம். கடைசியில பார்த்தா அம்மா கோயில் வாசல்ல பித்துப்

**அத்தியாயம்**



பிடிச்ச மாதிரி உட்கார்ந்திருந்தாங்களாம். பண்பரசி பேசினா பேசலையாம். எங்கேயோ வெறிச்சிப் பார்த்துக்கிட்டிருக்க வாய் முணுமுணுத்துக்கிட்டிருந்திச்சாம். 5 நிமிஷத்துக்கப்புறம்தான் சுயநினைவுக்கு வந்தாங்களாம். பண்பரசியோட கையைப் பிடிச்சிக்கிட்டு தேம்பித்தேம்பி அழுதாங்களாம்.”

“பண்பரசி... அவனைத் தேடி டவுனுக்குப் போனேன். ஆவேசத்தோட கேள்வி கேட்டேன். ஆனா, அவன் கொஞ்சமும் பயப்படலை. இனிமே இந்தப் பக்கம் வந்தா நாயை அடிக்கிற மாதிரி அடிச்சி ஆத்துல தூக்கி வீசிடுவேன். அப்புறம் உடம்பு கூட யாருக்கும் கிடைக்காதுன்னு வாய்க்கு வந்தபடியெல்லாம் திட்டினானாம். அப்போ பண்பரசி துருவித் துருவிக் கேட்டாளாம். யாரு அதுன்னு... ஆனா, அவங்க அதுக்கு

**பாலா சங்குப்பிள்ளை**

எதுவும் பதில் சொல்லலையாம். ரயில் விபத்து நடக்கிறவரைக்கும் அவங்க அதே மனநிலையிலதான் இருந்தாங்களாம். காலையிலேயே கோயிலுக்குப் போனா பண்பரசி கூட்டிட்டு வரும்வரைக்கும் அங்கேதான் இருப்பாங்களாம்.”

அஞ்சனா சொல்லி முடிக்க மணிகண்டன் சிந்தனையுடன் உள்ளே தன் அறைக்குள் சென்றான். கட்டிலில் மல்லாக்கப் படுத்தவாறு சற்று நேரம் விட்டத்தையே பார்த்துக் கொண்டிருந்தான். பின் மெதுவாக கண்களை மூடியவாறு இதுவரை நடந்தவற்றை அசைபோடத் தொடங்கினான்.

ஏதோ ஒரு பொருளுக்காக ஒரு கூட்டம் அலைகிறது. எதிலுமே சம்பந்தப்படாத அவனை மையப்படுத்தி ஆட்டத்தைத் தொடங்கியதுடன், அதற்குப் பகடைக்காயாக பண்பரசியை உபயோகப்படுத்துகின்றார்கள். ஆனால், யார் அவர்கள்? என்ன பொருள்? சாதாரண தங்க யானைக்காகவா இந்த விளையாட்டு? அப்படியானால் அவர்களால் ‘பொருள்’ என்று அடையாளப் படுத்தப்படும் தங்க யானையில் ஏதோ மர்மம் இருக்க வேண்டும். அதுசரி... அம்மா இறப்பதற்கு முன்னதாக அவர்களுக்கு நடந்தது என்ன..? அவர்கள் முனிசாமி கோயிலில் யாரைப் பார்த்தார்கள்..? டவுனில் யாரை சந்தித்தார்கள்..? அவர்களை விபத்து மரணம் என்பதற்கப்பால் வேண்டுமென்று கீழே தள்ளிவிட்டிருப்பார்களாக இருப்பின் எதற்காக யார் செய்தார்கள்..? இனி அவன் என்ன செய்ய வேண்டும்..? நாளை இரவு 10 மணிவரைதான் கால அவகாசம் இருக்கிறது. அதற்குள் என்ன செய்ய முடியும்..? எங்கிருந்து ஆரம்பிப்பது..? எப்படி பண்பரசியை மீட்பது..? அவனிடம் தங்க யானையை பார்த்திபன் கொடுப்பதைப் போல் புகைப்படம் இருக்கின்றது. அது எப்படி சாத்தியம்..?

அவன் வெகுநேரம் சிந்தித்தான். ஆனால், எதுவும் புரியவில்லை. தலை வெடிப்பதைப்போல் வலித்தது.

அப்போது அஞ்சனா சுகுமாரைப் பற்றி சொன்னது ஞாபகம் வரவே சட்டென கட்டிலை விட்டு எழுந்தான். அந்த விசிட்டிங் கார்ட் சட்டைப் பையில் இருந்தது. அவன் அதை எடுத்தான். அதில் சுகுமார், உதவி கட்டட ஒப்பந்தக்காரர் என எழுதப்பட்டிருந்தது. பொறியியல் பட்டப்படிப்பை படித்ததற்கான தகவலும் அதிலிருந்தது. யார் இந்த சுகுமார்..? எதற்காக அவனை அவசரமாகப் பார்க்க வந்தான்..?

மணிகண்டன் அவன் கைபேசிக்கு இணைப்பை ஏற்படுத்தினான்.

“ஹலோ.. நான் மணிகண்டன் பேசுறேன்..”

“நீங்களா..? நான் சுகுமார்தான் பேசுறேன். நீங்க ஒரு பெரிய ஆபத்துல சிக்கியிருக்கீங்க..”

**(தொடரும்)**



# தனுஷ்கவுக்கு அவுஸ்திரேலியாவில் நடந்தது என்ன? வெளிச்சத்திற்கு வந்த உண்மைகள்!



இலங்கைக் கிரிக்கெட் அணியின் முக்கிய இளம் ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான தனுஷ்க குணதிலக்க பாலியல் குற்றச்சாட்டில் சிக்கியுள்ளமை நாம் அனைவரும் அறிந்த விடயம். கடந்த சில நாட்களாக இலங்கையில் அரசியல் பேசப்படுகிறதோ இல்லையோ, தனுஷ்க குணதிலக்கவின் விவகாரம்தான் பேசுபொருளாக அமைந்திருந்தது. ஒரு சர்வதேச கிரிக்கெட் வீரர் என்ற அடிப்படையில் சர்வதேசமே தனுஷ்க குணதிலக்க மீது கவனம் செலுத்தியது.

**தனுஷ்கவின் கிரிக்கெட் பயணம்**

இலங்கை கிரிக்கெட் அணியில் கடந்த 2015ஆம் ஆண்டு அறிமுகமான தனுஷ்க குணதிலக்க இதுவரையிலான 7 ஆண்டு காலப்பகுதியில் 8 டெஸ்ட், 47 ஒருநாள் மற்றும் 46 இருபதுக்கு 20 ஆட்டங்களில் இலங்கை அணியை பிரதிநிதித்துவப்படுத்தியுள்ளார்.

**ஆஸி.யில் என்ன நடந்தது?**

எட்டாவது ஐ.சி.சி. இருபதுக்கு 20 உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடர் கடந்த மாதம் 16ஆம் திகதி அவுஸ்திரேலியாவில் ஆரம்பமானது. இலங்கை அணி முதல் சுற்றில் விளையாடி அடுத்து சுப்பர் 12 சுற்றுக்குத் தகுதிபெற்று அரையிறுதிக்குத் தகுதிபெறாமல் வெளியேறியது. குறித்த உலகக்கிண்ணத் தொடருக்கான இலங்கை அணியில் இடம் பெற்ற வீரர்களுள் ஒருவர் தான் இடதுகை ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான தனுஷ்க குணதிலக்க.

கடந்த மாதம் 16ஆம் திகதி நமீபிய அணியுடன் நடைபெற்ற உலகக்கிண்ண தொடரின் முதல் போட்டியில் 31 வயதான துடுப்பாட்ட வீரர் தனுஷ்க குணதிலக்க களமிறங்கினார். அந்த ஆட்டத்தில் அவர் வந்த வேகத்திலேயே ஆட்டமிழந்து வெளியேறினார். குறித்த போட்டியின் பின்னர் தனுஷ்க குணதிலக்கவுக்கு உபாதை ஏற்பட்டது. அதனைத் தொடர்ந்து அவர் உலகக்கிண்ணத் தொடருக்கான இலங்கை அணியின் குழாமில் இருந்து வெளியேற்றப்பட்டார்.

ஆனாலும், அவர் தொடர்ந்து அவுஸ்திரேலியாவிலேயே இலங்கைக் கிரிக்கெட் அணியினருடன் தங்கியிருந்தார். இலங்கைக் கிரிக்கெட் அணி கடந்த 5ஆம் திகதி சிட்னி கிரிக்கெட் மைதானத்தில் வைத்து இங்கிலாந்து அணியுடன் மோதியது. அந்தப் போட்டியுடன் இலங்கை அணியின் அனைத்து போட்டிகளும் நிறைவுக்கு வந்தன. இறுதியாக தனுஷ்க குணதிலக்க சிட்னியில் அமைந்துள்ள ஹோட்டலில் தங்கியிருந்தார். அங்கு தங்கியிருந்த அவர் டேட்டிங் அப் மூலம் 29 வயதான அவுஸ்திரேலிய பெண் ஒருவருடன் தொடர்பை ஏற்படுத்தியுள்ளார். கடந்த 29ஆம் திகதி முதல் இருவரும் அதில் உரையாடி வந்தனர்.

**2ஆம் திகதி பாரில் சந்திப்பு**

கடந்த 2ஆம் திகதி இரவு அவுஸ்திரேலியாவின் சிட்னி நகரிலுள்ள ஒரு பாரில் இருவரும் முதன்முறையாக நேரில் சந்தித்துக்கொண்டனர். இந்த சந்திப்பின் பின்னர் சிட்னியின் ரோஸ் பே பகுதியில் உள்ள இளம்பெண்ணின் வீட்டுக்கு செல்வது என்றும் அங்கு பாலியல் உறவில் ஈடுபடுவது என்றும் இருவரும் ஒருமனதாக முடிவு செய்தனர்.

**வெளி உலகுக்கு பூதாகரமான சம்பவம்**

அதனடிப்படையில் அந்த வீட்டுக்கு சென்றனர். அங்கு படுக்கையறையில் இருவருக்குமிடையே திடீரென மோதல் வெடித்தது. ஆணுறை அணிந்து பாலியல் உறவில் ஈடுபடுமாறு இளம்பெண் வற்புறுத்தினார். ஆனால், அதற்கு குணதிலக்க மறுத்துள்ளார். இதனால் வாக்குவாதம் எழுந்தது. ஒரு கட்டத்தில் குணதிலக்க குறித்த பெண்ணின் கழுத்தை நெரித்தார். பாலியல் பலாத்காரம் செய்தார். அதைத்தொடர்ந்து, இளம்பெண் அளித்த குற்றச்சாட்டின் பேரில் குணதிலக்க கைதுசெய்யப்பட்டார்.

**14 ஆண்டுகள் சிறை**

கைதுசெய்யப்பட்ட தனுஷ்க குணதிலக்க குற்றவாளியாக அடையாளம் காணப்பட்டால் அவருக்கு 14 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை விதிக்கப்படலாம் என அவுஸ்திரேலிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

**சிட்னி பொலிஸாரின் அறிக்கை**

சிட்னி பொலிஸாரின் அறிக்கையின்படி பிரிஸ்பேனில் தன்னை சந்திக்குமாறு தனுஷ்க கூறியதாகவும், அவர் மறுத்துவிட்டதாகவும், அதனால் அந்தப் பெண்ணை வீடியோ அழைப்புகள் மூலம் தொடர்பு கொண்டதாகவும் கூறப்படுகிறது. எனினும், பின்னர் இருவரும் சிட்னியில் சந்திப்பதற்கு ஒப்புக் கொண்டனர். அதன்படி, கடந்த 2ஆம் திகதி இரவு சுமார் 8.20 மணியளவில் சிட்னியில் உள்ள சர்குலர் குவேயில் உள்ள ஓபரா உணவகத்தில் இருவரும் சந்தித்துள்ளனர்.

இருவரும் உணவகத்தில் சுமார் அரை மணிநேரம் செலவிட்டதுடன், ஒன்றாக மது அருந்தியுள்ளனர். பின்னர் பீட்சா உணவகம் ஒன்றிற்குச் சென்று இரவு உணவு அருந்திவிட்டு, குறித்த பெண்ணின் வீட்டிற்கு செல்வதற்காக பயணிகள் கப்பலில் ஏறுவதற்காக கப்பலுக்குச் சென்றதாக குறித்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. பயணிகள் கப்பல் வரும்வரை காத்திருந்து கப்பலில் தனுஷ்க வலுக்கட்டாயமாக முத்தமிட்டதாக அவர் கூறியுள்ளார். வீட்டிற்கு வந்தவுடனேயே தனுஷ்க அவருடன் உடலுறவில் ஈடுபட்டதாகக் கூறப்படுகிறது. அவசரப்பட வேண்டாம் என்று தனுஷ்கவிடம் கேட்ட போதும் தனுஷ்க அதனை மறுத்துவிட்டதாக சம்பந்தப்பட்ட பெண் கூறியுள்ளார்.

எனினும், தனுஷ்க தன்னுடன் பாதுகாப்பற்ற முறையில் உடலுறவு கொண்டதாகவும் அந்தப் பெண் குறிப்பிட்டுள்ளார். தனுஷ்கவின் நடத்தையால் தாம் கடும் உடல் உபாதைகளுக்கு ஆளானதாக அந்தப் பெண் மேலும் தெரிவித்துள்ளார். அங்கு கடும் அதிர்ச்சிக்கு ஆளானதாகவும், கடும் குளிரில் சிக்கித் தவித்ததாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தனுஷ்க நள்ளிரவு 1 மணியளவில் வாடகை வாகனத்தை பெற்றுக்கொண்டு தனது வீட்டை விட்டு வெளியேறியதாகவும், மறுநாள் காலை எழுந்ததும் உடல் அசௌகரியம் காரணமாக வைத்திய ஆலோசனையை நாடியதாகவும் இந்த பெண் கூறியதாக கூறப்படுகிறது. சிட்னியிலுள்ள பொண்டி பொலிஸ் நிலையத்திற்குச் சென்று வாக்குமூலம் அளித்ததாகவும், தனுஷ்கவுடன் பரிமாறப்பட்ட செய்திகள், தொலைபேசி உரையாடல்கள் மற்றும் புகைப்படங்கள் குறித்த தகவல்களை அளித்ததாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

**பரிசோதனைகளை மேற்கொண்ட பெண்**

சம்பவத்துடன் தொடர்புபட்ட பெண் சிட்னியிலுள்ள ரோயல் பிரின்ஸ் எல்ஃபிரட் வைத்தியசாலைக்குச் சென்று பாலியல் வன்கொடுமைப் பரிசோதனை மற்றும் மூளை ஸ்கேன் செய்து மூச்சுத் திணறலால் ஏதேனும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதா என்பதை சரிபார்த்துள்ளார்.

**உடலுறவை ஒப்புக்கொண்ட தனுஷ்க**

கடந்த புதன்கிழமை சிட்னி நீதிமன்றத்தில் தொழில்நுட்பம் மூலம் ஆஜரான தனுஷ்க, இந்தப் பெண்ணுடன் உடலுறவு கொண்டதை மறுக்கவில்லை. எவ்வாறாயினும்இ தான் வன்முறையாக நடந்து கொண்டதாக எழுந்த குற்றச்சாட்டை அவர் மறுத்தார், பாலியல் செயல்முறைக்கு அந்த பெண்ணுக்கு சம்மதமில்லை என்பதை மறுப்பதாகவும் கூறியுள்ளார்.

**இரு மாதங்களுக்கு தடுப்புக் காவல்**

தனுஷ்க குணதிலக்க சார்பில் கடந்த திங்கட்கிழமை மற்றும் புதன்கிழமை சமர்ப்பிக்கப்பட்ட பிணைக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டதுடன், அடுத்த வருடம் ஜனவரி 12ஆம் திகதி மீண்டும் வழக்கு விசாரணை நடத்தப்படவுள்ளது. அதன்படி, அவர் அடுத்த 2 மாதங்களுக்கு காவலில் இருக்க வேண்டும் என அவுஸ்திரேலிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. ஆனால், அதற்கு முன்னதாகவே தனுஷ்கவின் சட்டத்தரணிகள் பிணை பெறுவதற்காக மற்றுமொரு பிணை விண்ணப்பத்தை சமர்ப்பிக்கத் தயாராகி வருவதாக கூறப்படுகிறது.

**தனுஷ்க வழக்கில் வெற்றிபெறுவார்**

இதேவேளை, முறைப்பாட்டாளரின் ஆவணங்களில் உள்ள முரண்பாடுகள் மற்றும் பல காரணிகளை கருத்திற்கொண்டு, தனுஷ்க குணதிலக்க இந்த வழக்கில் வெற்றி பெறுவார் என நம்புவதாக கிரிக்கெட் நிறுவனத்தின் முன்னாள் சட்டத்துறைத் தலைவர் சானக சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

**கிரிக்கெட்டிலிருந்து இடைநீக்கம்**

தனுஷ்க குணதிலக்கவை அனைத்து விதமான கிரிக்கெட் போட்டிகளிலிருந்தும் இடைநீக்கம் செய்ய இலங்கைக் கிரிக்கெட் நிறுவனம் கடந்த திங்கட்கிழமை அதிரடி உத்தரவைப் பிறப்பித்தது. கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற கிரிக்கெட் செயற்குழுக் கூட்டத்தில் இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

**விசாரணைக்கு மூவரடங்கிய குழு**

தனுஷ்க குணதிலக்கவை விசாரிக்க மூவரடங்கிய குழுவென்றை இலங்கை கிரிக்கெட் சபை கடந்த செவ்வாய்க்கிழமை நியமித்தது. நீதியரசர் சிசிர ரத்நாயக்க (ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதிபதி), சட்டத்தரணி நிரோஷன பெரேரா மற்றும் சட்டத்தரணி அசேல ரேகாவா ஆகியோர் அடங்கிய 3 பேர் கொண்ட விசாரணைக் குழுவொன்று நியமிக்கப்பட்டது.

**குணதிலக்கவுக்கு முதன்முறையல்ல**

தனுஷ்க குணதிலக்க சர்ச்சையில் சிக்குவது இது முதன்முறையல்ல. கடந்த சில ஆண்டுகளில் அவர் 4 முறை குற்றச்சாட்டுகளில் சிக்கியுள்ளார். கடந்த ஆண்டு இங்கிலாந்து சுற்றுப்பயணத்தின்போது சக வீரர்களுடன் சேர்ந்து, கொரோனா தடுப்பு பாதுகாப்பு வளையத்தை மீறி வெளியே சென்று புகைப்பிடித்த குற்றச்சாட்டில் (குசல் மெண்டிஸ், நிரோஷன் டிக்வெல்ல ஆகியோருடன்) சிக்கி ஓராண்டுத் தடைக்குள்ளாகி மீண்டும் இலங்கை அணியில் இடம்பிடித்தார்.

மற்றொரு சமயம், இலங்கையிலுள்ள ஓர் இரவு விடுதிக்கு குணதிலக்க சென்று அங்கு ஒரு பெண்ணிடம் அத்துமீற முயன்றபோது அவரது கன்னத்தில் அப்பெண் அறைந்து விட்டார். கடந்த 2017ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம், ஒரு நள்ளிரவு விருந்தில் கலந்துகொண்டதால், கிரிக்கெட் பயிற்சியை அவர் தவறவிட்டார். அதற்காக அவருக்கு 6 ஒருநாள் போட்டிகளில் விளையாடத்தடை விதிக்கப்பட்டது.

அது நடந்த சில மாதங்களில், இலங்கையிலுள்ள ஹோட்டல் அறையில் ஒரு நோர்வே பெண்ணை அவருடைய நண்பர் கற்பழித்த புகாரில் இவரது பெயரும் அடிபட்டது. இந்த விவகாரத்தில் அவருக்கு இலங்கை கிரிக்கெட் சபை 6 மாதம் தடைவிதித்தது.

ஏ.அகீல் சிஹாப்

# பாடசாலை வலைப்பந்தாட்ட சம்பியன்ஷிப் தொடரின் இறுதி நாள் இன்று

இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான வலைப்பந்தாட்ட சம்பியன்ஷிப் தொடர் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை வென்னப்புவ ஆல்பர்ட் பீரிஸ் மைதானத்தில் ஆரம்பமான நிலையில், இன்று ஞாயிற்றுக்கிழமை அதன் இறுதிநாள் போட்டிகள் நடைபெறுகின்றன.



கல்வியமைச்சின் வழிகாட்டுதலின் கீழ் இலங்கை பாடசாலைகள் வலைப்பந்தாட்ட சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள குறித்த போட்டிகள் அனைத்தும் 13, 15, 17 மற்றும் 19 வயதுக்குட்பட்ட நான்கு வயதுப் பிரிவுகளில் ஏ மற்றும் பி என இரண்டு பிரிவுகளாக நடத்தப்படுகின்றன.

வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஆரம்ப நிகழ்வில் நெஸ்லே லங்கா பி.எல்.சி. நிறுவனத்தின் முகாமையாளர் சஞ்சீவ விக்கிரமசிங்க, நெஸ்லே லங்கா பி.எல்.சி. நிறுவனத்தின் உபதலைவர் ருவன் வெலிக்கல, நிறுவனத்தின் பெருநிறுவன விவகாரங்கள் மற்றும் ஒழுங்குமுறைக்கான உப தலைவர் பந்துல ஈகோடகே மற்றும் நெஸ்லே லங்கா பி.எல்.சி. நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் ஜேசன் அவன்சீனா ஆகியோர் கலந்துகொண்டனர். குறித்த போட்டிகளுக்கு நெஸ்லே மைலோ 29ஆவது ஆண்டாக அனுசரணை வழங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.





# 13 ஆண்டுகளின் பின்னர் பாகிஸ்தானா? 12 ஆண்டுகளின் பின்னர் இங்கிலாந்தா?

## எட்டாவது உலகக்கிண்ண சம்பியனை தீர்மானிக்கும் இறுதியாட்டம் இன்று

(ஏ. அகீல் சிஹாப்)

எட்டாவது ஐ.சி.சி. இருபதுக்கு 20 உலகக்கிண்ணக் கிரிக்கெட் தொடரின் சம்பியனை தீர்மானிக்கின்ற மாபெரும் இறுதிப்போட்டி இன்றைய தினம் மெல்பேர்ன் கிரிக்கெட் மைதானத்தில் இலங்கை நேரப்படி பிற்பகல் 1:30 மணிக்கு இங்கிலாந்து மற்றும் பாகிஸ்தான் அணிகளுக்கிடையில் ஆரம்பமாகிறது.




இதற்கு முன்னர் இரண்டு அணிகளும் தலா ஒரு தடவை சம்பியன் பட்டத்தை கைப்பற்றிய அணிகளாகும். பாகிஸ்தான் 2009ஆம் ஆண்டும், அதனைத் தொடர்ந்து 2010ஆம் ஆண்டு இங்கிலாந்து அணியும் கைப்பற்றியது. அந்த வகையில் இன்றைய தினம் நடைபெறுகின்ற இறுதிப் போட்டியில் சம்பியன் பட்டத்தை கைப்பற்றும் அணி இரண்டாவது தடவையாக இருபதுக்கு 20 உலகக் கிண்ணத்தை கைப்பற்றும்.

மேற்கிந்திய தீவுகள் கடந்த 2012 மற்றும் 2016ஆம் ஆண்டுகளில் கிண்ணத்தை கைப்பற்றியதையடுத்து இங்கிலாந்து அல்லது பாகிஸ்தான், இவற்றில் ஏதேனும் ஓர் அணி இரண்டாவது அணியாக இரு உலகக்கிண்ணங்களைக் கைப்பற்றவுள்ளது. பாகிஸ்தான் சம்பியன் கிண்ணத்தைக் கைப்பற்றினால் 13 ஆண்டுகளின் பின்னர் மீண்டும் அவ்வணியின் கனவு நனவாகும். மாறாக இங்கிலாந்து அணி உலகக் கிண்ணத்தை கைப்பற்றினால் 12 ஆண்டுகளின் பின்னர் அவ்வணியின் கனவு நனவாகும்.

இங்கிலாந்து மற்றும் பாகிஸ்தான் ஆகிய அணிகளுக்கிடையில் இதுவரையில் நடைபெற்றுள்ள இருபதுக்கு 20 போட்டிகளில் 17 போட்டிகளில் இங்கிலாந்து அணி வெற்றி பெற்று ஆதிக்கம் செலுத்துகிறது. பாகிஸ்தான் அணி 9 போட்டிகளில் மாத்திரம் வெற்றி பெற்றிருக்கிறது.




இரு அணிகளுக்கிடையிலான இருபதுக்கு 20 உலகக்கிண்ண மோதலில் இரண்டு போட்டிகளிலும் இங்கிலாந்து அணியே வெற்றி பெற்றிருக்கிறது. கடந்த 2010ஆம் ஆண்டின் பின்னர் முதன்முறையாக இரு அணிகளும் இருபதுக்கு 20 உலகக்கிண்ணத்தில் நேருக்கு நேர் சந்திக்கின்றன. கடந்த 1992ஆம் ஆண்டு ஐ.சி.சி. ஒருநாள் உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரின் இறுதிப்போட்டியில் இங்கிலாந்து மற்றும் பாகிஸ்தான் அணிகள் மோதியிருந்தன. இதில் பாகிஸ்தான் அணி வெற்றி பெற்று முதன்முறையாக உலகக்கிண்ணத்தை கைப்பற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. எனவே, அந்த சம்பவம் மீண்டும் நடக்குமா என்பதை இன்று பொறுத்திருந்து பார்க்கலாம்.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7